


28வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com




நதி: 28 பாலம்: 18 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 15, 2018

# ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் தெரிவு!

ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோட் ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 47இல் இருந்து 25ஆகக் குறைப்பதாக 2018 ஓகஸ்ட் 14இல் சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றியிருந்தார். இதன்மூலம் நான்கு வருடங்களில் $25.5 மில்லியன் சேமிக்கப்படும் என அறிவித்தார்.




தேர்தல் நடைபெறவுள்ள வேளையில் மற்றும் வேட்பாளர்களது பிரசாரங்கள் நடை-பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இவ்வாறு தேர்தல் தொகுதிகளைக் குறைப்பது வேட்பாளர்களதும் வாக்காளர் களதும் அரசியல் சட்ட உரிமையை மீறும் செயல் எனக்கூறி ஒன்ராரியோ முதல்வர் இவ்வாறு 47 உறுப்பினர்களை 25ஆகக் குறைத்தது செல்லாது எனத் தீர்ப்பளிக்கு மாறு ரொறன்ரோ நகரசபை 2018 ஓகஸ்ட் 31இல் ஒன்ராரியோ மேல் நீதிமன்றில் (Superior Court) வழக்குத் தொடுத்திருந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி Edward Belobaba தனது தீர்ப்பை 2018 செப்ரெம்பர் 10இல் வழங்கினார்.

அவர் தனது தீர்ப்பில் ஒன்ராரியோ அரசின் தீர்மானம் தேர்தல் பிரசார காலத்திற்கு நடுவே அமலாக்கப்பட்டது வேட்பாளர்கள தும் வாக்காளர்களதும் அரசியல் சட்ட உரிமையை மீறும் செயல் என்றும், இவ்வாறு உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதன் மூலம் ஒவ்வொரு வட்டாரங்களி லும் உள்ள மக்கள் எண்ணிக்கை இரு மடங்காக்கப்படுவது மக்களின் பிரதிநிதித்து வத்தை வெளிப்படுத்தும் உரிமையைப் பாதிக்கிறது என்று கூறி ஒன்ராரியோ அரசின் ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் கள் எண்ணிக்கையை குறைப்பதற்கு எதிராக தனது தீர்ப்பை வழங்கினார். அவர் மேலும் தெரிவிக்கையில் இச்சட்டமூலம் அமலாக்கிய காலநேரம் தவறானது, அரசு வேண்டும் எனில் இவ்வாறு ஒரு சட்ட மூலத்தை பின்னர் ஒரு தகுந்த வேளையில் கொண்டு வரலாம் என்று கூறியிருந்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த முதல்வர், "நான் மக்களால் தெரிவு செய்யப் பட்டவன், ஆனால் நீதிபதியோ ஒருவரால் (முன்னாள் லிபரல் அரசின் பிரதமர் Paul Martin)இனால் நியமிக்கப்பட்டவர். எவ்வாறு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசின் முடிவை தனி ஒருவரால் நியமிக்கப்பட்ட நீதிபதி தடைசெய்ய முடியும். இது எனக்கு மிகுந்த கரிசனையைத் தருகிறது என்றார். பின்னர் ஒன்ராரியோ முதல்வர் தான் ஒன்ராரியோ மாகாண சட்டமன்றத்தை 2018

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

## நகரசபைத் தேர்தல்களில் தரவரிசை வாக்குப்பதிவு?

ஒன்ராரியோ மாகாணத்தில் இதற்கு முன் பிருந்த லிபரல் அரசு 2016ஆம் ஆண்டில் நகரசபைத் தேர்தல் சட்ட மூலத்திற்குக் கொண்டுவந்த திருத்தத்தின் மூலம் ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள நகர-சபைகளுக்குத் தமது நகரசபை முதல்வர் மற்றும் நகரசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் முறையை 2018ஆம் ஆண்டிலிருந்து FPTP (First Past The Post) தேர்தல் முறைமூலமோ அல்லது தரவரிசை வாக்குப்பதிவு (Ranked Voting) முறை மூலமோ தேர்தல் நடத்தும் உரிமையை வழங்கியது.

2018 ஒக்ரோபரில் நடைபெற உள்ள ஒன்ராரியோ மாகாண நகரசபை தேர்தல்களை இலண்டன் நகரசபையைத் தவிர ஏனைய நகரசபைகள் வழக்கமான FPTP முறைமூலமே தேர்தலை நடத்தவுள்ளன. இலண்டன் நகர-சபை மட்டுமே தனது நகரசபைத் தலைவரையும் மற்றும் நகரசபை உறுப்பினர் களையும் புதிய தரவரிசை வாக்குப்பதிவு தேர்தல் முறைமூலம் தெரிவுசெய்ய உள்ளது.

கேம்பிரிஜ் மற்றும் கிங்ஸ்ரன் நகரசபைகள் இம்முறை 2018 ஒக்ரோபர் 22இல் நடைபெற

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)
































Thas Real Estate Team
Expertice + Knowledge + Power
Jalal Sayah
Sales Representative
416-569-7570
remax4jalal@gmail.com
16 Years of Business Experience
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
www.soldbythas.com
SOLD OR WE'LL BUY IT!
வீடு வாங்குவதற்கு பணம் போதவில்லயா? உடன் அழையுங்கள்
No Maintenance Fee
5% Down No Mortgage Broker Fee
Oshawa Townhouse BR:2 WR:2 2 Years Old. Near Uoit & 407
5% Down No Mortgage Broker Fee
Scarborough BR:2+1 WR: 3 Over 1000 SF, Maint. Fee $330
5% Down No Mortgage Broker Fee
Scarborough, BR: 3 WR:2 Fin. Bsmt. 1200+ SF Maint. Fee $373. Water Incl.
Seller Says Bring any Offer
Scarborough Detached BR:4+2 WR:3 Fin. Basement
$129,900
Buy with $30,000 Down
Build your dream Home in Lindsay 66x422 FT
$1,399,000
KFC with Property
Newly Renovated KFC with Property (87 x 214 Ft) 40 Years in Same Location Reduced Price for Quick Sale. Stable Revenue
$299,900
Franchise Oppertunity
PIZZA NOVA Franchise, Near Busy Mall, Walmart & Canadian Tire. Newly Renovated. Top of the line Equipments. Huge Potential
Open House Tour to Lindsay From Our Office.
Limited Spaces, Book Early
Houses from $299,000 in Lindsay Detached Bungalow & 2 Storey
5% Down No Mortgage Broker Fee
$457,000
Markham BR:2 WR:2, 900 SF Maint. Fee $282, Water Incl.
$451,800
5% Down No Mortgage Broker Fee
Scarborough BR:2 WR: 2 Maint. Fee $272. Water Incl.
INTEREST FREE RENOVATION LOAN


GURANTEED SOLD !
*Chance to Win Vacation Ticket
Williams Pway/ Mississauga Rd.
SOLD
4 Bed Rooms - Detached 2-Storey
Yonge St / Bloor St E
New Price Call
Condo - Apartment
Boyne St And Gray Ave -Simcoe
$759,999
Detached 2-Storey
Halton Hills Ontario
$9,500,000
Land Designated
Main St & Church -Halton Hills
SOLD
2-Storey - Semi Detached
Clarington Ontario
$350,000
Designated - Industrial
Brampton
Just Listed
$749,999
Detached 2-Storey
Richmond Hill Langstaff York
Just Listed
$920,000
Att/Row/Townhouse
1% CASH BACK
Ask For Details
REAL ESTATE
Big / Small
SOLD
MORTGAGE
Banks / Private
APPROVED
INSURANCE
Banks /Insurance Companies
ACTIVE
Ruban Lingam
Sales Representative
Call: 647-928-5626
www.rubanlingam.com
Ask for more details
RUBAN TEAM
HOMELIFE
HomeLife/Miracle Realty Ltd., Brokerage*
*Some conditions may apply
*Independently Owned & Operated



# அம்மா
## Amma Pawn Broker
## தங்கநகை அடைவு மாடம்



- ரொரன்றோவில் வர்த்தகத்துறையில் 25வது வருட வெள்ளி விழா காணும் நிறுவனம்
- உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
- 5 நிமிடங்களில் உங்கள் கையில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்.
- உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்

**1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)**

எவ்வளவு தொகையானாலும் மிக குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

அம்மா போல அம்மா பவுண் புறோக்கர்ஸ்

நம்பிக்கை | நாணயம் | உத்தரவாதம்

உங்கள் முதலை மாதாமாதம் கட்டிக்குறைக்கலாம் உங்கள் கட்டுப்பணத்தை வங்கியினூடாகவும் செலுத்தலாம்.

கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுசேவை

**416-757-0034, 416-994-3861**

105A - 2425 Eglinton Ave, E, Scarborough

ammapawnbroker@gmail.com

கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.

Shankar & Co. விற்கு அருகாமையில்




# HOMES, CONDOS, BUSINESS, COTTAGE, LAND

Days Rent from189/-
5 bm .5 acre lot



COTTAGE FOR SALE
$498K


Lake front 1 hr north



Richmond Hill

3 BEDROOM 4 WASHROOM HOUSE W/ IN LAW APARTMENT

Mavis /Britania



**Basement apt**

Excellent Large 4 Bedroom/4 Washroom LHeart Of Mississauga. Pot Lights Main Floor Laundry Room. Large Fenced Backyard.Newly Painted,Stone Patio,Main Fl Laundry, <>rent & Live Save On Deepest 134 feet

**PAT PUSHPAKANTHAN**
REAL ESTATE BROKER - HALL OF FAMER
416-894-1187

Century 21
AFFILIATE REALTY INC.
BROKERAGE*
OFFICE: 416-290-1200
1% Listing Commission*
Also Available

17 YEARS REAL ESTATE EXPERIENCE



PAT WILL BEAT ANY DEAL*!!

taunton/westney



3 bm luxury home with granite c.

Excellent Investment
INVESTMENT



Markham & 14 th ave. $238K.
Run your business

Scarborough



Large 4 bm bungalow with w/o Bsmnt 50 ft. x166 FT

1bm condo $1,650
RENT in Scarborough

2 bm condo$2,100
RENT in Scarborough

3 bm bungalow fr
For RENT $2300

# நாமும் நமது இல்லமும் - 518

## வீடு விற்கும்போது தவிர்க்க வேண்டியவை



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

வீடு, மனை விற்பது என்பது முக்கியமான ஒரு நிகழ்வு. ஆதன வியாபாரம், கடந்த வருடத்தின் முற்பகுதியுடன் ஒப்பிடும்போது, மந்தமாகக் காணப்படுகின்றது. ஆதனத்தை சந்தைக்கு கொண்டு வரும்போது நிதான-மாகவும், முறையாகவும், கவனமாகவும் சந்தைப்படுத்துவதால், சீக்கிரமாக ஆதனத்தை விற்பதுடன், நியாயமான விற்பனை விலையையும் பெறக்கூடியதாக இருக்கும்.

**கீழே காணப்படும் ஐந்து விடயங்களை மனதில் கொண்டு ஆதனத்தை சந்தைப்படுத்துவது சிறந்ததாகலாம்.**

**1. சந்தைப்படுத்தப்படும் விலை** (Asking Price of the property) - நியாயமானதாக இருத்தல் வேண்டும். விற்க இருக்கும் வீட்டிற்கு அண்மையில் குறிப்பிட்ட பகுதியில் ஏறக்குறைய ஒரே மாதிரியான ஆதனங்களின் விற்ற விலையை ஒப்பிட்டுப் பார்க்கலாம். அதிகமான விலையில் ஆதனத்தை சந்தைப்படுத்துவதால் விற்பதற்கு காலம் எடுக்கலாம். சிலவேளை விற்கப்படாமல் கூடப் போகலாம். ஆதனம் சந்தைப்படுத்தப்பட்டபின் போதியளவு கொள்வனவாளர்கள், ஆதனத்தை பார்வையிட இல்லையென்றால் சந்தைப்படுத்தப்பட்ட விலை அதிகம் என்பதே நியாயமான முடிவு. எனவே சந்தைப்படுத்தப்பட்ட விலையை மாற்றுவது / குறைப்பது நல்லது. ஆதனத்தை விற்பதற்கு உதவலாம்.

**2. தூய்மை** - சந்தைப்படுத்த முன்பாக, வீட்டை தூய்மைப்படுத்துதல் மிகமுக்கியம். மேலதிகமான, தேவையற்ற பொருட்களை அகற்றுதல் முக்கியமாகும். பொதுவான வாங்குபவர் துப்பரவான வீடுகளையே அதிகமாக விரும்புவர்.

3. ஆதனத்தை சந்தைப்படுத்தும்போது நியாயமாக நடந்து கொள்வது நல்லது. ஆதனத்தில் ஏதாவது பிழைகள் அல்லது திருத்தவேலைகள் இருந்தால் மறைப்பது சிறந்ததல்ல. உதாரணத்திற்கு ஒழுகும் கூரை (Leaky Roof), வெடிப்புள்ள நிலச்சுவர் (Cracked foundation) மற்றும் Moldy basement. இவற்றை மறைத்தாலும், வீட்டை பரிசோதிப்பவர் (Home Inspector) இலகுவாகக் கண்டுபிடிக்கலாம். வீட்டை ஆய்வு (Inspection) செய்யும்போது கண்டு பிடிக்காமல் போனாலும், வாங்கியவர்கள் வீட்டிற்கு சென்றபின் தெரியவரும். மறைத்ததிற்கான, சட்டரீதியான நெருக்கடிகளை சந்திக்க வேண்டிவரும் என்பதனை நினைவில் கொள்க.



4. பேச்சுவார்த்தைக்கு எப்பவும் சந்தர்ப்பம் கொடுப்பது நல்லது. பொதுவாக ஆரம்ப விலை குறைவாக இருந்தால் இரண்டு பகுதிகளும் விட்டுக் கொடுப்புடன் நியாயமாக நடந்தால் இலகுவாக இரு பகுதிக்குமான நியாயமான விலையை எட்ட முடியும். 2017இன் முதல் 4 மாதங்களின் விலையை இப்பொழுது விற்பவர்கள் எதிர் பார்க்கமுடியாது என்பதனையும் நினைவில் கொள்வது நல்லது. காலத்திற் கேற்ப எமது சிந்தனையை மாற்றுவது நல்லது.

5. பொதுவாக ஆதனத்தை தாமாக விற்க முற்படுபவர்கள் விற்பதற்கு (Private Sale) நீண்டகாலம் எடுக்கும். எனவே அனுபவமிக்க ஆதன முகவர்களினூடாக ஆதனத்தை விற்பது சிறந்ததாகலாம். ஆதனமுகவரின் இன்றையகாலத்தில் நீண்ட கால அனுபவம் உங்கள் ஆதனத்தை விற்பதற்கு உதவலாம். அத்துடன் பொதுவாக தனியாக (Privately) இன்றைய காலத்தில் வாங்குபவர்கள் கடன்பெறுவதில் நெருக்கடிகளை எதிர்கொள்கிறனர் என்பதனையும் ஆதனத்தை விற்பவர்கள் நினைவில் கொள்க.

அதிகமாக யாரையும் நம்பாதே
தேவைகள் முடிய
நீ தூக்கி எறியப்படுவாய்...



# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



**மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...**

WIN UP TO
**$100,000**
Everyone Who Funds A Mortgage With US
Ask How !
*See contest rules at www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

**"மோட்கேஜ் கிளினிக்**

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.



**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**

**ஜெ(Jey) இராசதுரை** MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2006 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232




# விக்னேஸ்வரனின் இறுதித் தெரிவு எதுவாக இருக்கும்?

**- ஆதித்தன் -**

வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்து முரண்பாடுகளை வளர்த்துச் சென்றதைத் தவிர வெறெதுவும் செய்யவில்லை என்கின்ற விமர்சனம் இன்று பலராலும் முன்வைக்கப்படுகின்ற நிலையில், அவர் நீதியரசர் என்ற நிலையிலிருந்தும் தன்னை தாழ்த்திக் கொண்டுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

வட மாகாணசபை உறுப்பினர் பா. டெனிஸ்வரன் தன்னை அமைச்சர் பதவி யிலிருந்து நீக்கியமை தவறானது எனத் தெரிவித்து தாக்கல் செய்த வழக்கில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால தீர்ப்பை நடைமுறைப்படுத் தாமை தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதில் எதிராளிகளாக விக்னேஸ்வரனுடன் அனந்தி சசிதரன், சிவனேசன் ஆகியோரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த வழக்கு கடந்த 7ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. மூவரும் பெயர் கூறி அழைக்கப்பட்ட போது அனந்தியும், சிவனேசனும் எழுந்து நின்றனர். ஆனால், விக்னேஸ்வரன் எழுந்து நிற்கவில்லை. இதனை அவதானித்த நீதியரசர் ஜனாக டி சில்வா "யாராக இருந்தாலும் நீதிக்கு முன் அனைவரும் சமனானவர்கள" என்று கூறினார். இதனையடுத்து மீண்டும் மூவரது பெயர்களும் அழைக்கப்பட்ட போது, விக்னேஸ்வரன் எழுந்து நின்றார். இந்த சம்பவம் விக்னேஸ்வரனின் ஆணவத் தன்மையினையே வெளிக்காட்டியுள்ளதாக பலரும் விமர்சிக்கின்றனர். இச்சம்பவத்தினால் நீதிமன்றில் அவருக்கு ஏற்பட்ட அவமானம் அவரது நீதியரசர் என்ற பெயருக்கு களங்கத்தையே ஏற்படுத்தியுள்ளது.

முன்னர் இடம்பெற்ற மற்றுமொரு வழக்கையும் இங்கு குறிப்பிடலாம். அதிகார வரைமுறை தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடுகளையடுத்து வடமாகாண பிரதம செயலாளராகவிருந்த விஜயலட்சுமி ரமேஸ் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். முதலமைச்சர் தனது பணிகளில் தலையிடு கிறார் எனவும், தன்னை பணியிலிருந்து நீக்க முயற்சி செய்கின்றார் எனவும் கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு குறித்து கருத்து வெளியிட்ட விக்னேஸ்வரன், 'இது நல்ல விடயம் இவ்வழக்கின் தீர்ப்பில் நான் யார் என்பது தெரியவரும்" என்று கருத்து வெளியிட்டிருந் தார். தான் முன்னாள் நீதியரசர் என்பதால் தனக்கு சட்டத் திறமை அதிகம் என்பதாகவே அவரது கருத்து வெளிக்காட்டியது.

இவ் வழக்கு விசாரணையின் முடிவில், மாகாண பிரதம செயலாளருக்கு உத்தர விடும் அதிகாரம் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கே உண்டு எனவும், அவ்வதிகாரம் மாகாண முதலமைச்சருக்கு இல்லை என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதுவும் விக்னேஸ்வரனின் சட்ட அறிவின் ஒரு சரிவாகவே பார்க்கப்பட்டது.

தான் சார்ந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பிற் குள்ளும், தான் முதலமைச்சராகவுள்ள வட மாகாண சபைக்குள்ளும் ஏற்படுகின்ற பிரச்சினைகளை அவர் சரியாக கையாள முடியாமல் விட்டதாலேயே இன்று அவர் மீதான முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. பெரிய விடயங்களைக் கூட தங்கள் ஆளுமையினால் சிறியதொன்றாக மாற்றி தீர்வு காண்கின்ற சிறந்த நிர்வாகிகள் இருக்கின்றனர். ஆனால், விக்னேஸ்வரன் சிறிய விடயங்கள் கூட பூதாகரமாக வளர்வதற்கு வழியேற்படுத்தியுள்ளார்.
வயதிலும் அறிவிலும் மூத்தவரான ஒரு நீதி யரசரான முதலமைச்சர் அவரை விடவும் வயதில் மூத்தவரும், நீண்ட கால அரசியல் வாதியுமான இரா.சம்பந்தனுடன் நேரடியாக கலந்துரையாடி கட்சிக்குள் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு தேடியிருக்கலாம். வட மாகாணசபையில் ஆளும் கட்சியினரே அவர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தும் நிலை ஏற்பட்டமைக்கும் அவரே பொறுப் பேற்க வேண்டும். என்னதான் அவர் தனது தரப்பு நியாயங்களைக் கூறினாலும், வட மாகாண அமைச்சர்களை பதவி நீக்கிய விடயத்தில் அவர் நடந்து கொண்ட முறையை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இன்றுள்ள இக்கட்டான நிலையில் தனது எதிர்காலம் தொடர்பில் அவர் வெளி யிட்டுள்ள நான்கு தெரிவுகளில் முதலாவது அல்லது நான்காவது தெரிவையே அவர் நடைமுறைப்படுத்த வேண்டும் என்கின்ற கருத்து பொதுவெளியில் முன்வைக்கப்பட்டு வருகின்றது.



அவர் வெளியிட்டுள்ள முதலாவது தெரிவு அரசியலில் இருந்து விலகி மீண்டும் ஓய்வு வாழ்வுக்குச் செல்வது, இரண்டாவது, புதிய கட்சியை ஆரம்பித்துப் போட்டியிடுவது, மூன்றாவது, மற்றுமொரு கட்சியில் இணைந்து போட்டியிடுவது, நான்காவது கட்சி அரசியலில் இருந்து விலகி, தமிழ் மக்கள் பேரவையின் ஊடாக, மக்கள் அரசியலை முன்னெடுப்பது என்பனவாகும். இதில் இரண்டாவது தெரிவான புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பது தற்போதைக்கு உச-ிதமானதல்ல என்பதை அவரே குறிப்பிட்டிருக்கின்றார். வட மாகாணசபை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கலைக்கப்படவுள்ளது. அடுத்து வரும் ஓரிரு மாதங்களில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படலாம். அதற்குள் புதிய கட்சி-யொன்றை பதிவு செய்து கட்சிக்கான சின்னத்தைப் பெற்றுக்கொள்வது சிரமமானது.
மூன்றாவது தெரிவான மற்றொரு கட்சியுடன் இணைந்து தேர்தலில் முகம் கொடுப்பதென்பதும் சாத்தியப்படாத ஒன்றாகவே தெரிகின்றது. அவருக்கு நெருக்கமானவர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மற்றும், சுரேஸ் பிரேமச் சந்திரன் ஆகியோரது கட்சிகளில்தான் அவர் இணைந்து கொள்ள வேண்டியிருக் கும். கஜேந்திரகுமாரின் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர். எல்.எவ் ஆகிய கட்சிகளை ஒன்றிணைத்து, ஓரணியாக்கி அதில் அவர் களமிறங்கலாம். ஆனால், சுரேஸ் பிரேமச்சந்திரனை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கஜேந்திரகுமார் உறுதியாகத் தெரிவித்து வருகின்றார்.

அதுமட்டுமன்றி, புளொட், ரெலோ போன்ற கட்சியினரையும் அவர் துரோகக் குழுக்கள் என வர்ணிக்கின்றார். இதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றாகப் புதிய கூட்டணி ஒன்று அமைவதென்பது சரிவரப்போவதில்லை.

நான்காவது தெரிவான கட்சி அரசியலில் இருந்து விலகி, தமிழ் மக்கள் பேரவையின் ஊடாக, மக்கள் அரசியலை முன்னெடுப் பது - உள்நாட்டிலும், புலம்பெயர் நாடுக-ளிலும் உள்ள தமிழ் உணர்வாளர்களை இணைத்து தமிழ் மக்களின் தீர்விற்காக உழைப்பது என்பது பொதுவான பார்வையில் சரியானதாகவும், சாத்தியமான-தானதாகவும் தோன்றினாலும், அங்கும் சிக்கல்கள் உள்ளன.

கஜேந்திரகுமாரும், சுரேஸ் பிரேமச்சந்திர னும் தமிழ் மக்கள் பேரவையில் உள்ளனர். இவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிரானவர்கள், இவர்களுடன் இணைந்து விக்னேஸ்வரன் தமிழ் தேசியக் கூட்டமைப் பிற்கு எதிரான அரசியலையே அங்கும் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இந்நிலை யில் தமிழ் மக்கள் பேரவை ஓர் எதிர்ப்பர சியல் களமாகவே அமையும். தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சியாக மாற்றமுறாது என அது ஆரம்பித்த காலத்திலிருந்தே விக்னேஸ்வரன் தெரிவித்து வந்துள்ளார். ஆனாலும் அங்கும் அரசியலே நடைபெறுகின்றது.

கஜேந்திரகுமாரும், சுரேஸ் பிரேமச்சந்திர னும் தங்களுக்கான ஆள் சேர்ப்பு அரசி யலையே அங்கிருந்து செய்கின்றனர் என்ற விமர்சனம் உள்ளது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது கஜேந்திரகுமார் சிறு கூட்டணியொன்றை அமைத்து அதற்கு தமிழ் தேசிய மக்கள் பேரவை என்ற பெயரைச் சூட்டியிருந்தார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 33



குரு அரவிந்தன்

ஹைடா முதற்குடி மக்களின் பாரம்பரிய நிலமாக ஹைடா ஹவாய் என்ற தீவு இருக்கின்றது. இவர்களில் ஒருவரான இவல்ஜன் வான்டகூப் என்ற பெண்மணி வான்கூவருக்கு அருகே உள்ள ஹைடா ஹவாய் என்ற இந்தச் சிறிய தீவில் ஆடை நெசவு செய்வதில் வல்லவராக இருக்கின்றார். இவரது தாயார் பாட்டியார் மட்டுமல்ல, சகோதரிகளும் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். குடும்பமாக இவர்கள் நெசவு செய்வதில் ஈடுபட்டிருந்தாலும், இவரது சகோதரிகள் அதிகமாக கூடை பின்னுவது, தொப்பி செய்வது போன்ற கலைகளை கற்று அத்துறையில் ஈடுபடுகின்றனர். இவர் மட்டும் பாரம்பரிய முறைப்படி ஆடை நெசவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருவதால், முதற்குடி மக்களின் பாரம்பரிய நெசவு முறை-களை தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றார். ஒரு காலத்தில் அனேகமான ஹைடா இனப்பெண்கள் நெசவு செய்யும் கலையைக் கற்றிருந்தார்கள் என்று இவர் குறிப்பிடுகின்றார். ஆனால் காலப்போக்கில் அவர்கள் அந்தக் கலையைக் கைவிட்டு விட்டார்கள். இந்தக் கலையை அவர்கள் மறந்ததற்கு நவீன ஆடைகள் அங்கு சந்தைப்படுத்தப் பட்டதும் ஒரு காரணமாகும். பொதுவாக வடமேற்குக் கரையோர மக்களின் பாரம்பரிய ஆடைகள் மலையாட்டு முடியில் இருந்தும், சிடார் மரப்பட்டை நாரில் இருந்துமே செய்யப் படுகின்றன. சிகப்பு, மஞ்சள் நிறத்திலான சிடார் மரப்பட்டைகளில் இருந்து பெறப்படும் நார்களினால் ஆடைகளைத் தயாரித்தார்கள்.

பசுபிக் வடமேற்குக் கரையோரப் பகுதியில் சாலீஸ் ஆர்ட் (Salish art) என்ற ஒருவகை கலை இப்பகுதியில் வாழும் சாலீஸ் மக்களிடையே பிரபலமானது. கூடைகள், உருவங்கள், துணிகள் போன்றவற்றில் இந்த ஓவியங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இதைப்போலவே லிங்கிட் ஆர்ட் என்ற கலைவடிவமும் இப்பகுதியில் பிரபலமானது. இந்தக் கலை அவர்களது பாரம்பரியம், கலாச்சாரம், வரலாறு போன்றவற்றை எடுத்துக் காட்டுவதாகும். இவர் தனது தாயாரைப் பற்றிக் குறிப்பிடும் போது, தன்னுடைய தாயார் இந்த வயதிலும் கிராமங்களுக்குச் சென்று அவர்களுக்கு நெசவு செய்வது பற்றிச் சொல்லிக் கொடுப்பதாக இவர் மேலும் பெருமையோடு குறிப்பிட்டார்.

முதற்குடி மக்களில் இன்றைய இளம் தலைமுறையினர் அதிக அளவில் சிறைச் சாலையில் இருப்பதாகத் தெரிகின்றது. கனடாவில் சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி கனடாவில் இளை-யோர், சிறார்களுக்கான சிறைகளில் ஏறத்தாழ 50 வீதமானவர்கள் முதற்குடி மக்களைச் சேர்ந்த சிறார்கள் என்பது கனடாவின் புள்ளி விபரத் திணைக்கள அறிக்கையில் இருந்து தெரியவந்துள்ளது. கனடாவில் உள்ள மொத்தச் சிறுவர்களின் தொகையில் முதற்குடி சிறுவர்களின் எண்ணிக்கை எட்டுச் சதவீதமாகவே இருக்கின்றது. 2007-2008ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கின்படி சிறைக்குச் சென்றவர்களில் முதற்குடி மக்களின் வயது வந்தவர்களில் 22 வீதமானவர்கள் சிறையில் இருந்திருக்கிறார்கள். அக்காலத்தில் முதற்குடி மக்கள் கனடாவின் மொத்த மக்களில் 3 வீதமானவர்களாக



இருந்தார்கள். முதற்குடி மக்களுக்கான நீதியின் பாதுகாப்பு அவர்களுக்குப் போதாமல் இருக்கிறது என்பதே அவர்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது. சட்டத்தை நிலைநாட்டுவதில் பாரபட்சம் காண்பிக்கப் படுவதாகவும் அவர்கள் முறையிட்டனர். இந்தச் சட்ட திட்டங்களிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் மாற்றங்கள் தேவை என இதுவரை வெளிவந்த சில அறிக்கைகளும், பரிந்துரைகளும் குறிப்பிடுகின்றன. அவ்வாறு வெளியிடப்பட்ட முக்கியமான சில அறிக்கைகளின் பெயர்களைத் தருகின்றேன். இந்த அறிக்கையில் உள்ள நடைமுறைப்படுத்தக் கூடியவற்றை ஓரளவு நடைமுறைப் படுத்தினாலுமே நாட்டில் உள்ள குற்றங்களை ஓரளவு குறைக்க முடியும்.

Report of the Aboriginal Justice Inquiry of Manitoba (1991) Report of the Royal Commission on Aboriginal Peoples (1996) United Nations Declaration on the Rights of Indigenous People (2007) Truth and Reconciliation Commission Calls to Action (2015)

முதற்குடி மக்களின் பெண்களை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கும் இதே நிலை தான் ஏற்பட்டு இருக்கின்றது. மத்திய அரசின் சிறைச் சாலைகளில் இருக்கும் பெண்களின் தொகையில் 36 வீதமானவர்கள் முதற்குடிப் பெண்களாக இருக்கின்றனர். கனடியப் பெண்களின் தொகையை எடுத்துக் கொண்டால் சுமார் நான்கு வீதமான பெண்களே முதற்குடியைச் சேர்ந்தவர்களாவர். மொத்த எண்ணிக்கை-யோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிக அதிகமான முதற்குடிப் பெண்கள் சிறைச்சாலைகளில் அடைபட்டுக் கிடப்பதை அவதானிக்க முடிகின்றது.

According to the Correctional Investigator of Canada, more than 36 percent of women in federal prison are of Aboriginal descent, and 2011 statistics show in provincial custody that number jumped to 41 percent. Aboriginal people make up just over four percent of the overall Canadian population.

முதற்குடி மக்களில் பெண்களும், சிறார்களும் அதிகமாகச் சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. நீதித்துறையில் உள்ள குறைபாடுகளே இதற்குக் காரணம் என்று சிலர் கருதுகின்றனர். காடுகளிலும், மலைகளிலும் குழுக்களாக வாழ்ந்த இவர்கள் தங்கள் குழுக்களின் தலைவர்களின் ஆணையை ஏற்று நடந்தார்கள். ஒவ்வொரு குழுக்களுக்கும் சட்டதிட்டங்கள் வேறுபட்டனவாக இருந்தன. கடந்த காலங்களில் தலைவரின் ஆணையை ஏற்க மறுத்தவர்கள் கடுமையான தண்டனையை அனுபவித்தார்கள். ஆனால் இன்று நீதித் துறையைப் பொறுத்த மட்டில் எல்லோருக்கும் பொதுவான சட்டமே கனடாவில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. முதற்குடி மக்களுக்கான கல்வி அறிவு போதாமையாலும் அவர்கள் சட்ட ரீதியான பல விடயங்களைப் புரிந்து கொள்வதில் பின்தங்கி இருக்கிறார்கள். இதனால்தான் இந்தச் சிக்கல் ஏற்பட்டு இருக்கின்றது. மிக அதிகமான எண்ணிக்கையில் முதற்குடி மக்கள் சிறையில் இருப்பது சமுதாயத்திற்கு நல்லதல்ல என்ற கருத்து பரவலாகக் கனடிய மக்களிடையே இருக்கின்றது. எனவே பொதுவான இந்தக் கருத்தை அலட்சியம் செய்யாது இதற்கான செயல் திட்டங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

"The high rate of Indigenous Peoples in custody is not only a matter for concern, but an indicator of the health of our society as a whole. We can and must do better to address this growing problem," the Department of Justice told VICE in an emailed statement.

முதற்குடி மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையை எடுத்துக்கொண்டால் அவர்கள் இயற்கைச் சூழலில் மிருகங்கள், பறவைகள், கடல்வாழ் உயிரினங்களோடு அதிகம் தொடர்பு உடையவர்களாக இருந்தர்கள். சுருங்கச் சொன்னால் அவற்றுடனேயே அவர்கள் வாழ்ந்தார்கள். உணவுக்காகவும், தோலுக்காகவும் அவற்றைப் பாவித்தனர். காலப்போக்கில் நவீன முறைகள் அறிமுகமானதால் காடுகள் பெரிய அளவில் அழிக்கப்பட்டு மிருகங்களின் வாழ்விடங்கள் குறையத் தொடங்கின. இதனால் இயற்கைச் சூழலில் வாழ்ந்த மிருகங்கள், பறவைகளின் இருப்பிடங்கள் தொலைந்து போயின. அனேகமான இடங்களில் முதற்குடி மக்கள் வாழ்ந்த பாரம்பரிய இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டதால், தாங்கள் வாழ்ந்த சூழலில் இருந்து பிரிக்கப்பட்டதாக அவர்கள் குறைப்பட்டுக் கொண்டனர். இவர்கள் இடம் பெயர வேண்டி வந்ததால் எந்த மிருகங்களோடு ஒன்றாக அவர்கள் வாழ்ந்தார்களோ, அந்த மிருகங்களை அவர்கள் இழக்கத் தொடங்கினார்கள். எனவேதான் அரசியல் காரணங்களுக்காகச் சூழலில் இருந்து பிரிக்கப்பட்ட முதற்குடி மக்கள் தங்கள் குறைகளை அரச அதிகாரிகளிடம் முறையிட்டு, அதை நிவர்த்தி செய்யும்படி அரசிடம் வேண்டினார்கள்.

Build Your Career in Mortgage Lending - Join my office! Training Provided

MORTGAGE ALLIANCE

Mortgage Loans for:
• Land
• Construction
• Rental Properties
• Consolidate 1st & 2nd Mortgages
• Consolidate high Interest Debts
• Self Employed

1585 Markham Road, Suite 110
Scarborough, ON M1B 2W1
Tel: 647-922-5704

SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca



Corporate office: Mortgage Alliance, 200-2005 Sheppard Ave E, Toronto, ON M2J 5B4. Tel:1-877-366-3487. Lic# 10530

# வாக்கு வேட்டைக்கான வேலைத் திட்டங்கள்

**- விகிர்தன் -**

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இலங்கையில் ஒரு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துமா என்பது இன்று அனைவர் மத்தியிலும் எழுந்துள்ள முக்கிய கேள்வியாகவுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தற்போதைய அரசாங்கத்தை தோற்கடித்து மீண்டும் தங்களது ஆட்சியை ஏற்படுத்த உள்ளதாக சூளுரைத்து வருகின்றார். அதற்கான போராட்டங்களை அவர் தொடர்ச்சியாக நடத்தியும் வருகின்றார். மஹிந்த தரப்பின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற கேள்விக்கும் அவர் பதிலளித்துள்ளார். தனது சகோதரர்களில் ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவார் என்பதை அவர் இந்தியாவில் வைத்து தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஸ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவதற்கு மஹிந்த ஆதரவாளர்கள் சிலரே எதிர்ப்பு வெளியிட்டு வருகின்ற நிலையில், அவரது மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஸ அல்லது பசில் ராஜபக்ஸ ஆகியோரில் ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக அவரால் முன்னிறுத்தப்படலாம். அல்லது, கோட்டாபயவே நிறுத்தப்படக் கூடிய நிலைமையும் ஏற்படலாம்.

கடந்த 2017ஆம் ஆண்டு மஹிந்த அணியினரால் நடத்தப்பட்ட மேதினக் கூட்டத்திற்கு வருகை தந்த சனத்திரளும், அதன் பின்னர் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அவருக்கு கிடைத்த ஆதரவும் ஆளும் அரசிற்கு ஓர் அச்சுறுத்தலாகவும், எச்சரிக்கையாகவும் அமைந்தது. இதனையடுத்து, மஹிந்தவின் பலத்தை உடைக்கும் வகையான வியூகங்களை அமைத்து, அரசாங்கம் காய் நகர்த்தி வருகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் மஹிந்த தலைமையில் மேற்கொள்ளப்பட்ட 'ஜன பலய' பேரணி பாரிய வெற்றியை அவருக்கு கொடுக்கவில்லை. இந்நிலையில், தற்போது அரசாங்கம் மக்களின் செல்வாக்கை அதிகரிக்கும் வேலைத்திட்டங்களில் மிக வேகமாக ஈடுபட்டு வருகின்றது.

எனினும், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை மிகுந்த சவால்களைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. தென் இலங்கையில் மஹிந்தவிற்கு கணிசமான மக்களின் ஆதரவு உள்ளது. அதற்கு அவரும், அவரது அணியினரும் இனவாதக் கருத்துக்களையே ஆயுதமாகப் பயன் படுத்தி வருகின்றனர். இந்நிலையில், சிங்கள மக்களை வசப்படுத்தும் வகையிலும், ஏற்கனவே இருக்கும் சிறுபான்மை மக்களின் ஆதரவை தக்கவைக்கும் வகையிலும் அரசாங்கம் செயற்பட களமிறங்கி உள்ளது. இதனை சமவேளையில் மேற்கொள்வதென்பது சிரமமான காரியமாகும்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போர்க் குற்றங்களிலிருந்து இராணுவத்தினரை பாதுகாப்பதான கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் தற்போது தெரிவித்து வருகின்றார். இது பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் தெரிவித்து அம்மக்களின் ஆதரவைத் திரட்டுகின்ற சமயத்தில் தமிழ் மக்களின் ஆதரவை இழக்க வேண்டியே ஏற்படும்.

கடந்த சில மாதங்களாக தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களிலும், மலையகத் தமிழர்கள் மத்தியிலும் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக மக்களின் அடிப்படைத் தேவையாகவுள்ள வீடுகள் அமைக்கும் நடவடிக்கைகள் வேகமாக முடுக்கி விடப்பட்டுள்ளன. ஆட்சி மாற்றம் ஏற்பட்டு சுமார் மூன்று வருடங்களின் பின்னரே இந்த வேலைத் திட்டங்கள் வேகப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களும் அடிக்கடி வந்து சென்று கொண்டிருக்கின்றனர். அப்பிரதேசங்களின் அபிவிருத்தி திட்டங்களுக்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வீட்டுத் திட்டங்களை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள், வீட்டுத் திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் என்பன அடிக்கடி இடம்பெறுகின்றன. புதிய கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தும் திட்டங்கள் குறித்து அரசாங்கத்தின் அறிவிப்புகள் உரத்துக் கேட்கின்றன.

மலையகத்தில் புதிய வீட்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிகளை சொந்தமாக வழங்கும் வேலைத் திட்டம் குறித்தும் பேசப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளால் மகிழ்ச்சியடைபவர்களாக முஸ்லிம்களும், மலையக மக்களும், அவர்களது பிரதிநிதிகளாகவுள்ள அரசியல்வதிகளும் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகிப்பவர்களும் காணப்படுகின்றனர். தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்திட்டங்களின் மூலமாக தங்களுக்கு அந்த மக்களின் ஆதரவு மேலும் கூடும் என்பதே அவர்களின் நோக்கமாகவும் உள்ளது.

ஆனால், வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கு அவிருத்தி திட்டங்கள் வந்தாலும் அவர் மகிழ்ச்சியடைய முடியாத சூழலே நிலவுகின்றது. ஏனெனில், அவர்களின் பிரச்சினை வேறாகவுள்ளது.

வடக்கு கிழக்கு போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாக இருப்பதால், அங்கு அபிவிருத்தித் திட்டங்கள் என்பன அதிகம் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால், அபிவிருத்தியை மட்டுமே மேற்கொண்டு விட்டு ஏனைய அடிப்படையான முக்கிய விடயங்கள் கைவிடப்பட்டு விடுமோ அல்லது கிடப்பில் போடப்படுமோ என்கின்ற அச்சம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு உள்ளது.

வடக்கு கிழக்கில் படையினர் வசமுள்ள மக்களின் காணிகள் இன்னமும் முற்றுமுழுதாக விடுவிக்கப்படவில்லை. வன்னியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள குடியேற்றங்களை அமைக்கும் அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்து அப்பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர். இதனை எதிர்த்து போராட்டங்களையும் அப்பகுதி மக்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவைப் பெற வேண்டுமானால் அப்பிரதேசங்களில் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படும் சமகாலத்திலேயே காணிகள் விடுவிப்பும் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழர் வாழும் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தனியே அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டுவிட்டு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதென்பது இயலாத காரியம். இதனை அரசாங்கம் புரிந்துகொண்டு செயற்படு கின்றபோதே, தமிழ் மக்களின் ஆதரவை திரட்ட முடியும். மலையகம் மற்றும் முஸ்லிம் பிரதேசங்களின் நிலைமைக்கும் வடக்கு கிழக்கிற்குமிடையே உள்ள வித்தியாசத்தை அரசாங்கம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டதன் மூலமாக மலையக மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களது மக்களுக்கு அதிகளவில் உதவிகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொடுக்கக் கூடியதாகவுள்ளது என்றும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் அவ்வாறு அமைச்சுப் பதவிகளைப் பெற்று தங்களின் மக்களுக்கு ஏன் உதவக் கூடாது என்றும் சிலர் கேள்விகளை முன் வைக்கின்றனர்.

குறிப்பாக அமைச்சர் மனோ கணேசன் இக்கருத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி வருகின்றார். தமிழ்மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு முன்வைக்கப்படாமல் அமைச்சுப் பதவிகளை ஏற்க முடியாது எனகின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு சரி யானதே.

தங்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அமைச்சுப் பதவிகளை பெறுவதை தமிழ் மக்களும் விரும்பவில்லை. உண்மையில் எதிர்க்கட்சித் தலைமைப் பொறுப்பைக் கூட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்திருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கருத்தாகவுள்ளது.

ஏனெனில், இதனால் தமிழ் மக்களுக்கு எவ்விதமான நன்மையும் இல்லை. தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான தமிழ் கட்சிக்கு இவ்வாறு நாட்டின் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை கொடுத்துள்ளதால் நல்லிணக்கத்தை நடைமுறைப்படுத்துவதாக அரசாங்கம் சர்வதேசத்திற்கு அறிவித்து வருகின்றது. எனவே, சம்பந்தர் எதிர்க்கட்சித் தலைமையை புறக்கணித்து விட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக மட்டுமே இருந்திருந்தால் அது தமிழ் மக்களுக்கு நன்மையளிப்பதாக இருந்திருக்கும் என்பது தமிழ் மக்களின் பொதுவான கருத்தாகும்.

2015ஆம் ஆண்டு நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டதன் பின்னர் கடந்த சில மாதங்களாகவே தமிழ் பகுதிகளுக்கான வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் வேகம் கொண்டுள்ளன என்றால் அதற்கு என்ன காரணம்? தமிழ் மக்கள் தொட்டுணரக் கூடிய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு அவர்களின் ஆதரவை - வாக்குகளை எதிர்வரும் தேர்தல்களில் பெறுவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கமாகும். இதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

ஆனாலும், இன்று வந்துள்ள இந்த சந்தர்ப்பத்தை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பயன்படுத்திக்கொள்ளவே வேண்டும். இன்னொரு புறத்தில் போராடிப் பெற வேண்டிய விடயங்களுக்கு களத்திலிறங்கிப் போராடவும்தான் வேண்டும்.

28 கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்நாதன்
பதிப்பு: Canyon Press Inc.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# நகரசபை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

உள்ள நகரசபைத் தேர்தலை வழமையான FPTP முறையில் நடத்தினாலும் அத் தேர்தலின்போது வாக்களிப்பவர்களிடம் ஒரு கருத்துக் கணிப்பையும் நடத்த உள்ளன. இவ்விரு நகரசபைகளிலும் வாக்களிக்கச் செல்லும் வாக்காளர்கள் இம்முறை "உங்கள் நகரசபைத் தலைவரையும், நகர-சபை உறுப்பினர்களையும் தரவரிசை வாக்குப்பதிவு தேர்தல் முறை மூலம் நீங்கள் தெரிவு செய்ய விரும்புகிறீர்களா?" என்ற ஒரு கேள்விக்கு "ஓம்" அல்லது "இல்லை" என்ற பதிலில் ஒன்றையும் தெரிவு செய்ய வேண்டும்.

ரொறன்ரோ நகரசபை தனது நகரசபைத் தேர்தலை எவ்வாறு நடத்த வேண்டும் என்று ஒரு குழு அமைத்து ஆய்வு செய்ய வேண்டும் என விவாதித்தது. பின்னர் தரவரிசை வாக்குப்பதிவு தேர்தல் முறையை மக்கள் விளங்குவது கடினம், மற்றும் தற்போதைய FPTP தேர்தல் முறையில் ஒரு பிரச்சினையும் இல்லை. அதனால் தொடர்ந்தும் ரொறன்ரோ நகரசபைத் தேர்தல்களை தற்போதைய FPTP தேர்தல் முறைமூலம் நடத்துவோம் என 22இற்கு 17 மேலதிக வாக்குகள் மூலம் முடிவெடுத்தது.

முந்தைய லிபரல் அரசு நகரசபைத் தேர்தல்களை தரவரிசை வாக்குப்பதிவு மூலம் நடத்த நகரசபைகளுக்கு அனுமதி அளித்தபோது குளோப் அன்ட் மெயில் ஊடகம் தனது ஆசிரியர் தலையங்கத்தில் ஒன்ராரியோ அரசின் இத்தீர்மானத்தை வெகுவாகப் பாராட்டியது. இதேபோல் National Post ஊடகம் தரவரிசை வாக்குப்பதிவு தேர்தல்முறை வேட்பாளர் களது தேர்தல் பிரசாரங்கள் சண்டை சச்சரவுகள் இல்லாமல் (more civil) நடை-பெற உதவும் எனவும், உறுப்பினர் தெரிவு பெரும்பான்மை மக்களது தெரிவாக இருக்கும் எனவும் கூறி மாகாண அரசின் முடிவைப் பாராட்டியது.

பின்னர் ரொறன்ரோ நகரசபை தரவரிசை வாக்குப்பதிவு தேர்தல்முறை ரொறன்ரோ நகரசபைத் தேர்தலுக்குத் தேவையில்லை என தீர்மானம் எடுத்தபோது Toronto Star ஊடகம் தரவரிசை வாக்குப்பதிவு தேர்தல் முறைக்கு எதிராக வாக்களித்த நகரசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவருமே பிரயோசன மற்றவர் (Useless) எனக் கூறியிருந்தது.

***FPTP* எனப்படும் *First Past The Post* தேர்தல் முறை:** தற்போதைய இந்தத் தேர்தல் முறையில் வாக்காளர் எல்லோரும் தமது தெரிவாக நகரசபைத் தலைவருக்கு ஒரு வாக்கும் தமது நகரசபை உறுப்பினர் தெரிவுக்கு ஒரு வாக்கும் அளிக்கின்றனர். பின்னர் அவர்களுக்கு விழுந்த வாக்குகள் எண்ணப்பட்டு அதிகூடிய வாக்குகள் பெற்ற நகரசபைத் தலைவரும், அதிகூடிய வாக்குகள் பெற்ற நகரசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்படுவர். இம்முறையில் தேர்தல் நடத்துவதும், வாக்குகள் எண்ணுவதும் இலகுவானது. ஆனால் பலர் ஒரு தொகுதியில் போட்டியிட்டால், அதில் அதிகூடிய வாக்குகளைப் பெற்ற ஒருவர் தெரிவு செய்யப்பட்டாலும் பெரும்பாலும் அவர் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை மொத்தமாக வாக்களித்தோரின் எண்ணிக்கையின் மிகக்குறைந்த வீதமாகவே இருக்கும். அதாவது அவருக்கு எதிராக விழுந்த வாக்குகளின் எண்ணிக்கை பெரும்பான்மையானதாக இருக்கும். FPTP தேர்தல் முறைமூலம் ஒரு தொகுதியில் வாக்களித்தவர்களில் 50% இற்கு மேற்பட்ட வாக்குளைப் பெறாமலே ஒருவர் அத்தொகுதியின் உறுப்பினராக வரமுடியும். இதனால் இது ஜனநாயகமான முறை அல்ல என்பதே FPTP தேர்தல்முறையை குறைகூறுபவர்களுடைய வாதம் ஆகும். இந்த தேர்தல் முறையே உலகில் அதிகமாகக் காணப்படுகிறது.



**தரவரிசை வாக்குப்பதிவு (*Ranked Voting*) தேர்தல்முறை:** இத்தேர்தல் முறை மூலம் தேர்தலில் வெற்றிபெறும் வேட்பாளர் மொத்தமாக வாக்களித்த மக்களின் வாக்குகளில் 50% ஐவிட ஒரு வாக்கு ஏனும் கட்டாயமாக கூடுதலாக எடுத்திருக்க வேண்டும். இத்தேர்தல் முறையில் வாக்களிப்பவர்கள் தங்களது தெரிவாக 'முதலாம் தெரிவு', 'இரண்டாம் தெரிவு', 'மூன்றாம் தெரிவு' 'நான்காம் தெரிவு' என குறைந்தது மூவருக்கு ஒரு வாக்குச் சீட்டிலேயே வாக்களிக்க வேண்டும்.

வாக்களிப்பு முடிவடைந்த பின்னர் 'முதலாம் தெரிவு' இல் பெறப்பட்ட வாக்குகள் மட்டுமே எண்ணப்படும். அதில் ஒருவர் வாக்களித்தவர்களின் மொத்த எண்ணிக்கையில் 50%ஐவிட ஒன்றாதல் கூடப் பெற்றிருந்தால் அவர் வெற்றியாளராக அறிவிக்கப்படும்.

வேட்பாளர்களில் ஒருவருமே வாக்களித்தவர்களின் மொத்த எண்ணிக்கையில் 50%ஐவிட ஒன்றாதல் கூடப்பெற்றிருக்கா விட்டால், ஆகக் குறைந்த வாக்குகளைப் பெற்றவரின் பெயர் நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குச்சீட்டில் உள்ள "இரண்டாம் தெரிவு" வேட்பாளர்களுக்கு கிடைத்த அந்த வாக்குகள் கொடுக்கப்பட்டு திரும்பவும் எல்லோருக்கும் விழுந்த வாக்குகள் (ஒரு வேட்பாளர் அதாவது ஆகக்குறைந்த முதலாவது வாக்குபெற்று நீக்கப்பட்டவர் நீங்கலாக) எண்ணப்படும். இதில் ஒருவர் மொத்த வாக்குகளின் 50% ஐவிட ஒன்றாவது கூடப் பெற்றிருந்தால் அவர் வெற்றியாளராக அறிவிக்கப்படும். இல்லாவிடில் மீண்டும் ஆகக் குறைந்த வாக்குகளைப் பெற்றவரின் பெயர் நீக்கப்பட்டு அவருக்கு விழுந்த வாக்குகளில் உள்ள 'இரண்டாம், மூன்றாம் தெரிவு' வேட்பாளர்களுக்கு அந்த வாக்குகள் அளிக்கப்பட்டு மீண்டும் எல்லோருக்கும் விழுந்த வாக்குகள் (இரு வேட்பாளர் நீங்கலாக) எண்ணப்படும். இவ்வாறே வேட்பாளர் ஒருவர் மொத்த வாக்குகளின் 50%ஐவிட ஒன்றாதல் கூடப்பெறும்வரை ஆகக்குறைந்த வாக்குகள் பெற்றவர் ஒவ்வொருவராக நீக்கப்பட்டு அவரின் வாக்குகள் மற்றவர்களுக்கு அளிக்கப்பட்டு திரும்பத்திரும்ப எண்ணப் படும். இறுதியாக மொத்த வாக்குகளில் 50% ஐவிட கூடப் பெற்றவர் தேர்தலில் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவர்.

இத்தேர்தல் முறையில் தொகுதியின் பெரும்பான்மை மக்களால் ஜனநாயக முறையில் அத்தொகுதியின் உறுப்பினர் தெரிவு செய்யப்படுகிறார். ஆனால் இத்தேர்தலுக்கு FPTP தேர்தல் முறைக்கு செலவழிக்கும் பணத்தைவிட அதிகம் செலவழிக்க வேண்டும். இலண்டன் நகரசபையின் மதிப்பீட்டின்படி அவர்களது 2018 ஒக்ரோபரில் நடைபெற உள்ள நகரசபைத் தேர்தலை தரவரிசை வாக்குப்பதிவு தேர்தல் முறை மூலம் நடத்த மேலதிகமாக $322,500 தேவைப்படும் என எதிர்பார்க்கபடுகிறது. அவர்களது 2014இல் FPTP தேர்தல் முறையில் நடந்த நகரசபைத் தேர்தலுக்கு $243,762 செலவானது.

ரொறன்ரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Canadian Studies Program இன் நிர்வாக இயக்குனரான Nelson Wiseman 'தரவரிசை வாக்குப்பதிவு தேர்தல் முறையே மக்களுடைய கருத்துக்களைச் சரியாக அளவிடும் தேர்தல் முறை" என CBC ஊடகத்திற்குத் தெரிவித்தார். இந்தத் தரவரிசை வாக்குமுறையை புரிந்து கொள்வதற்கு கொஞ்சம் சிரமமாக






TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
Learning Today... Leading Tomorrow



SECOND CAREER
Candidates Welcome

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Many Jobs are available

EARLY CHILDCARE ASSISTANT (ECA)
40 Weeks Diploma
Accredited by the NACC
Work as Childcare Assistant , Childcare Worker Etc.
Immediate Job Opportunities

PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Accredited by the NACC
Immediate Job Opportunities
Starts Oct. 1st,2018

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Jobs available in plenty

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks Diploma
Work as Food Preparer,Kitchen Helper, Food Service Counter Attendant

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefit பெற்றவர்கள் அரசாங்க நன்கொடையாக $28000 or more பெறலாம் திரும்பி செலுத்தத் தேவையில்லை
✱ Certain conditions may apply

PART TIME COURSES
Windows 2010, Word 2016, Excel 2016
Power Point 2016 , Access 2016
Quick Books 2017 Sage 50 Accounting 2017
Sage 300 2017 & Auto CAD
Firstaid & CPR , Food Handler Certifcation

● 100% Instructor Led Training ● Small Class Sizes
● Placement Assistance ● Ample Free Parking

☎ 416-291-5155 / 416-500-5300 ☎
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# ரொறன்ரோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

செப்ரெம்பர் 12இல் கூட்டி நீதிமன்றத் தீர்ப்பை புதிய சட்டமூலம் ஒன்றின்மூலம் இரத்துச் செய்யப்போவதாக (override) கூறினார்.

கனேடிய அரசியல் அமைப்பு (Section 33) தேவை ஏற்படின் மத்திய, மாகாண அரசுகளுக்கு இவ்வாறு நீதிமன்ற முடிவுகளை இரத்துச் செய்யும் உரிமையை (Invoking the notwithstanding clause) வழங்கியுள்ளது. இதைப் பெரும்பாலும் அரசுகள் பாவிக்காவிடினும் இதுவரை 15 தரத்திற்கு மேல் கனேடிய அரசுகள் இந்த உரிமையைப் பாவித்துள்ளன. பெரும்பாலும் இவ்வுரிமையை கியூபெக் மாகாண அரசே பாவித்துள்ளது. 2017ஆம் ஆண்டு கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கு நிதி உதவி வழங்கும் விடயமாக சஸ்கச்சுவான் அரசும் இவ்வுரிமையைப் பாவித்துள்ளது. ஆனால் ஒன்ராரியோ மாகாண அரசு இம்முறைதான் முதல்முறையாக இவ்வுரிமையைப் பாவித்து நீதிமன்றத் தீர்ப்பை இரத்துச் செய்ய உள்ளது.

இவ்வுரிமை பாவிப்பது தற்காலிகமானது. அதாவது ஐந்து வருடங்களுக்கு மட்டுமே இவ்வுரிமையைப் பாவிப்பதால் நீதிமன்றத் தீர்ப்பை மீறலாம். இதனால் ஒன்ராரியோ மாகாண அரசு இச்சட்டமூலத்தை பாவித்துத் தற்போது ரொறன்ரோ நகரசபைத் தேர்தலை நடத்தி, தான் உருவாக்கிய சட்டமூலப்படி 25 உறுப்பினர்களை தெரிவு செய்யும். ஆனால் நீண்டகாலத் தீர்வைப்பெற ஒன்ராரியோ மாகாண அரசு நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யும்.

ஒன்ராரியோ மேல்நீதிமன்ற நீதிபதி Edward Belobabaஇன் முடிவு பற்றி CBC ஊடகம் University of Waterloo அரசியல் விஞ்ஞான மற்றும் அரசியல் அமைப்புச் சட்டத்துறையைச் சேர்ந்த பேராசிரியர் Emmett Macfarlane இடம் கருத்துக் கேட்டிருந்தது. அவர், நீதிபதி எவ்வாறு பேச்சுச் சுதந்திரத்தை தனது தீர்ப்பில் சேர்த்துக் கொண்டார் எனத் தெரியவில்லை என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் நீதிபதி வேட்பாளர்களின் வாக்குரிமை பற்றிய விவாதத்திற்குத் தேவையில்லாமல் பேச்சுச் சுதந்திரத்தைப் பற்றித் தனது முடிவில் கூறியிருக்கிறார். தனது எண்ணப்படி நீதிபதி எவ்வாறு இது இரண்டையும் தொடர்புபடுத்தினார் எனப் போதியளவு விளக்கதை தீர்ப்பில் அளிக்கவில்லை என்றார். இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த University of Toronto பேராசிரியர் Alexandra Flynn நீதிபதியின் தீர்ப்பில் ஒன்ராரியோ மாகாண அரசு சட்டமூலத்தை நிறைவேற்றிய 'காலம்' தொடர்பான விளக்கம் மிகவும் வலிமையானது என்றார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் ஊடகவியலாளர்கள் நீதிபதி தனது தீர்ப்பில் ஒன்ராரியோ மாகாண அரசு சட்டமூலத்தை நிறைவேற்றிய காலம் பற்றி மட்டுமே கூறித் தனது தீர்ப்பை வழங்கியிருந்தால் அது விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டதாக இருந்திருக்கும். ஆனால் அவர் அரசியல்



அமைப்புச்சட்டம், பேச்சுரிமை என்பவற்றைக் கூறி நீதிமன்றத்தின் எல்லையைத் தாண்டி மக்களால் தெரிவு செய்யப்பட்ட சட்டமன்றத்தின் செயற்பாடுகள் பற்றிக் கூறியதன் மூலம் அவரின் தீர்ப்பு பலரின் விமர்சனத்திற்குள்ளாகி உள்ளது என்கின்றனர்.

குளோப் அன்ட் மெயில், தனது ஆசிரியர் தலையங்கத்தில் நீதிபதியின் தீர்ப்பை ஒரு மோசமான தீர்ப்பு (worse rulling) என்றும் டக் ஃபோர்ட் இன் பதில் நடவடிக்கையை ஒரு வெறி எழுச்சி (Tantrum) என்றும் கூறியிருக்கிறது. அது மேலும் தெரிவிக்கையில் ஒன்ராறியோ அரசின் சட்டம் (Bill 5) வேட்பாளர் மற்றும் வாக்காளர்களின் கருத்துச் சுதந்திரத்தை மீறுகிறது என்ற நீதிபதியின் தீர்ப்பு ஒரு வலுவற்றது அதற்கு விளக்கம் அளிக்கப்படவில்லை. ஏனெனில் 25 தொகுதிகளாக்கப்பட்ட பின்னரும் வேட்பாளர்கள் தாம் விரும்பியதைப் பேசலாம், வாக்காளர்களும் தாம் விரும்பியபடி வாக்களிக்கலாம். இதில் எங்கு கருத்துச் சுதந்திரம் மீறப்படுகிறது என நீதிபதி விளங்கப்படுத்தவில்லை. துர்அதிஸ்டமாக இந்த நீதிபதியின் தீர்ப்பை மேன்முறையீட்டு விசாரணை மூலம் மாகாண அரசு மாற்றியமைக்க முடியாமல் தீவிர நடவடிக்கை மூலம் மாற்ற முயல்கிறது என்கிறது.

ஒன்ராரியோ முதல்வர் சட்டமன்றத்தை செப்ரெம்பர் 12இல் கூட்டி நீதிமன்றத்தீர்ப்பை புதிய சட்டமூலம் ஒன்றின் மூலம் இரத்துச் செய்வதால் ரொறன்ரோ நகரசபைத் தேர்தல் திட்டமிட்டபடி 2018 ஒக்ரோபர் 22இல் நடைபெறும். அப்போது ரொறன்ரோ மக்கள் 25 வட்டாரங்களில் இருந்து 25 உறுப்பினர்களையும் ஒரு நகர முதல்வரையும் வழக்கமான தேர்தல் மூலம் தெரிவு செய்வர்.

*என்னை கெட்டவன் என்று சொல்லும் அளவுக்கு*
*இங்கு யாரும் நல்லவர்கள் கிடையாது*
*எல்லோருக்கும் நல்லவனாக இருக்க உன்னை படைத்த அந்த கடவுளால் கூட முடியாது.*
*என்னை மதிக்காதவர்களை நானும் மதிப்பதில்லை*
*அதற்கு நீங்கள் வைக்கும் பெயர் தலைக்கனம் என்றால்*
*நான் வைக்கும் பெயர் "தன்மானம்"*

# ஐம்பெருங் காப்பியங்கள்



விதுசிகா அருள்தாசன்
அகவை -13

முற்காலத்தில் தமிழில் எழுதப்பட்ட ஐந்து காப்பியங்களே ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். அவை சிலப்பதிகாரம், மணி மேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி. இவற்றுள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சங்கம் மருவிய காலத்தில் தோன்றியவை. ஏனையவை சோழர் காலத்தில் தோன்றியவையாகும்.

ஐம்பெரும்காப்பியங்களின் அணிகலப் பெயர்கள்

1. சிலப்பதிகாரம் - சிலம்பு என்பது மகளிர் அணியும் காலணி
2. மணிமேலை - ஆடை நழுவாமலிருக்க மகளிர் இடுப்பில் அணியும் அணி.
3. குண்டலகேசி - குண்டலம் என்பது மகளிர் அணியும் காது வளையம்.
4. வளையாபதி - வளையல் அணிந்த பெண் வளையாபதி.
5. சீவகசிந்தாமணி - சிந்தாமணி என்பது அரசன் கிரீடத்தில் பதிக்கப்படும் மணிக்கல்.

**சிலப்பதிகாரம்** - சோழ நாட்டின் தலை-நகரமாக விளங்கிய பூம்புகாரைச் சேர்ந்த கோவலன் என்னும் வணிகனதும் அவனது மனைவியாகிய கண்ணகியினதும் கதையை கூறுவதே இக்காப்பியமாகும். இக்கதையில் கோவலனுடன் தொடர்பு கொள்கின்ற நடன-மாதான மாதவி இன்னொரு முக்கிய கதாபாத்திரம் ஆகும்.

**மணிமேகலை** - இக்காப்பியத்தில் கதைகளன், கதைமாந்தர், கதை நடக்கும் காலம் ஆகியவை சிலப்பதிகாரத்தை ஒத்து இருப்பதால் மணிமேகலையும் சிலப்பதி காரமும் இரட்டைக்காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இக்காப்பியத்தில் வரும் மணிமேகலை சிலப்பதிகாரத்தில் வரும் மாதவியின் மகளாவாள். மணிமேகலையின் வாழ்க்கை வரலாற்றைக் கருவாகக் கொண்ட காப்பியம் மணிமேகலை ஆகும்.

**குண்டலகேசி** - ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசி என்னும் நூல் பௌத்தம் சார்ந்த நூலாகும். இந்நூலில் தன்னைக் கொல்ல முயன்ற கணவனைக் கொன்று விட்டுப் பௌத்த துறவியாக அச்சமயத்தின் பெருமையைப் பரப்புவதில் ஈடுபட்ட குண்டலகேசி என்னும் வணிகர் குலப்பெண் ஒருத்தியின் கதையே கருப்பொருளாகும்.

**வளையாபதி** - புகார் நகரில் நவகோடி நாராயணன் என்னும் செல்வந்தர் இருவேறு குலப்பெண்களை திருமணம் முடித்தார். தாழ்குலத்தை சேர்ந்த இரண்டாவது மனை-வியை ஊாராரின் கோரிக்கைக்கமைய தள்ளி வைக்கின்றார். அவ்வாறு தள்ளி வைத்த மனைவிக்கு பிறந்த மகன் தந்தையை வெளிப்படுத்தும் படலமே




வளையாபதியின் கருப்பொருளாகும். இக்கதையை வளையாபதிக் காப்பியத்திற்கு உரியதில்லை என்பவரும் உள்ளனர்.

**சீவகசிந்தாமணி** - சச்சந்தன் - விசையை என்போர் சீவகனின் பெற்றோர் ஆவர். கட்டியங்காரன் என்னும் அமைச்சரின் சூழ்ச்சியால் மன்னன் சச்சந்தனைக் கொன்று ஏமாங்கத நாட்டினை கைப்பற்றி னான். குழந்தைப் பருவம் முதற்கொண்டு சீவகனை கந்துக்கடன் என்பவன் வளர்த்து வந்தான். உரியபருவம் எய்தியதும் தனது நாட்டை தாயின் அறிவுரையோடும் மாமன் துணையுடனும் போரிட்டு வென்றான் சீவகன். சீவகன் வரலாற்றை விரிவாகக் கூறும் நூலே சீவக சிந்தாமணி ஆகும்.

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



# இன்னல் நீக்கும் இயற்கை – 33



- அகணி -
authorakani@gmail.com

இசைக்கும் மருத்துவ சக்தி உண்டு என்று கூறப்படுகின்றது. இசையின் மருத்துவ குணம் நரம்பு மண்டலத்தைச் சீர்படுத்த உதவும். இசையை ரசித்துக் கேட்டால் நரம்புக் கோளாறுகள், நரம்புத் தளர்ச்சி, அதிர்ச்சியினால் ஏற்படும் பாதிப்பு போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும். கடுமையான தலைவலிக்கும் இசை மருந்தாகும்.

சராசரியாக மனிதனுக்கு நாளொன்றுக்கு 12 மி.கிராம் இரும்புச் சத்து தேவை. உடலில் உள்ள இரும்புச்சத்து உடலில் ஒக்சிசனைக் காவுவதில் பெரும் பங்கை வகிக்கின்றது. இரும்புச் சத்து இல்லாததால் உடலில் இரத்தசோகை ஏற்படுகின்றது. உடலில் இரும்புச்சத்து குறையும்பொழுது குளிர் உணர்வு, பார்வை குறைதல், உரமில்லாத சதை போடுதல், மூச்சுவிட சிரமம் போன்ற பிரச்சினைகள் ஏற்படும். புளியம்பழம், பாகற்காய், முட்டை, முருங்கைக்காய், பொன்னாங்காணி, பேரீச்சம்பழம், திராட்சைப்பழம் போன்ற உணவுப்பொருட்களில் அதிகளவு இரும்புச் சத்து உண்டு. உடலில் இரும்புச்சத்து கூடினாலும் பாதிப்பு ஏற்படும். இரும்புச்சத்து மாத்திரைகள் எடுக்கும் பொழுது தேவையான அளவைவிடக் கூடாமல் இருப்பதற்காக கவனித்துக் கொள்ள வேண்டும்.

நகச்சுற்று ஏற்பட்டால் உப்பு, வெங்காயம், சுடுசோறு மூன்றையும் சமவளவில் கலந்து நகத்தைச் சுற்றிக் கட்டிக் கொண்டால் சுகம் வரும். தலையில் மயிர் இல்லாத இடங்களில் உப்பைத் தூளாக்கி நாளொன்றுக்கு மூன்று அல்லது நாலு தடவை தேய்த்து வந்தால் மயிர் முளைக்கும். காலில் முள்ளுக் குத்தி விட்டால் உப்பு, மிளகு சமவளவில் கலந்து நல்லெண்ணையில் வதக்கி ஒத்தடம் கொடுத்தால் சுகமாகும். சிறுபராயத்தில் காலில் முள்ளு குத்தினால் உப்புக் கட்டியை முள்ளுக் குத்திய இடத்தில் வைத்து துணியில் நெருப்பு பற்ற வைத்து அணைத்து சூட்டினால் உப்பைச் சூடாக்கிக் கொள்வது நினைவுக்கு வருகிறது. காதில் சிறு பூச்சி, அல்லது எறும்பு புகுந்து விட்டால் உப்பை நீரில் கலந்து காதில் விட்டால் காதிலிருந்து வெளியேறி விடும். குடலில் உள்ள பூச்சிகளை அழிப்பதற்கு வேப்பம் பூ உதவும். வேப்பம் பூவினை ஊறவைத்து தினமும் குடிநீராய்க் குடித்தால் உடற்பருமன் குறையும். காதில் சீழ் இருந்தால் கொதிநீரில் வேப்பம் பூ போட்டு ஆவியைப் பிடிக்கக் குணமாகும். தொண்டைப் புண் இருந்தால் வாயைத் திறந்து வைத்துக்கொண்டு ஆவியைப் பிடிக்கக் குணமாகும். வேப்பம் பூவை வறுத்துப் பொடிசெய்து பருப்பு ரசத்துடன் கலந்து சாப்பிட வாந்தி, ஏப்பம் போன்றவை நீங்கும். வேப்பம் பூவைத் தேனில் கலந்து படுக்க முதல் ஒரு பாக்களவு தினமும் சாப்பிட்டால் நோயற்று வாழலாம். இஞ்சியை இடித்து தலைவலி உள்ள இடத்தில் பற்றுப் போட்டால் தலைவலி நீங்கும்.



கறிவேப்பிலை சாப்பிடுவதால் எலும்புகள் உறுதியாகும். கறிவேப்பிலையில் இரும்புச் சத்து, பொஸ்பரஸ், புரதம், கொழுப்பு, விட்டமின் ஏ, விட்டமின் சி சத்துக்கள் உள்ளன. தொற்றுநோய்களில் இருந்து காப்பாற்றும் சக்தி கறிவேப்பிலைக்கு உள்ளது. புண்கள் ஆறுவதற்கு கறிவேப்பிலை சாப்பிடுவது நல்லது. மூலநோய் உடையவர்கள் 5 கிராம் எள் விழுதுடன், 5 கிராம் ஆட்டுப்பாலையும், 5 கிராம் சர்க்கரையும் கரைத்து குடித்து வந்தால் பயன் தெரியும். ரத்தக்காயம் ஏற்பட்டால் அவ்விடத்தில் நுரைத்த எள்ளுடன் தேனையும் நெய்யையும் கலந்து தடவக் குணமாகும். பல்லில் பலவீனம் இருந்தால் தினசரி காலை ஒரு கைப்பிடி எள் சாப்பிடுங்கள். பற்கள் பலமாகும்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் 5 கிராம் எள்ளை நீரில் தோல் கழரும் வரை ஊறவைத்து பின்பு காயவைத்து வறுக்கவும். பின்பு பனைவெல்லம் சேர்த்து காலையில் ஒரு உருண்டை எடுத்து சாப்பிட்டு வெந்நீர் குடிக்கவும். 21 நாட்கள் சாப்பிட்டு வரவேண்டும். இக்காலத்தில் இனிப்பு சாப்பிடாது பாகற்காய் சிறிதளவு சாப்பிட்டு வரவேண்டும். எலுமிச்சம்பழம் பித்தத்தைப் போக்கும். தலைவலி நீங்கும். தொண்டை வலி நீக்கும். வாந்தியை நிறுத்தும். பல் நோய்களைக் கட்டுப் படுத்தும். வாய் நாற்றத்தை நீக்கும். வாய்ப்புண்ணை குணமாக்கும். வாயுவைக் கட்டுப்படுத்தும். பசியை உண்டாக்கும். விரல் சுற்றுக்கு மருந்தாகும். விஷத்தை முறிக்கும். மஞ்சள் காமாலையைக் கட்டுப்படுத்தும். மலச் சிக்கலை விலக்கும்.

கத்தரிப்பழத்தை ஊசியால் குத்தி நல்லெண்ணையில் வதக்கி மிளகுத்தூள், உப்பு தூவி உண்டால் பல் நோய்கள், வாய்வுக்கோளாறு குறையும். பித்தம் நீங்கும். தோல் நோய் உள்ளவர்களுக்கு கத்தரிக்காய் உகந்ததல்ல. வற்றல் குழம்பு செய்து உண்டால் ஈரல் சோர்வு நீங்கும். நல்லெண்ணையில் கத்தரிக்காய் வற்றலாக்கி பொரித்து உண்டால் உடலுக்கு வெப்பசக்தி கொடுக்கும். கரட்டில் நிறைந்த அளவு விட்டமின் ஏ உள்ளது. கண்ணுக்கு ஆரோக்கியத்தை வழங்கும். கிருமிகளை அழிக்கும் சக்தி கரட்டிற்கு உண்டு. கரட்டைச் சாப்பிடுவதால் தொற்று நோய்கள் ஏற்படாது தடுக்கலாம். கொழுப்பைக் குறைக்கும். சிறுநீர் தொடர்பான சிக்கல்களைக் கட்டுப்படுத்தும். சர்க்கரை நோய்களைக் கட்டுப்படுத்தும்.

பசளைக்கீரை மலச்சிக்கலைக் கட்டுப் படுத்தும். ஆண்மையைப் பலப்படுத்தும். உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். வெந்தயக்கீரை வாயுவைக் குறைக்கும். விட்டமின் சி அதிகம் உள்ளது. கல்லீரலைச் சுறுசுறுப்பாக்கும். முளைக்கீரை பசியைத் தூண்டும்.

தேன் இதயத்திற்கு வலிமையைக் கொடுக்கும். காலையில் தினமும் வெறும் வயிற்றில் இரண்டு தேக்கரண்டி தேன் கலந்து குடித்தால் பலன் உறுதிபெறும். புளியை வாயில் வைத்து சப்பி நீரை விழுங்கினால் வாந்தி கட்டுப்படும். உடலில் கண்டல் ஏற்பட்டால் புளியும், உப்பும் கலந்து மென் சூடாக்கிப் பற்றுப் போடவும். இரத்தத்தில் உள்ள கொலஸ்ரோலைக் குறைக்க வெள்ளைப் பூண்டு உதவும். ஒவ்வாமையால் ஏற்படும் இருமலுக்கு இரவில் தூக்கத்திற்குப் போக முன்னர் பூண்டை பாலில் போட்டுக் காய்ச்சிக் குடித்தால் குணமாகும். காதுவலி, சீரணமின்மை, வாயுத்தொல்லை, இரத்த இழுத்தம், இரத்த சுத்தமின்மை, மூல நோய் போன்றவற்றுக்கு வெள்ளைப் பூண்டு மருந்தாகும். வெள்ளைப் பூண்டுச்சாற்றை உள்ளங்கையிலும், உள்ளங்காலிலும் தடவி வந்தால் காய்ச்சல் குறையும்.

**அன்பான விளம்பரம்**
**வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.


நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

## வாசகர் கடிதம்

பெருந்தெரு 407 (Highway 407) இல் பொதுவாக பிரயாணம் செய்வதே எனது வழக்கம். அண்மைக்காலமாக எனது மாதாந்த கட்டணம் அளவுக்கு அதிகமாக அதிகரித்து வருவதனைக் காணக்கூடியதாக இருந்தது.

இதனால் ஏற்கனவே இருந்த பழைய ரிசீதுகளை (Bills) ஒப்பிடும்போது ஒவ்வொரு தடவையும் பிரயாணத்திற்காக Camera Charge என $4.95 மேலதிகமாக அறவிடப்பட்டுள்ளதனை காணக்கூடியதாக இருந்தது. இதற்கு மேலதிக HST யும் அறவிடப்பட்டுள்ளது. Hwy 407 அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது, இது தவறு என்று ஒப்புக்கொள்ளப்பட்டு இதுவரை அறவிடப்பட்ட முழுப்பணமும் திருப்பி தரப்பட்டது. அத்துடன் புதிய Transponderஉம் அனுப்பி வைக்கப்பட்டது. Transponderஇற்கு மாதாந்த கொடுப்பனவிற்கு பதிலாக வருடாந்த கொடுப்பனவுடன் கழிவு விலையிலும் தரப்பட்டது. இதுபோன்ற உங்களுடைய ரசீதுகளையும் கவனமாகப் பரிசீலிக்கவும். இந்த நிலை இதற்கு மட்டுமல்ல மற்றைய விற்றல் வாங்கலுக்கும் பொருந்தும்.

விளம்பர வாசகர்களிற்கு இதனைத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.
- செல்வம்

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat

Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# உணவுக்கு அடிமையாதல் – *Food Addiction*



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

'இன்றுள்ள சூழ்நிலையில் உணவுக்காக- அதன் சுவைக்காகவே வாழ்கிறோமோ என்று எண்ணவே தோன்றுகிறது! காலை முதல் படுக்கைக்கு செல்லும் வரையில் ஏதோ ஒன்றை உள்ளே தள்ளும் பலரை சந்திக்கும் வேளையில் பரிதாபமாகவே இருக்கும்! ஆனால், அவர்கள் அதனைப் பற்றி கவலைப்படமாட்டார்கள். அவர்களது எண்ணம் எப்படியாவது நாவுக்கு ஒரு ருசியான உணவை தேடிப்பெற்று உண்ணுவதாகத்தான் இருக்கும். உண்மையில் உணவுக்கு அடிமையாகிப்போய், அதற்காகவே தங்கள் பணத்தை செலவு செய்து கொணடிருப்பவர்கள் பலரை சந்திக்கின்றோம். மூளையினது அதீத செயல்பாட்டினாலேயே இவ்வாறான பழக்கம் அல்லது அடிமையாகும் தன்மை ஏற்படுகிறது என்பதே மருத்துவ உண்மை ஆகும். உணவுகளைக் கண்டால் போதும் அதனை எப்படியும் சாப்பிட்டுவிட வேண்டும் என்று அவர்கள் துடிப்பார்கள். அதுவும் அவர்களுக்கு பிடித்தமான சாப்பாட்டுக் கடை- களை கண்டுவிட்டால் எப்படியும் உள்ளே போய்த்தான் வருவார்கள். உண்மையில் தனிப்பட்ட ரீதியில் மட்டுமின்றி இந்த உணவுப்பிரியர்களால் ஒரு சமூக ரீதியான பிரச்சினையும் எழ வாய்ப்புண்டு.

உணவுக்கு அடிமையாதல்! என்பதும் போதைவஸ்துக்கு அடிமையாவதைப் போன்றே ஓர் உணர்வாகும். குறிப்பாகக் கண்டகண்ட உணவுகளை உண்ண மனம் தூண்டும். மூளையுடன் தொடர்புள்ள நரம்பு கடத்திகள் (Neurotransmitters) தூண்டப்படுவதால் இவ் உணர்வு ஏற்படுகிறது. மூளையில் உள்ள டொபாமைன் (Dopamine) போன்ற நரம்பு கடத்திகள் சிலருக்கு கூடுதலாக செயல்படலாம். இனிப்பு, உப்பு, கார சுவைகளில் ஒரு அலாதிப்பிரியம் ஏற்படும். இது ஆளுக்கு ஆள் மாறுபடலாம். இதனால்தான் ரிம் ஹோட்டன்ஸ், மக்டொனால், ஹென்ராக்கி போன்ற உணவகங்களில் எந்த வேளையிலும் சனக்கூட்டம் மொய்த்துக் கொண்டிருக்கும். எவ்வளவு நேரம் காத்து கிடந்தாலும் விருப்பமான உணவை உண்ணாமல் விடவே மாட்டார்கள். சிலர் மிகத் தூரத்திற்கும் வாகனத்தில் சென்று தங்களுக்கு பிடித்தமான உணவினை வாங்கிவருவதினை தினசரி காண்கிறோம். திருப்தி வரும் வரையில் அவர்கள் உண்பார்கள், தங்கள் கட்டுப்பாட்டினை இழந்து மேலதிகமாக உண்பார்கள், விளை வுகள் பற்றிக் கவலைப்படமாட்டார்கள். இனிப்பான உணவுகளுக்கு மேலும் இனிப்பை சேர்ப்பர். உப்பு நிறைந்த உணவுக்கு மேலதிக உப்பும், காரம் நிறைந்த உணவுக்கு மேலும் காரத்தையும் சேர்த்து உண்பார்கள். பொதுவாக எந்த ஒரு திடீர் உணவுகளிலும் இவை தேவைக்கு மேலதிகமாகவே இருக்கும். இவர்களுக்கு பசியில்லாவிடினும் இவர்களால் சாப்பிடாமல் இருக்க முடியாது.



பொதுவாக சாப்பாட்டு பிரியர்களுக்கு சைவம், அசைவம் என்று வித்தியாசம் கிடையாது. சாப்பாடு என்பது வெறும் உணவு மட்டுமின்றி சிலருக்கு அது 'உணர்வு பூர்வமான' விடயமாகவும் மாறி விடுகிறது. நாக்கு ருசியை இவர்களால் கட்டுப்படுத்த முடியாது. வயிறுமுட்ட சாப்பிட்டு விட்டு உடலை அசைக்க முடியாதவர்களையும் பார்த்திருப்போம். இவர்களுக்கு சாப்பாட்டு ராமன் (Glutton) என்ற பட்டப் பெயரும் வைக்கப்படுகிறது. பொதுவாக உணவுப் பிரியர்களுக்கு பின் வரும் அடையாளங்கள் காணப்படலாம்.

வயிறு நிறைவாக இருந்தாலும் சாப்பிடவே தோன்றும். நினைத்ததினைவிட கூட சாப்பிடத் தோன்றும். அடக்கமுடியாத உணவு ஆசை (Craving) எழும். விரும்பியதை சாப்பிட்ட பின்பு குற்ற உணர்வு ஏற்பட்டாலும் திரும்ப உண்ணவே தோன்றும். மூளையில் இதனை தேவையில்லாமல் சாப்பிடுகிறேன் என்று பதிவு செய்தாலும் ஆசை ஏற்படும். உணவை தவிர்க்க வேண்டும். அல்லது இதற்கென்று சில சட்டங்களைப் போட வேண்டும். சிலநாட்களை தவிர்க்க வேண்டும் என்று நினைத்தாலும் அதனை மனம் மீறிவிடுகிறது. அவர்கள் சுவை சுகாதாரமற்ற உணவினை உட்கொள்கிறேன், உடல் எடை கூடுகிறது என்று நினைக்கலாமே தவிர அதனை அவர்களால் கட்டுப்படுத்த முடிவதில்லை!

உண்மையில் உணவுக்கு அடிமையாதல் என்பது மிக மோசமான பிரச்சினையாகும். இதனால் உணவுக்கு அடிமையாதல், கொழுப்புமிகை (Obesity), நீரிழிவு, இதய- நோய், புற்றுநோய், அல்சைமர் நோய், மூட்டுவலி, மனஅழுத்தம் போன்ற பல நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் உயிரியல், உளவியல் பிரச்சினையுடன் கூடிய தன்மதிப்பையும் இழக்கச் செய்கிறது. வாழும் நரகம் போல வாழ்வு ஆகிவிடுகிறது. உயிரியல் ரீதியில் ஹோர்மோன்களில் ஒழுங்கீனம், மூளை அமைப்பில் ஒழுங்கீனம், கண்ட மருந்துப்பாவனை ஒழுங்கீனம், குடும்ப அங்கத்தவர்களும் இவ்வாறான அடிமையாகும் ஒழுங்கீனம் என்பனவும் ஏற்படலாம். சிலருக்கு மனஎழுச்சிசார்பு, பாலியல் எழுச்சி, எதிர்மாறான எண்ணங்கள், இழப்பு, உணர்வுகள், சமூகத்தில் தனிமை, சிறுவர் துஷ்பிரயோகம், சமூக உதவியின்மை, மனஅழுத்த வாழ்வு ஏற்படலாம். உணவு உண்ணும் ஒழுங்கீனமும் ஏற்படலாம்.

மேற்கூறப்பட்டவை தவிர சில விசேட அடையாளங்களும் இருக்கவே செய்யும். மறைவான இடங்களுக்கு சென்று உண்ணுதல், சமூகநிகழ்வுகள், உறவுகளை தவிர்த்து வேறு இடங்களுக்கு செல்லுதல், தொழிலில் அதிகநேரம் இல்லாமை, பெருமளவில் பணத்தை செலவுசெய்தல், மனதை ஒரு முகப்படுத்தமுடியாமை, நித்திரை ஒழுங்கீனங்கள், எரிச்சல் ஏற்படுதல், தலையிடி ஏற்படல், அஜீரணம் ஏற்படுதல், தற்கொலை உணர்வு எழுதல் போன்றவை இவையாகும்.

பொதுவாக எமக்கு தெரிந்த ஒருவர்கூட இவ்வாறான பிரச்சினையில் இருக்கலாம். ஒரு தடவை அதிகம் உட்கொண்டுவிட்டால் அது தொடர்ந்து பிரச்சினையை கொடுக்கலாம் என்பதனை இவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். இன்று சிறிய வயதினர்கூட மக்டொனால்ட் போன்ற உணவகங்களை நாடிச் செல்கின்றனர். இவர்களது மரபணுக்கள் பிறவியிலேயே இந்த உணர்வை தூண்டலாம். பிறந்த இனம், பால், சூழல் என்பனவும் அவர்களை உணவுப்பிரியர்களாக்கலாம். சிறுவர் பிறந்த பெற்றோர்களின் பொருளாதார நிலை, வாழ்க்கை நிலை, நண்பர்கள், சகபாடிகள் போன்றோரின் அழுத்தம் காரணமாக உணவுக்கு அடிமையாகலாம். பொதுவாக சிறுவர்கள் இனிப்பு பொருட்களுக்கு அடிமையாவர். அதிகமான ஐஸ்கிரீம், சொக்கிளேற், பிஸ்கற் என்பவற்றை இவர்கள் உண்ணுவார்கள்.

உணவுக்கு அடிமையாதல் என்னும்போது எவ்வாறான முறைகளில் இவர்கள் உண்ணுகிறார்கள் என்றும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஒரு தடவையில் அதிகம் உண்ணுதல் (Binge Eatina) பசியற்ற (Anorexia), பெரும்பசி (Bulimia) எனப்படும் ஒழுங்கீனமற்றமுறையில் உணவு உண்ணுவார்கள். எனினும் இவர்களில் இருந்து உணவுப் பிரியர்கள் சற்று வேறுபடுவார்கள். இவர்கள் இனிப்பு, கசப்பு, காரம் உள்ள உணவுகளை மட்டுமே அதிகம் உண்பார்கள். முதலில் கூறப்பட்டவை உண்ணும் ஒழுங்கீனமாகும்.

ஒருவர் உண்மையில் உணவுக்கு அடிமையானவரா என்பதனை அறிய சில வினாக் கொத்துக்கள் உள்ளன. இதில் அமெரிக்கரான Dr. Tarman என்பவரது அறிக்கை சிறப்பானதாகும். அவையாவன: 1. பசியில்லாது விட்டாலும் உணவு உண்ணுவதில் பெருவிருப்பு ஏற்படுகிறதா?

2. உணவின் பெருவிருப்பை நிறுத்த முடியாமல் உள்ளதா?
3. ஒருநேரத்தில் அதிகம் உணவை உண்ண விரும்புகின்றீர்களா?
4. உணவு உண்டபின்பு மேலும் மேலும் உண்ண விருப்பம் உளதா?
5. பொது இடத்தைவிட்டு தனியாக சென்று உண்ண விருப்பம் உளதா?

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)



# Math World

## Since 1989

# Knowledge is not enough to teach, an experience with it makes a difference

## More than 28yrs of teaching experience; Certainly high quality skills ... for high performance

MATH WORLD
Most Advanced Talented Help

# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

Teaching Experience in MATH
For More Than 23 Years!

SINCE 1989
(28+yrs)

Provides **FAST TRACK MATH** Programs

Students Score in Math **90%+**

**Guaranteed Results**

Proven Records!!

## ADVANCED FUNCTION & CALCULUS

**Gr 12**

* Students will complete the entire course in **ONE MONTH** at University standard level.
* This program will help students to preform at a very **HIGH PERCENTAGE**

## AP MATHS ➡ Gr9, Gr10 & Gr11

Students in this course will complete Math **ONE YEAR** ahead of their current grade level.

## THE MOST ADVANCED MATH PROGRAM ➡ G8-400

**Gr8**

* Students will be covering **G8, G9, G10, G11 & G12** in **TWO YEARS**
* Previous record produced **HIGHEST** Math standard

# 416-666-5515

"விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என்கண்கள், அனைத்துமளந்த எம்முன்னவர்களை அறிய விரிந்து கொள்கின்றன்."

# கீழடி அகழ்வாய்வுகள்

## கிளறப்படும் உண்மைகள்-பன்முகப் பார்வை.



- கனி -
ptans@hotmail.ca
416.261.1348

அகழ்வாய்வாளர்கள் எவ்விதம் ஆகழ்வுகள் செய்கிறார்கள் எனத் தெரிந்த கொண்டிருக்கிறோம். அதன் தொடர்ச்சியை இனிப் பார்ப்போம்.

அகழ்வாய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட இடத்தின் மண்ணை மெதுவாக அகற்றுவார்கள். ஆரம்பத்தில் இவ்வேலை மிக இலகுவாகத்தான் இருக்கும். அதிக கவனமின்றியே இரண்டடி, மூன்றடி ஆழம் வரையில் செய்யலாம். ஏனெனில் கால ஓட்டத்தின் விளைவாகத் தொல்லிடங்கள், தொல்பொருட்கள் என்பன மண்ணால் மெது மெதுவாக மூடப்படுகையில் கணிசமான அளவு மண் அவ்விடத்திற் சேர்ந்து விடும். இம்மூடப்பட்ட மண் அகற்றப்பட்டதும்தான் அகழ்வில் சிறப்பான, மிகக் கவனமான கரிசனை தேவைப்படுகின்றது, பாவிக்கப்படுகின்றது.

இப்போது கிட்டத்தட்ட மூன்றடி ஆழமான குழி வந்து விட்டது. மிகவும் பக்குவமான நடவடிக்கைகள் தொடங்குகின்றன. மண் வெட்டிகள் போன்றவற்றின் பாவனை குறைந்த, சிறிய சிறிய மண்தோண்டிகள், மண்கிண்டிகள் போன்றவை பாவிக்கப்படத் தொடங்குகின்றன. சிறு சுத்தியல்கள், தூரிகைகள் போன்றவையும் தேவைகளுக்கு ஏற்பப் பாவிக்கப்படத் தொடங்குகின்றன. மண்ணுள் கிடக்கும் பொருட்கள் பாதிப்படையாத வண்ணம், சூழவுள்ள மண்ணானது பக்குவமாக அகற்றப்பட்டு பக்குவமாக எடுக்கப்படுகிறது. சிறிய, நீண்ட கட்டிடங்கள் போன்றவை தென்பட்டால், அவற்றின் அமைப்புக் கெடாத வண்ணம் சூழவிருக்கும் மண் பக்குவமாகத் துடைத்தெடுக்கப்படும். அகழ்ந்து கொண்டு போகையில் ஆங்காங்கு மண்ணுள் சில கரித்துண்டுகள் கூட அகப்படலாம். இவற்றினைக் கவனமாக, பாதிப்பில்லாதவாறு எடுக்க வேண்டும். அதனை எடுப்பவரின் விரல்கள் கூட அக்கரித்துண்டுகளிற் படக் கூடாது. இப்படியான கரித்துண்டுகளைத் தான் முக்கியமான ஆவணங்களாக அகழ்வாய்வாளர்கள் கருதுகிறார்கள். அவ்வகழ்ப் பரப்பிற் கண்டுபிடிக்கப்படும் பொருட்களுக்கான காலக் கணிப்பிற்கான காபன் நாட்கணிப்பிற்கு இந்தக் கரித்துண்டுகள் தான் பாவிக்கப்படுகின்றன. இப்படியான இரண்டு கரித்துண்டுகள்தான் கீழடி நாகரிகத்தின் காலத்தை கி.மு. 2300 என இனம் காட்டியது.

இப்படியாகக் கீழடி அகழ்வாய்வின் ஆழம் கிட்டத்தட்ட 5 மீற்றர்கள் வரையில் சென்றிருந்தது. இக்குழிகளின் உள்ளிருந்தவை



படம் அரப்பா நாகரிகத்தைக் காட்டுகிறது.

பற்றிய கருத்துக்களின் வெளிப்பாடாகத் தான் சிந்துவெளி நாகரிகத்திற்கு ஒப்பான நாகரிகம் இவ்விடத்தில் இருந்திருக்கக் கூடும் என்ற கருத்தும், இல்லை அது மிகைப்படுத்தப்பட்ட கருத்து என வேறுசிலராலும் கூறப்பட்டது. சிந்துவெளி நாகரிகமென ஒன்று இருந்தது எனத் தெரிந்தவர்களும் அந்த நாகரிகத்தைப் பற்றிய அறியத் தலைப்பட்டார்கள், இந்த வாதங்களின் போக்கினால். நாங்களும் அதனை மேலோட்டமாகவேனும் அறிந்து கொள்வோம், ஓர் இடைச்செருகலாக.

1850களில், பிரித்தானிய அரசினரின் கிழக்கிந்திய புகையிரதக் கூட்டுத்தாபனத்தார் தங்களது வியாபாரத்தைப் பெருப்பிக்க, டெல்லியில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு புகையிரதப்பாதை ஒன்றினை அமைக்க முயற்சிக்கின்றனர். உண்மையில் ஆப்கானிஸ்தானைப் பிடிக்க வேண்டும் என்பதே நோக்கம். ஆனால் அவர்களின் அம்முயற்சி பல்வேறு காரணங்களினால் கைகூடவில்லை. ஆப்கானிஸ்தானும் அவர்களிடம் இறுதிவரை முழுமையாக அகப்படவில்லை.

இந்த வரலாற்றுடன் இன்னொரு வரலாறும் அந்நிகழ்ச்சியால் வெளிப்பட்டது. புதிய புகையிரதப்பாதையை அமைக்க முயன்ற, பிரித்தானியரின் கிழக்கிந்திய புகையிரத நிறுவனத்தினருக்கு, அப்போது இந்தியப் பிரதேசமாகவும், இந்நாளின் பாக்கிஸ்தானின் பகுதியாகவும் இருக்கும் கராச்சியில் புகையிரதப்பாதையைப் போட முடியாது இருந்தது. ஏனெனில் அங்கு மண் மிகவும் மிருதுவாக இருந்தது. காரணத்தை அறிய முற்பட, மண்ணடியில் ஒரு நகரம் புதையுண்டு இருந்தது தெரிய வந்தது. உலகினையே ஓர் உலுக்கு உலுக்கிய இச்செய்தியைக் கேட்டு, உலகின் பல்வேறு பகுதிகளிலும் இருந்தும் தொல்லியல் ஆய்வாளர்கள், நிபுணர்கள் எனப் பலரும் இந்தியாவிற்குப் படையெடுக்க, இந்தியாவின் வரலாற்றில் ஒரு புதியபகுதி எழுதப்பட்டு, இந்திய வரலாற்றையே திருத்தி எழுதியது. தொடர்ந்த அப்பிரதேச ஆய்வுகள், 3550 ஆண்டு முன்னராக அப்பகுதியில் செழிப்புடன் இருந்த சிந்துவெளி நாகரிகத்தை இனம் காட்டியது. பல நாட்டவரதும் தொடர்ச்சியான அகழ்வுகளால் ஹரப்பா, மொகஞ்சதாரா, லொத்தல், கலிபங்கன் போன்ற 2500க்கும் அதிகமான, சிந்துவெளிக் குடியிருப்புகள், பெரியனவும் சிறியனவுமாக இதுவரையில் இனம் காணப்பட்டன.


3500 ஆண்டு முன்னராக மறைந்துபோன சிந்துவெளி நாகரிகத்தை இன்று வட நாட்டவர், பல ஒவ்வா இயல்புகளுடன் தமது அடையாளமாகக் காட்ட முயற்சிக்கிறார்கள். இந்தியாவின் சகல தடத்திற்குமான ஆரம்பமாக, ஆரியமும் சமஸ்கிருதமும் இருந்ததெனக் காட்டுவதற்கும் அதனைப் பல்வகைகளிலும் பாவித்துக் கொண்டும் முயற்சித்துக் கொண்டும் இருக்கின்றனர். இந்நிலையில் சிந்துவெளி நாகரிகம் பீறிட்டுக் கொண்டு வெளித்தந்த விடயங்களிற் சிலவற்றைத் தெரிந்து கொள்வோம்.

இந்த சிந்துவெளி நாகரிகம், முன்னர் இனம் காணப்பட்ட சுமேரிய, பாபிலோனிய, எகிப்திய நாகரிகங்களை விடப் பழமையானதாகவும், அவற்றினை விடவும் சிறந்ததாகவும் இருந்ததை ஆய்வாளர்கள் கண்டு கொண்டார்கள். பல சிறப்பான வடிவங்களைத் தன்னுட் கொண்டிருந்த இந்த நாகரிகத்தின் சொந்தக்காரர்கள் யார் என்ற கேள்வி ஆய்வாளர்களிடையே எழ, அருகினில் வாழ்ந்து கொண்டிருக்கும் பல்வேறு பகுதியினரும் அதனைத் தத்தமது முன்னோர்களின் நாகரிகம் என உரிமைகோரத் தொடங்கினர். ஆப்கானிஸ்தானியர் சிலர் அந்நாகரித்தவர் தமது முன்னவர்கள் என்றனர். வேறுசிலரோ பாகிஸ்தான் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் இவர்களின் வழித்தோன்றல்களோ? என ஐயுற்றார்கள். அங்கு பெற்ற எழுத்து வடிவங்கள், முத்திரைகளைக் கொண்டு சுமேரிய மக்களோ அல்லது எகிப்தியத் தொடர்பு மக்களோ எனக் கருதியோரும் உண்டு. சிலர் அப்பகுதியில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் வடநாட்டவர்களுக்கும் இவர்களுக்கும் தொடர்புண்டோ எனப் பார்த்தார்கள். அதனாற்றானோ என்னவோ அப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த ஆரியர்கள் தமது முன்னவர்களின் உயர்ந்த வாழ்வியலைக் காட்டும் அடையாளம்தான் சிந்துவெளி நாகரிகம் என்று மார்தட்டிக் கொண்டனர். ஆச்சரியம் என்னவெனில், அருகிலேயே இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களிடம் சிந்துவெளி பற்றிய எந்தக் குறிப்புகளுமோ, வாழ்வின் தொடர்ச்சியுமோ எள்ளளவும் இல்லை, சேர்த்துப் பார்ப்பதற்கு. அல்லாமலும் அப்பகுதிகளை கிட்டத்தட்ட முற்றாகவே புறக்கணித்து வாழ்ந்து வந்திருக்கிறனர். சில சமயங்களில் மண்ணிடையே இருந்த செங்கற்களை எடுத்துக் கொண்டதைத் தவிர வேறு எந்தவொரு தொடர்புகளும் இருந்திருக்கவில்லை.

வரலாற்றின் நல்வாய்ப்போ என்னவோ, ஹரப்பா, மொகஞ்சதாரோ போன்ற, சிந்துவெளி நாகரிகத்தின் முக்கிய இடங்கள், இந்தியாவில் இருந்து பிரிந்து போன பாக்கிஸ்தான் பகுதிகளில் உள்ளன. அவை பாக்கிஸ்தானின் முக்கிய

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

metromath
LEARNING CENTRES
MATH & READING & WRITING.
CALL TO REGISTER TODAY!
Metromath Learning Centres provide affordable, comprehensive math, reading and writing programs to students from grades 1-8. Using a proven Accelerated Learning Program, Metromath applies effective teaching strategies geared towards each student's individualized learning approach.
AN INDIVIDUALIZED APPROACH TO ACADEMIC GROWTH!
647 977 9749 | WWW.METROMATH.CA | 3195 SHEPPARD AVE. E




# விக்னேஸ்வரன்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்த நிலையில், விக்னேஸ்வரன் முதலாவது தெரிவை நாடுவதே பொருத்த மானதாக இருக்கும். அவருக்கு எதிரான அரசியல்வாதிகளின் கருத்துக்களை விடவும் பொதுமக்களின் கருத்து இதுவாகவே இருக்கின்றது.



"ஐயா விக்னேஸ்வரன் நீதியரசராக இருந்தவர். அவர் தனது சட்டத்திறமையை தமிழ் மக்களுக்காக முழுமையாக பயன்படுத்துவார் என்று எதிர்பார்த்தோம் எதுவும் நடைபெறவில்லை. அதேவேளை, அவர் தலைமையிலான வட மாகாணசபை போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறப்பான பணிகள் எதனையும் மேற் கொள்ளவில்லை" - சாதாரண பொது மக்கள் இவ்வாறுதான் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

இன்று பொதுவான ஊடகங்களில் வெளியாகும் பத்திகளில் கூட விக்னேஸ் வரன் கடுமையாக விமர்சிக்கப்பட்டே வருகின்றார். இந்த நிலையில் தனது தலைமையை தமிழ் மக்கள் விரும்பு கின்றனர் என்று அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் எவ்வகையில் உண்மை யானவை என்றே சிந்திக்கத் தோன்றுகின்றது.

தமிழ் மக்கள் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட 'எழுக தமிழ்' பேரணிகளில் கலந்து கொண்டவர்களை மனதில் வைத்தே அவர் தனக்குப் பின்னால் தமிழ் மக்கள் உள்ளனர் என்று எண்ணுவதாகவே தெரிகின்றது. இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை யை கடுமையாக விமர்சிப்பவர்கள் கூட விக்னேஸ்வரனின் போக்குகளை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை.

இதேவேளை, வட மாகாண சபையின் ஆயுள் காலம் ஒக்ரோபர் 25ஆம் திகதி யுடன் நிறைவடைகின்றது. சபையின் இறுதி அமர்வு ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பிறந்த நாள் அன்று நடைபெற உள்ளதாக அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.


இறுதி அமர்வில் பிரேரணைகள் எவையும் இருக்காது என்றும், அது அனைவரும் கண்ணதாசனின் பாடலில் வருவதைப் போல கலைந்து செல்வதற்கான அமர்வாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். கண்ணதாசனின் 'பசுமை நிறைந்த நினைவுகளே..' என்ற பாடலைத்தான் அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால், வட மாகாணசபை பசுமையான நினைவு களுடனா கலையப் போகின்றது?

# கீழடி...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

சுற்றுலாப் பகுதியாக இருப்பதால், அங்கு கண்டெடுத்த தொல்பொருட்கள் உருமாறாது அப்படியே இருக்கின்றன.

வலிமையிழந்து பெருமைமறந்து இருந்த தமிழர்களிற் பலருக்கு இப்படியொரு விடயம் உள்ளதென்று கூடப் பெரிதாகத் தெரியாது, அதனால்தானோ என்னவோ, சிந்துவெளியின் உரிமைச் சிக்கலைக் கண்டு கொள்ளவில்லை. ஆனால், ஆய்வுகளின் வெளிப்பாக, சிந்துவெளி மக்களுக்கும் இந்தியாவின் தென்பகுதியில் வாழ்ந்துவரும் தமிழருக்கும் தொடர்புகள் உண்டு எனவும், தமிழர்களே சிந்துவெளி நாகரிகத்தின சொந்தக்காரர்கள் எனவும் பல ஆய்வாளர்கள் நிறுவிக் காட்டினர்.




ஆனாலும் இன்னமும் அந்நாகரிகம் தங்களதுதான் எனக் காட்டி உரிமை பெறுவதற்கு ஆரியர்கள் பலவழிகளிலும் முயற்சி செய்து கொண்டே வருகின்றனர்.

**ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்**

**புரட்டாசி மாத இலக்கியக் கலந்துரையாடல்**

**தமிழ்மொழி பேணலில் கணினியின் பங்கு**

**சிறப்புப் பேச்சாளர்கள் உரை:**

"தமிழ் கற்றல், கற்பித்தலில் கணினி தொழில் நுட்பத்தின் பங்கு" - தாரணி கேதீஸ்வரன்
"மின்னூல்" - பொன் குலேந்திரன்
"இணையப் பாதுகாப்பு" - குமுதினி பொன்னுத்துரை
"தமிழ்க் கணிமையின் இன்றைய வளர்ச்சி நிலை" - வல்லிபுரம் சுகந்தன்

ஜயந்தெளிதல் அரங்கு

நாள்: 29-09-2018
நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை

இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
Unit 7, 5633, Finch Avenue East
Scarborough, M1B 5K9
(Dr. Lambotharan's Clinic - Basement)

தொடர்புகளுக்கு: அகில் - 416-822-6316

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

அனுமதி இலவசம்!

# அச்சுறுத்தல்களுக்கு அஞ்சமாட்டேன்

## நேர்காணல் – எழுத்தாளர் ரவிக்குமார்

– கண்ணன் –

இந்தியாவை உலுக்கிய நரேந்திர தபோல்கார், பன்சாரே, கல்புர்கி, கௌரி லங்கேஷ் ஆகிய முற்போக்கு சிந்தனை யாளர்களின் கொலைகளைத் தொடர்ந்து, அதே கொலையாளிகளால் மேலும் 34 பேரின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று இந்திய உளவுத்துறை சமீபத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த கொலைப் பட்டியலில் தமிழகத்தில் இருந்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளரும் எழுத்தாளருமான ரவிக்குமார் பெயரும் உள்ளது. இந்தச் சூழலில் ரவிக்குமாரிடம் பேசினோம்.

கொலை பட்டியலில் உங்கள் பெயரும் இருக்கிறதே? உங்கள் மனநிலை எப்படி இருக்கிறது?

உள்ளூர் சாதிய, மதவாத சக்திகள் அரசியல் ரீதியாக நேரடியாக மிரட்டல் விடுத்தால் அதனை எதிர்கொள்ளலாம். ஆனால், இது முகம் தெரியாத ஒரு பயங்கரவாதக் குழு. யாரென்றே தெரியாது. புனேவில் இருப்பவர்களின் கொலைப் பட்டியலில் எனது பெயர் இருக்கிறது. இதற்கு முன்பே கொலை செய்யப்பட்ட நரேந்திர தபோல்கார், பன்சாரே, கல்புர்கி, கௌரி லங்கேஷ் ஆகிய சிந்தனையாளர்கள் நன்கு திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களைக் கொலை செய்த குழுவைப் பற்றி வருகின்ற செய்திகளைப் பார்க்கும்போது, நானும் அப்பட்டியலில் இருப்பதை அலட்சியம் செய்ய முடியவில்லை. அந்தக் குழுவின் செயல்பாடுகள் தமிழகத்திலும் இருக்கிறது என்பதுதான் பெரிய அதிர்ச்சியாக உள்ளது. அப்படி இல்லையென்றால், எப்படி என்னைப் பற்றி அவர்களுக்குத் தெரியும்? தமிழ்நாட்டில் இருக்கும் ஆட்கள் தான் தகவல்களைக் கொடுத்திருக்கிறனர். எனவே, நான் கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டியதுள்ளது.

இது ஒரு புதிய விதமான அச்சுறுத்தலாக உள்ளதே? இதுவரை வகுப்புவாதம் என்பது வெளிப்படையான அரசியல் ரீதியான அச்சுறுத்தலாக மட்டும்தான் இருந்தது?

உண்மைதான். அதுதான் இப்போது புதிய பரிமாணம் எடுத்து பயங்கரவாத அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இது தமிழகத்தையே சீர்குலைக்கும் திட்டத்துடன் இருப்பதாகப் பார்க்கின்றேன். இதுவே, சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்கள் செய்திருந்தால் நாடு முழுக்க வேட்டையாடியிருப்பார்கள். பெரும்பான்மை சமூகம் என்பதால் அரசே இதனை அலட்சியப்படுத்துகிறதோ, மூடி மறைக்கப் பார்க்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. பெரிதுபடுத்தினால் மத்தியில் ஆளும் கட்சிக்கு அரசியல்ரீதியாகப் பின்னடைவு வந்துவிடும் என்று பார்க்கிறார்களோ எனக் கருதத் தோன்றுகிறது.



இந்த அச்சுறுத்தல் காரணமாக உங்கள் அரசியல் பணிகளில் இருந்து பின்வாங்குவீர்களா?

“ஓர் அரசியல்வாதியாக இருப்பது எளிது. ஆனால், ஒரு சமூக சீர்த்திருத்தவாதியாக இருப்பது பெரிய சவால்” என்பார், புரட்சியாளர் அம்பேத்கர். தலித் அரசியல் என்பது மற்ற கட்சிகளின் தேர்தல் அரசியல் போல் கிடையாது. அது ஒரு சமூக சீர்திருத்த அரசியல். மற்ற கட்சிகளில் இருப்பதைவிட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் இருப்பது சவால் நிறைந்தது. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது மட்டுமல்ல, இது சாதி ஒழிப்பு என்கின்ற சமூக சீர்த்திருத்த செயல் திட்டத்தை வைத்திருக்கும் கட்சி. எனவே, சவால் நிறைந்த பணி என்று தெரிந்துதான் இதைத் தேர்ந்தெடுத்தேன். எனவே, எனது அரசியல் பணிகளிலிருந்து நான் பின்வாங்க முடியாது. பின்வாங்கவும் மாட்டேன். அதுதான் புரட்சியாளர் அம்பேத்கரிடம் நாங்கள் கற்றுக்கொண்டது. ஒடுக்கப்பட்டவர்களுக்கான உரிமைகளைப் பற்றிப் பேசுகிறேன். அதைப் பேசவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. அதைப் பேசினால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் வரும் என்றால் அதற்காக நான் அஞ்சமாட்டேன்.

குடும்பத்தினர் எப்படி எடுத்துக் கொண்டார்கள்?

எனது குடும்பத்தில் முதலில் பயந்தார்கள். எல்லா அரசியல் கட்சிகளும் எனக்கு அளித்துவரும் ஆதரவு அவர்களது பயத்தைப் போக்கியிருக்கிறது. என்றாலும் என்னை பாதுகாப்பாக இருக்கச்சொல்லி வற்புறுத்தி வருகிறார்கள்.

உங்கள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் என்ன சொன்னார்?

“ரவிக்குமாருக்கு விடுத்திருக்கும் அச்சுறுத்தல் என்பது இயக்கத்தைச் சீர்குலைப்பதற்கான முயற்சி. ஏனென்றால், மதச்சார்பின்மையை வலியுறுத்தி இந்தியாவில் மதசார்பற்ற கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று மாநில அளவில் மட்டுமல்லாமல் தேசிய அளவிலும் பலரையும் சந்தித்து கோரிக்கைகள் வைக்கிறோம்.இக்கொலைத் திட்டம் அவரை அழிப்பதற்கானது மட்டுமல்ல கட்சியையே அழிப்பதற்கான சதி” என்று கூறியுள்ளார். ஏற்கனவே, அவரும் சாதிய பயங்கரவாதிகளின் கொலைப்பட்டியலில் இருக்கிறார். அவரைக் கொலை செய்ய பலமுறை முயற்சித்துள்ளனர் என்பது காவல் துறைக்கே தெரியும்.

வகுப்புவாத பயங்கரவாதிகள் கொலைப் பட்டியலில் உங்களை சேர்ப்பதற்கு உங்களின் எந்த நடவடிக்கை காரணமாக இருக்கும் என நினைக்கிறீர்கள்?

கௌரி லங்கேஷ் கொலையாளி அமோல் காலே பிடிபட்டபோது, “இந்து ராஜ்யத்தை அமைக்க யார் யாரெல்லாம் தடையாக இருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் அழித்தொழிப்போம்” என்று தெரிவித்தார். இந்தியாவை இந்து ராஜ்யமாக அமைய விடாமல் தடுத்துக் கொண்டிருப்பது அம்பேத்கர் வகுத்துத் தந்த அரசியல் சட்டம்தான். அவர் காலத்திலேயே இந்தியாவை இந்து ராஜ்யமாக அறிவிக்கச் சொல்லியும், இப்போதுள்ள தேசியக் கொடிக்குப் பதிலாக காவிக் கொடியை வைக்கச் சொல்லியும் பல்வேறு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால், அதனையெல்லாம் மீறி மதச்சார்பின்மையைக் காக்கின்ற ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை அம்பேத்கர் வகுத்துக் கொடுத்திருக்கிறார். இந்த அரசியலமைப்புச் சட்டம்தான் இந்தியாவை இந்து ராஜ்யமாக மாற்றாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான், அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்காகவும், அதனை சிதைக்கும் நோக்கிலும் இன்று பாஜக அரசு முயற்சித்து வருகின்றது. இந்து ராஜ்யம் அமைக்கத் தடையாக இருப்பவர்களில் முதன்மையானவர்கள் அம்பேத்கரியவாதிகள்தான். அதனாலேயே, அம்பேத்கரிய வாதிகள் குறி வைக்கப்படுகிறார்கள்.

நான் ஒரு கட்சியின் பொதுச் செயலாளராக மட்டுமல்லாமல் இந்திய அளவில் அம்பேத்கரிய கருத்தியலை முன்னெடுப்பவனாகவும் இருக்கிறேன். அதனாலேயே, அவர்களின் கொலைப் பட்டியலில் இருக்கிறேன் என்று நினைக்கிறேன். கருத்தியல் ரீதியாக அரசியலமைப்புச் சட்டத்தை யாரெல்லாம் பாதுகாக்க நினைக்கிறார்களோ அவர்கள் எல்லோருமே இந்து ராஜ்யத்திற்கு எதிரானவர்கள் என்றுதான் வகுப்புவாதிகள் நினைக்கின்றனர். மதச்சார்பின்மையை வலியுறுத்தியதால்தான் அம்பேத்கரை மட்டுமல்ல, நேருவையும் காந்தியையும்கூட அவர்கள் எதிரிகளாக நினைக்கிறார்கள்.

தமிழகத்தைப் பெரியார் பூமி என்கிறார்களே? இங்கும் இப்படியெல்லாம் நடக்குமா?


மற்ற மாநிலங்களைப்போல நேரடியாக மதவாத அரசியல் தமிழகத்தில் காலூன்ற முடியாமல் இருப்பதற்குத் தமிழகம்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
mhc
• கழுத்து, • வாகன விபத்து • விளையாட்டுக் காயங்கள் • தலைவலி, தலைசுற்றுத்தும்
• முதுகு நோவு • மன அழுத்தம்
போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.
WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:
• STRESS • TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM • TREAT WITH MASSAGE THERAP
• RESPIRATORY PROBLEMS • ALLERGIES
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSE VEINS • SEXUAL PROBLEMS
• BACK PROBLEM / NECK PROBLEM • CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM
HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING
Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis
Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# அதிசயக் கோயில் அங்கோர்



கலாநிதி
இரத்தினம் நித்தியானந்தன்

கடந்த இதழ் தொடர்ச்சி...

## மூலப் பொருட்கள்

ஆங்கோரின் ஆரம்ப கால நினைவுச் சின்னங்கள் மரங்களினாலேயே உருவாக்கப்பட்டன.

கெமர் கட்டிடங்களில் மூன்று வகையான கட்டுமான பொருள்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. ஆரம்ப கால நினைவுச் சின்னங்கள் செங்கற்களால் உருவாக்கப் பட்டன. ஒவ்வொரு அடுக்கும் உறுதியாக உருவாக்கப்பட்ட சுண்ணாம்பைவிட தாவரப் பொருள்களே முக்கியமாகப் பயன்படுத் தப்பட்டன. சில இடங்களில் பதிக்கப்பட்ட பின் செங்கற்கள் செதுக்கப்பட்டன. இத்த கைய பாணிக்கு சரியான எடுத்துக்காட்டாக பிரசாத் காரவானில் உள்ள இரண்டு கோபுரங்கள் திகழ்கின்றன. மிக நுட்பமான அலங்காரங்களைச் செதுக்குவதற்காக செங்கற்கள் மீது சுண்ணாம்பு பூச்சு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

கம்போடியாவில் அதிக அளவில் நிறைந் திருப்பதாலும், நீடித்து உழைக்கும் தன் மையாலும், அடிதளம், சுவர்கள், சாலைகள் சில சமயங்களில் முழு கட்டி டங்களை உருவாக்கவும் சிவப்பு வண்ண சரளைக்கற்களே பயன்படுத்தப்பட்டன. இதை நுட்பமாக செதுக்க முடியாது என்பது ஒன்றே இதிலுள்ள குறைபாடு.

10ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செங் கற்களுக்குப் பதிலாக மணற் பாறைகள் பயன்படுத்தப்பட்டன. ஆங்கோரின் ஆரம்ப கால நினைவுச் சின்னங்களில் உள்ள கதவுகளின் சட்டங்கள் ஒரே பாறை படி வத்தில் உருவாக்கப்பட்டன. செதுக்கு வதற்கு உகந்ததாக மணற்பாறை இருப்ப தால் இவை மேல் கூரைகளுக்கும், வாயில்களுக்கும், சதுரத் தூண்களுக்கும் பயன்படுத்தப்பட்டன. 11ஆம் நூற்றாண்டு வாக்கில் ஒரு முழு கோயிலைக் கட்டி முடிக்கவும் மணற் பாறைகள் உபயோகப் படுத்தப்பட்டன. கட்டிட அமைப்பு முறை யிலும், அலங்காரங்களிலும் பயன்படுத் தப்பட்ட மணற்பாறைகளின் மூலம் பலதரப்பட்ட மணற் பாறைகள் கிடைக்கப் பெற்றன என்பதை அறிய முடிகிறது.

மெருகு ஊட்டிய ஓடுகளும், மெருகு இல்லாத ஓடுகளும் கோயில்களின் கூரைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

சில நேரங்களில், அலங்காரங்கள் செய் வதற்காக செங்கற்கள் மீது சுண்ணாம்பு கலவை பூசப்பட்டது. இந்தக் கலவை, சுண்ணாம்பு, மணல், புளி, பனை வெல் லம், கரையான் புற்றுமண் ஆகியவற்றைக் குழைத்து உருவாக்கப்பட்டது.

## கெமர் கலைகளில் பிரபஞ்சப் படைப்புக் கோட்பாடு

மெரி கோயில்களின் நில அமைப்பு கட்டடக்கலை, அலங்காரம் எல்லாம் மத மனித நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டன. இந்து மதப் புராணங்களில் உள்ள பிரபஞ்சப் படைப்புக் கோட்பாடுகளையே கெமர் கலைகள் எதி-ரொலித்தன. இந்து மதமோ அல்லது புத்த மதமோ அனைத்து மதச்சடங்குகளுக்கும், விழாக்களுக்கும் சில இயற்கை ஆற்றல்களே அடிப்படையாகஇருக்கின்றன. பிரபஞ்சத்துக்குரிய ஒழுங்கின் மீது எல்லா நாடுகளும் அமைக்கப்பட்டு புனிதமுடனும் மதச் சார்பற்ற நிலையுடனும் இணைக்கப்பட்டுள்ளன. நான்கு மண்டலங் களின் ஒன்றிலிருந்து தனது மையத்தை நெருங்குவது மூலமே ஒன்று உலகில் இருந்து ஆன்மிகத்துக்குச் செல்கிறது. ஓர் அரசனும், தலைநகரமும் பிரபஞ்சத்தின் மையத்தில் இருக்கின்றன. பிரபஞ்சக் கோட்பாடு மற்றும் மாந்திரீகக் குறியீடுகள் யாவும் அரச சக்தியை வெளிப்படுத்துகின்றன.

மையத்தில் உள்ள மலையின் நுட்பமான மாதிரி வடிவமே கோயில் என்ற முக்கியமான கருத்தே கெமர் கலைகளில் ஆழமான தாக்கத்தை உண்டாக்கியது. ஒரு சில சிறிய மாற்றங்கள் சூழ்நிலை களில் இருந்தாலும் இவையே இந்துமத, புத்தமத புராணங்களில் தோன்றின. பொதுவான கருத்துகள் ஒரே மாதிரி யாகவே இருக்கின்றன. புராணங்களின் படி இந்த உலகம் மையமான நிலப்பகுதியைக் கொண்டிருக்கிறது. இந்த நிலப் பகுதியின் மையமாக மேருமலை என்ற அண்டத்துக்குரிய மலை ஒன்று இருந்தது. அதுவே உலகின் அச்சை குறியிட்டு விண்ணுலகங்களைத் தாங்கிக் கொண் டிருக்கிறது. அது மத்திய ஆசியாவிலுள்ள இமயமலையுடன் தொடர்பு கொண்டது.

பொது மையம் கொண்ட ஆறு அல்லது ஏழு மலைகள் சங்கிலியாக மேருமலை யைச் சுற்றி அமைந்தவாறு ஞானம் நோக்கிய அடுத்தடுத்த நிலைகளைப் பிரதி பலிக்கின்றன. இவை ஏழு சமுத்திரங் களால் பிரிக்கப்பட்டுள்ளன. வெளிப் புறத்தில் உள்ள “எல்லையற்ற சமுத் திரத்தை உள்ளடக்கிய பெரிய கற்சுவர், உலகை சுற்றியுள்ள மலையை குறிக் கிறது. சுற்றியுள்ள அகழி சமுத்திரத்தைக் குறிக்கிறது. சமுத்திரத்துக்கு அப்பால் விண்ணின் நான்கு திசைகளின் ஒவ்வொன் றிலும் ஒரு தீவைப் போன்ற நிலப்பகுதி இருப்பதாக புத்தமத கோட்பாடு நம்புகிறது.

மலைக்கு மேலே விண்ணுலகங்களின் அடுக்குகள். மேரு மலை உச்சியில் கடவுள்களோ அல்லது ஆட்சியாளர்களோ, வாழ்கிறார்கள். இந்த மலையின் அடிவாரத்தில் விசித்திரமான மிருகங்களும் வாழ்கின்றன. இங்கே முனிவர்கள் தவம் செய்கிறார்கள். நான்கு முக்கிய திசை களின் ஆட்சியாளர்களின் வாழும் இடமாக இது விளங்குகிறது என்று புத்தமதம் கூறுகிறது. இந்து மதத்தின்படி மேரு மலையை இந்திரன் ஆட்சி செய்கிறான். அங்கே பிரம்மனும் மற்ற கடவுள்களும் வாழ்கின்றனர்.



அங்கோர் காலத்தின் ஆரம்பத்தில் ஒவ்வொரு மன்னரும் நிர்மாணித்த கோயில் - மலை கட்டடக் கலையில் நிலவும் மூன்று முக்கிய பிரபஞ்சக் கோட்பாட்டை விளக்கும் குறியீடுகளாகவே திகழ்கின்றன. மேரு மலையின் நுட்பம், அதை உள்ளடக்கிய கற்சுவர் மற்றும் விண்ணுலக சமுத்திரத்தைக் குறிக்கும் சுற்றியுள்ள அகழி. கோயில்களை நோக்கிச் செல்லும் அனேக பாதைகள் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள பாலத்தைக் குறிக்கின்றன.
ஆரம்ப காலத்தில் மலைகள் மீதே கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. பிற் காலத்தில் தலைநகரங்கள் சமவெளிகளில் அமைந்தபோது செயற்கையான மணற் குன்றுகள் நிர்மாணிக்கப்பட்டன. அடுக்கு களாகக் கட்டப்பட்ட மேடைகளினால் அவற்றிற்குக் கூடுதலான உயரம் கொடுக்கப்பட்டது. இது கெமர்களின் புதுமையான கண்டுபிடிப்பு. இந்தியாவுக்குத் தெரியாதது இதன் உச்சியிலே லிங்கம் வைக்கப்பட்டபோது, சிவன் உறைவிடமான கையிலாய மலையாக மாறியது.

நான்கு திசைகளுக்கும் சோதிட பண்புகள் உண்டு. சூரியன் உதிக்கும் கிழக்குத் திசை மங்கலகரமானது. வாழ்வை குறிக்கிறது. ஆண்களின் படைப்புத் திறனை குறிக்கிறது. பெரும்பாலும் எல்லாக் கோயில்களும் கிழக்கு முகமாகப் பார்க்கும் வாயிலாகவே நிர்மாணிக்கப்பட் டுள்ளன. அமங்கலத்தைக் குறிக்கும் மேற்கு திசை மரணத்தை, அஸ்த மனத்தை, தூய்மை இன்மையையும், மங்கலகரமான வடக்கு அதனுடைய வலிமையினால் யானையோடு தொடர்பு

(தொடர்ச்சி 27ஆம் பக்கம்...)



# உணவுக்கு...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

6. மற்றவர்களின் உணவை திருடி உண்ணுகிறீர்களா?
7. உணவினை அதிகம் உண்ணுகிறேன் என்று குற்ற உணர்வு ஏற்படுகிறதா?
8. எல்லாவற்றையும்விட உணவுக்கு முக்கியம் கொடுக்கின்றீர்களா?

இதற்கெல்லாம் சாதகமாக பதில்கிடைத்தால் அவர்கள் உணவுக்கு அடிமையானவர்கள் என்றே கொள்ளலாம்.

எனவும் திடமாக நம்பவேண்டும். எனினும் பலர் இவ்வாறான உணவுப் பழக்கங்களில் இருந்து விடுவதில் தோல்வியும் கண்டுள்ளனர். இப்படியானவர்கள் உளவியலாளர்கள் அல்லது உளச்சிகிச்சையாளரின் உதவியை நாடவேண்டும். அல்லது இவ்வாறுஉணவுக்கு அடிமையாகி அதிலிருந்து விடுபட்ட ஒருவரின் அனுபவங்களையும் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான பல படிவங்கள், உள்ளன. இதனை அறிய இணையதளங் களுக்கு சென்று அறியலாம். Overeaters Anonymous, foodaddictsanonymous, Food Addicts in Recovery Anonymous போன்ற தளங்களுக்கு சென்று பார்வை



உணவுக்கு அடிமையாவதிலிருந்து நீங்குவதற்கு சில நடவடிக்கைகளை எடுக்கலாம்.

இதற்கான வழிகளில் ஒரு மாதிரிவடிவ செயல் பாட்டினை மேற்கொள்வதும் நலம்.

1. உணவுடன் ஒரு ஆரோக்கியமான தொடர்பு கொள்ளவேண்டும். அதாவது முதலில் ஒரு உணவுப்பிரியர், நல்ல ஆரோக்கியமான உணவுகளை மட்டுமே உண்ண வேண்டும் என எண்ண வேண்டும்.
2. பாதுகாப்பில்லாத உணவுக்கு ஒரு எல்லையை வகுக்க வேண்டும். அதாவது தமக்கு ஊறுவிளைவிக்கும் அல்லது ஆசையை தூண்டும் உணவு எது என அறிந்து அதனை வீட்டில் வைத்திருக்காது தவிர்க்கலாம். உதாரணமாக ஐஸ்கிரீம், சொக்கிளேற் பிஸ்கற் வகைகள்.
3. ஓர் அமைப்பு முறையான உணவு திட்டத்தினை ஏற்படுத்த வேண்டும். தமக்கு ஒவ்வாத உணவுகளை தவிர்த்து நல்ல உணவுகளை மட்டும் வரையறை செய்து கொள்ளலாம்.
4. உணவுகளின் நலன்கள் பற்றிய விபரங்களை சேகரிக்கலாம்.
5. இது சம்பந்தமான நிபுணர்களிடம் ஆலோசனை பெறலாம். இவர்கள் எப்படியும் இந்த உணவுப் பிரியர்களுக்கு உதவ முன் வருவார்கள்.

மேற்கூறிய வழிகள் தவிர வேறு முறைகளையும் கையாளலாம். ஒருவர் தனக்கு எந்தெந்த உணவுகளில் கடுமையான விருப்பம் ஏற்படுகிறது எனத் தெரிந்து கொண்டு அதனை எழுதி அதனை தவிர்க்க முயலலாம். எங்கெங்கு திடீர் உணவகங்கள் உள்ளன? அங்கு ஆரோக்கியமான உணவுகள் உள்ளதா என அறியலாம். தனக்கு ஏற்படக்கூடிய சாதகமான பாதகமான விடயங்களை எழுதலாம். அதில் உள்ள விபரங்களை சமையல் அறையில் கூட வைக்கலாம். எப்போதிருந்து இந்த உணவு அடிமைத்தன்மையை நீக்கப்போகிறேன்

யிடலாம். அத்துடன்"Food Addiction Treatment" என்ற பகுதிக்கு சென்றால் பல ஆலோசனைகளை பெறலாம்.

கனடாவில் "Food addiction rehab in Canada" நிறுவனம் இந்த விடயத்தில் உதவுகிறது. ஒருவர் தனக்கு உணவுக்கு அடிமையாதல் பிரச்சினை உள்ளதென்றால் அதற்கு கவலைப்படவோ வேதனைப்படவோ தேவையில்லை; வெட்கப்படவும் தேவையில்லை. இதுவும் ஒரு ஒழுங்கீனம் என்பதனை உணரவேண்டும். சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட அளவினருக்கு இப்பிரச்சினை உள்ளது என்பதனை உணரவேண்டும். Eating Disorder hope நிறுவனம் இந்தப்பிரச்சினையிலிருந்து விடுபட பல சேவைகளை வழங்குகிறது.

சிலருக்கு மருத்துவ சிகிச்சைகளும் தேவைப்படலாம். முதலில் அறிவுபூர்வ சிகிச்சை செய்து அதில் மாற்றம் ஏற்படாது விட்டால் ஏனைய மனநல வைத்தியம் போன்று சில மருந்துகளை பாவிக்க நேரிடலாம். தற்போது உணவு ஒழுங்கீனத்திற்காக Lisdexamfetamine Dimesylate என்ற மருந்து பாவனையில் உள்ளது. ஒரு உளச்சிகிச்சையாளர் மட்டுமே இதனை வழங்கமுடியும். நூறு தடவை இப்பிரச்சினையிலிருந்து விடுபட முயற்சித்தவர்கள் கூட தோல்வியுறலாம். ஆனால் 101வது தடவை சரிவரலாம் அல்லவா! எனவே தொடர்ந்து முயற்சி செய்வது அவசியம். தற்போது உளமருத்துவர்கள் (Psychintrist) உடல் பருமனுக்காக வழங்கும் மருந்துகள் இந்தப் பிரச்சினைக்கும் உதவும் என்கின்றனர். எனினும் பல பக்கவிளைவுகள் இதில் உண்டு. எவ்வளவுதூரம் மற்றவர்களை நம்புவதனை விட பிரச்சினை உள்ளவர்கள் தாமாகவே மாற முயற்சி செய்யவேண்டும். அமெரிக்க, கனடா நாடுகளில் நூற்றுக் கணக்கான நிலையங்கள் புதிது புதிதாக இதற்காக எழுகின்றன. காரணம் அங்குதான் இந்த உணவுக்கு அடிமையாவோர்

மிக அதிகமாகும்.

எல்லோரது உணவுப் பிரியமும் பொதுவாக ஒரே மாதிரியாகவே இருக்கும். அனைவரும் விருப்பமான சுவையில் பெரு விருப்பம் உள்ளவர்களாகவே இருப்பர். ஆனால் சிலர்

அதீத விருப்பம் உள்ளவராவர். எத்தனையோ விஞ்ஞான அறிக்கைகள் உண்மையில் இந்த உணவுக்கு அடிமையாதல் என்பது பெரிய பிரச்சினை எனவும் எல்லோரது வாழ்வையும் இது சிதைத்து விடலாம் எனவும் அறிவிக்கின்றது.

# அச்சுறுத்தல்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

பெரியார் பூமியாக இருப்பதே முதன்மையான காரணம். ஆனால், வகுப்புவாதப் பயங்கரவாதம் என்பது வேறு. எங்கோ திட்டமிட்டு எங்கேயோ நிறைவேற்றுகின்றனர். இத்தகைய வகுப்புவாதப் பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு காவல்துறைக்கே உள்ளது. தமிழகத்தில் ஊடுருவியுள்ள அந்தப் பயங்கரவாதிகளைக் கண்டறிந்து காவல்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தியா முழுவதுமே எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் கொல்லப்பட்டு வருவதைத் தடுக்க மத்திய அரசும் மாநில அரசும் என்ன செய்யவேண்டும் என நினைக்கிறீர்கள்?

கௌரி லங்கேஷ் கொலை தொடர்பாக அமோல் காலே என்பவர் கடந்த ஜூன் மாதம் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து நாட்குறிப்பு அப்போதே கைப்பற்றப்பட்டு, அதிலிருந்த கொலைப் பட்டியல் மத்திய உளவுத்துறைக்கு உடனடியாக சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. அந்த குறிப்பில் இருந்த 34 பேருக்கும் உடனடியாகப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்திற்கும் அறிவிப்பு அனுப்பி எச்சரிக்கை செய்து, சம்பந்தப்பட்ட இயக்கங்கள் உள்ளனவா? என்று கேட்டிருக்கவேண்டும். ஆனால், இதனையெல்லாம் செய்யாமல், ஓகஸ்ட் மாதத்தில்தான் எங்களுக்குத் தகவல் தருகிறார்கள்.

இப்படியில்லாமல் மத்திய அரசும் மாநில அரசும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் பயங்கரவாத அமைப்புகள் எந்தெந்த மாநிலங்களில் இருக்கிறதோ, அதனைக் கண்டறிந்து சம்மந்தப் பட்டவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும். கௌரி லங்கேஷின் கொலையாளிகள் 'சனாதன் சன்ஸ்தா' அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. அதில், 60க்கும் மேற்பட்டோர் ஆயுதப் பயிற்சி எடுத்தவர்கள் இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. அதன் உண்மைத்தன்மையை மத்திய, மாநில அரசுகள் உடனடியாகக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியிடம் புகார் கொடுத்துள்ளீர்களே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

தமிழக அரசின் சார்பில் இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை. ஆனால், புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி எங்கள் முன்னிலையிலேயே காவல்துறையிடம் பேசினார். உடனடியாக உத்தரவுகளையும் வழங்கினார். தற்காலிகமாக என் வீட்டிற்குக் காவல் போட்டுள்ளனர்.

இந்தியாவில் சமீபத்தில் வரவர ராவ், சுதா பரத்வாஜ், கௌதம் நவ்லகா, அருண் பெரேரா, வெர்னன் கன்சல்லெஸ் ஆகிய ஐந்து தலித் மற்றும் இடதுசாரி சிந்தனையாளர்களை கைது செய்து வீட்டுக்காவலில் வைத்துள்ளார்களே, இதை எப்படி பார்க்கிறீர்கள்?

ஒருபக்கம் பயங்கரவாதக் குழுக்களின் மூலமாகக் கொலை செய்வது மற்றொரு பக்கம் காவல்துறை மூலம் பொய் வழக்குப் போட்டு அச்சுறுத்துவது என்று சிந்தனையாளர்கள் மீது இருமுனைத் தாக்குதல் நடத்தப்படுகிறது.



ஒரு சமூகத்திற்கு சிந்தனையாளர்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்?

பூகம்பம் வருவது பறவைகளுக்குத்தான் முதலில் தெரியும் என்பார்கள். அதுபோல, இந்த சமூகத்திற்குக் கேடு வருவதை முதலிலேயே நுண்ணுணர்ந்து சமூகத்திற்கு அறிவிப்பவர்கள் சிந்தனையாளர்கள்தான். அதனால்தான், அவர்களைப் பயங்கரவாதக் குழுக்கள் குறி வைக்கின்றன. எங்கு சுதந்திரமான சிந்தனைக்கு இடம் இருக்கிறதோ, எந்த சமூகம் சிந்தனையாளர்களைப் பாதுகாக்கிறதோ, அச்சமூகம் மட்டும்தான் தன்னுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். சிந்தனையாளர்களுக்கு மதிப்பளிக்காத சமூகம் தன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.

ஏழு பேர் விடுதலை பற்றி?

ராஜீவ் கொலை வழக்கில் சிறையிலுள்ள பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரையும் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 161இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலைசெய்ய தமிழக அரசு ஆளுநருக்குப் பரிந்துரை செய்திருப்பதை வரவேற்கிறேன். ஆளுநர் தனது முடிவை காலந்தாழ்த்தாமல் அறிவிக்க வேண்டுகிறேன்.

CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES
www.thecanadiancollege.ca



OUR PROGRAMS COULD
CHANGE YOUR LIFESTYLE

WE ACCEPT
SECOND CAREER AND INTERNATIONAL STUDENTS

Please call for free sessions

IT PROGRAMS
Network (LAN/WAN) Administration
Systems Administrator (Linux/ Unix)
Cisco and Red Hat Engineering
Cloud Systems Engineer
IT Support with Software Quality Assurance
Enterprise IT Management
Enterprise Linux Administration
ERP Information Systems Technical Consultant
Database Administration and Big Data Predictive Analytics

BUSINESS PROGRAMS
Business Administration
Supply Chain and Logistics Management
International Business Management – Finance
Computerized Accounting with Office Administration

MEDICAL
Medical and Health Office Administration

UPGRADE YOUR SKILLS WITH OUR SHORT COURSES
Artificial Intelligence
Big Data
Blockchain
Cloud Computing
Cloud Security
Data Science
MS Dynamics
Red Hat Engineer
System Automation
SAP
Unix Administration
Social Media Marketing
Search Engine Optimization

FOOD HANDLING COURSES
GMP & Basics of HACCP
HACCP Level 1
HACCP Level 2

LANGUAGE COURSES
IELTS Preparation
CELPIP Preparation
Business English
French

CHILDREN'S IT CLASSES
Programming
Video Editing
Animation
Graphic Design

CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES
Unit 108, 705 Progress Avenue,
Scarborough, ON M1H 2X1
(Bellamy & Progress, near Scarborough Town Centre)

email: learn@thecanadiancollege.ca

CALL NOW 416.850.1456

# MATHS & TUTORING

Guaranteed Math Improvement in 4 months or Full

MONEY BACK GUARANTEE of 4 months tution

7.5 hrs/wk =30hrs/month =~~$210~~ / $150/ month

- Math
- Science
- Physics
- English Reading
- Calculus and Vectors
- Advance Functions

Visit Web: Architecture and Living.org

Contact: 647- 705- 5508

**Mr.Symon Mozammel**
Principal Instructor
Diploma in Mechanical Engeering ( London UK )
B.Sc. in Civil Engineering ( London UK )

Architecture and Living Academy
Suite #2000, 1225 Kennedy Road
Scarborough, ON. M1P 4Y1

# மலர் வரதராஜா

## மார்க்கம் நகரசபை வேட்பாளர் வட்டாரம் 7

## வாக்குகள் மட்டுமல்ல... உங்கள் எண்ணங்களும் தேவை!

## இணைந்து பயணிப்போம்

தமிழ்ச் சமூகத்தின் மேல் மாறாத பற்றுறுதி கொண்டவர். தனது மக்களின் நலன்களுக்காக சிறுவயது முதல் செயற்பட்டு வருபவர். தனது சமூக சேவையாலும், தொண்டர் பணியாலும், அரசியல் ஈடுபாட்டாலும் தமிழ் மக்களாலும், ஏனைய சமூகத்தவராலும் நன்கு அறியப்பட்டவர்.

மார்க்கம் 7ஆம் வட்டாரத்தில் கடந்த 12 வருடங்களாகவும், மார்க்கம் நகரில் 15 வருடங்களாகவும் வசித்து வருபவர்.

ரொரன்ரோ மற்றும் ஒன்ராரியோ Art Council நிதி மானிய கொடுப்பனவு வழங்கும் பிரிவில் Juror ஆகக் கடமையாற்றியவர். இதன்போது, அதுவரை காலமும் ஏனைய சமூகங்கள் மாத்திரம் பெற்று வந்த மானியக் கொடுப்பனவை தமிழ் கலைப்பள்ளிகளுக்கு பெற்றுக் கொடுத்ததன் மூலம் தமிழ்ச் சமூகத்தின் மீதான தனது பற்றுதலை உறுதிப்படுத்தியவர்.

தனது 18 ஆவது வயதில் தாயக மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை, ஏனைய சில மாணவர்களோடு இணைந்து ஒழுங்கு செய்து ஒட்டாவாவில் நடத்தியவர். தாயகத்தில் விதவைப் பெண்கள் மற்றும் அனாதைச் சிறுவர்களின் நல்வாழ்வுக்கான செயற்திட்டங்களில் இணைந்து பணியாற்றியவர்.

எம் மண்ணில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின் பின்னான நிவாரணப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

இளைஞர் விழிப்புணர்வு தொடர்பான தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றைத் தயாரித்து, தானே வழங்கியவர். மார்க்கம் முதியோருக்கான "குளிர்கால ஆரோக்கிய வாழ்வு" என்ற செயற்திட்டத்தை வழங்கியவர்.

Cedarwood Public School பெற்றோர் சங்கத்தின் தலைவராக கடமையாற்றியவர். Business Plan Development and Business Plan Implementation நெறியில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்.

மார்க்கம் நகரப் போக்குவரத்து, நெரிசல் மற்றும் பொழுதுபோக்கு மையங்களின் பாதுகாப்பு குறித்த கரிசனையையும் தீர்வுகளுக்கான எண்ணங்களையும் கொண்டவர்.

மார்க்கம் நகரசபை செயற்பாடுகள், அதன் வட்டார வரையறை மற்றும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான பரிச்சயம் உள்ளவர்.



**சிந்தாத சிதறாத வாக்குகளே**
**எம் வெற்றியைத் தீர்மானிக்கும்**

*ஒரு தெரிவு ஒரே தெரிவு*


**வாய்ப்புள்ளவருக்கு வாக்களிப்போம்**
**எம்மிடத்தைத் தக்க வைப்போம்.**

**www.MalarVaratharaja.com | 416-841-3435 | malarvaratharaja@gmail.com**

Campaign office: 20 New Delhi Dr, Unit 96 (Markham & New Delhi Dr)

# COTTAGE RENTALS Starting at $349 per day

**Kirkfield**
Waterfront, 5 Bedrooms, 20 Sleeps.



**Kirkfield**
Lake access, 5 Bedrooms, 25 Sleeps.



**Maritime**
River access, 5 Bedrooms, 25 Sleeps.




**Robin**
Waterfront, 5 Bedrooms, 20 Sleeps.



**Fenelon Falls**
Lake access, 5 Bedrooms, 20 Sleeps.



**Maritime**
River access, 5 Bedrooms, 25 Sleeps.





**IN KAWARTHA LAKE AREA**
**1 hr FROM TORONTO**

* Amenities at the cottages include cutleries, utensils, beds, linens, TV, Wi-Fi, BBQ, Hot tub, Pool table, and fire pit.

**A.ANTON JEEVA**, FRI
Broker
**Dir: 416.575.5055**
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com | www.newcondoproject.ca/com

#1 RE/MAX
**Dynasty Realty Inc.** Brokerage*
**Tel: 905.471.0002**
8 Shadlock St. #7, Markham ON L3S 3K9
Independently owned & operated

# FBM
Focus Building Maintenance

## Hiring Manager தேவை

Focus Building Maintenance முன்னணி வியாபார துப்பரவு பணிசெய்யும் Company, ஒருமுகாமையாளரை பணிக்கமர்த்த விரும்புகிறது. முழுநேர வேலை செய்யக் கூடியவராகவும், துப்பரவு (Cleaning) பணியில் அனுபவம் உடையவராகவும், கணனி அறிவும், ஆங்கிலத்திலும், தமிழிலும் சரளமாக கருமமாற்றக் கூடியவராகவும் இருக்கவேண்டும். தகுதியானவர் விண்ணப்பிக்கவும்.

FBM is a leading commercial cleaning company is looking for a hiring manager full time with cleaning experience, basic computer literacy and excellent communication in English and Tamil, applications are invited.

Send resume to jobs@focuscleaning.ca or call us at 416-727-5410



**பதிவு செய்ய நேரில் வர**
235 Nugget Ave Unit 21, Scarborough ON

தொடர்புகளுக்கு | **416-276-3136** **416-283-2561**



**www.focuscleaning.ca**


தமிழர்களின் இன்றைய தெரிவு – கிள்ளி செல்லையா
மக்களை மதிப்போம்,
மக்களின் கருத்தை மதிப்போம்,
மக்களின் வாக்கை மதிப்போம்.
நான் கிள்ளி செல்லையா,
திருட்டுக்களும், குற்றங்களும், விபத்துக்களும் இல்லாத ஒரு பாதுகாப்பான சுற்றாடல்,
இடையூறுகள், தாமதங்கள் இன்றிய வீதிகள்,
அதிக நேரம் காத்திருக்கத் தேவையில்லாத போக்குவரத்துச் சேவை
இவை கடின உழைப்பாலும், சரியான திட்டமிடலாலுமேயே சாத்தியமாகும்.
எனது கடின உழைப்புடன் இவ்விடயங்களைச் சாத்தியமாக்க, வரும் தேர்தலில் நகரசபைக் கவுன்சிலருக்காகப் போட்டியிடுகின்றேன்.
என் மீதும், எங்கள் எதிர்காலத்தின் மீதும், நம்பிக்கையுடன் இணைந்து செயற்படுவோம்.
- கிள்ளி
KILLI CHELLIAH
FOR COUNCILLOR
MARKHAM, WARD 7
vote@killichelliah.com | 416-624-7562

# ஒன்ராறியோ மாகாண நகரசபைத்தேர்தல் தேர்தல்

## மார்க்கம் நகரசபையின் 7ஆம் வட்டார வேட்பாளர் கிள்ளி (கிள்ளிவளவன்) செல்லையாவுடனான கேள்வி பதில்...

**விளம்பரம் பத்திரிகை வழமைபோல இம்முறையும் சில குறித்த கேள்விகளை மார்க்கம் நகரில் வட்டாரம் 7இல் ஒக்ரோபர் 22ஆம் திகதி நடைபெற உள்ள நகரசபை தேர்தலில் போட்டியிடும் 5 தமிழ் வேட்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களின் பதிலை செப்ரெம்பர் 08ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கும்படி கேட்டிருந்தோம். நாம் அனுப்பி வைத்திருந்த வினாக்களுக்குத் தரப்பட்ட பதில்கள் அவர்களின் பெயர்களுக்கு கீழே தரப்பட்டுள்ளன. இதனை வாசிப்பதன் மூலம் தேர்தலின் நிலைப்பாட்டை அறியலாம். கேள்விகளுக்கு இதுவரை எமக்குக் கிடைக்கபெற்ற பதில்கள்**




**தமிழர் அதிகமாக வாழும் மார்க்கம் நகரசபையின் 7ஆம் வட்டாரம் என்பது பல வருடங்களாக ஒரு தமிழன் பிரதிநிதித்துவப்படுத்திய தொகுதியாகும். தற்போது நீங்கள் உட்பட ஐந்து தமிழர் போட்டியிடுவதால் வாக்குகள் பிரிவடைந்து எந்தவொரு தமிழனுக்கும் வெற்றி வாய்ப்பு இல்லை என்ற நிலை உருவாகாதா?**

இது ஒரு நியாயமான கேள்வி என்பதனை நான் மறுக்கப் போவதில்லை. மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்து தமிழனை பிரதிநிதியாகக் கொண்ட இந்தத் தொகுதி, வெற்றிடமாகலாம் என்ற முழுமையான நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் எனக்கு சுமார் ஒரு வருடத்திற்கு முன்பே இருந்தபடியால், தேர்தலில் போட்டியிடப் போவதாக ஒரு வருடத்திற்கு முன்னிந்தே பகிரங்கமாகத் தெரிவித்து வந்துள்ளேன்.
முன்னாள் நகரசபையின் இதேதொகுதி உறுப்பினர், கடந்த தேர்தலில் போட்டி யிட்டவர்கள் எனப் பலரும் எனது கோரிக்கையினை ஏற்றுக்கொண்டார். அத்துடன் பல அமைப்புகள், சங்கங்கள் குறிப்பாக மார்க்கம் முதியோர் சங்கம், கனடாவின் தமிழ் ஊடகவியலாளர்கள், தொகுதி மக்கள் பலரினையும் சந்தித்து ஆலோசித்த பின்னரே முதல் நபராக வேட்பாளர் மனுவினை சமர்ப்பித்தேன்.

இந்தத்தொகுதி வெற்றிடமாகினால், இது வரையும் எந்தவொரு தமிழனும் போட்டியிட முன்வரவில்லை என்பதால், எனக்கு ஆதரவு தருவதாக பலரும் தெரிவித்திருந்தனர்.

மே 01, 2018இல் முதல் நபராக உத்தியோக பூர்வமாக வேட்பாளர் மனுவினை நான் சமர்ப்பித்தேன் என்பதையும் பலரும் அறிந்திருப்பீர்கள்.

இவ்வாறான சிக்கல் நிலை உருவாகக் கூடாதென்றே பலருடன் ஆலோசனை பெற்று செயற்பட்டேன். இந்த இடத்தில் என்னால் என்ன செய்ய முடியும்? நீங்களே சொல்லுங்கள்.

**'நகரசபை' என்னும் கனேடிய ஜன நாயக கட்டமைப்பில் ஓர் உறுப்பினராகப் போட்டியிடும் உங்களைப் பற்றிய ஓர் அறிமுகம், தகைமைகள், பின்னணிகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

கல்வித் துறையில் நான் இலங்கைப் பேராதனை பல்கலைக்கழகத்தின் 'குடிமுறை பொறியியலாளர்' (Civil Engineer) ஆக 1998ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் பட்டம் பெற்றிருந்தேன். கனடா வந்து சேர்ந்த பின்பு "Schaeffers Consulting Engineers" என்னும் நிறுவனத்தில் சிலகாலம் பொறியியலாளராகப் பணியாற்றினேன்.

ரொறன்ரோ நகரின் பல கட்டிடங்கள், வீதிகள், பாலங்கள், நீர்ப்பாசனங்கள் ஆகியவற்றினை வடிவமைத்து தொடர்ந்து உருவாக்கம் செய்து கொடுக்கும் பணியில் கடந்த 50 வருடங்களாக இருந்த பல பொறியியலாளர்களுடன் சேர்ந்து பணி புரிந்தது நகரசபைப் பணியில் எனது ஆரம்பம் என குறிப்பிடலாம். தொடர்ந்து சுயமாகச் செயல்படும் 'றியல் எஸ்ரேட்' முகவர் தொழில் சாதகமான பாதையாகத் தெரிந்ததால் எனது தொழிலை மாற்றிக் கொண்டேன்.



எனது மனைவி கனடாவில் ஒரு 'முகாமைத்துவ கணக்காளர்' (Certified Management Accountant) என்னும் கணக்காளர் துறையில் பட்டம்பெற்று அத்துறையில் பணி புரிபவர். எங்களுக்கு இரு பெண் குழந்தைகள் உள்ளனர். தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 'மீசாலை' எமது தாயக மண்ணாகும். எனது தந்தையார் A.P செல்லையா அவர்கள், ஒரு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர். பளை மகாவித்தியாலய அதிபராக இருந்து தற்போது அமரராக விட்டார். முன்னொரு காலம் தென்மராட்சிப் பகுதியில் பல சமூகப் பணிகளுடன் ஈடுபாடு கொண்டு அப்பகுதி மக்களினால் நன்கு அறியப் பெற்றவர்.

எனது அன்னை தாயக மண்ணில் ஓர் ஆங்கில ஆசிரியை. தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் இவர் 80 வயதில் படித்து எம். ஏ. பட்டம் பெற்றவர். தாயக மண்ணில் மாதர் சங்கத் தலைவியாக இருந்து கணவனை இழந்த பெண்களின் வாழ்வுக்கு வழிகாட்டும் பணிகளை செய்தவர். கனடாவில் எனது அண்ணன் செந்தி செல்லையா அவர்கள் "தமிழன் வழிகாட்டி" என்னும் நிறுவனத்தினூடாக, மக்களையும், தமிழ் வர்த்தகர்களையும் இணைக்கும் பாலமாக செயல்பட்டு வருகிறார். ஈழ மண்ணின் கிராமங்களின் ஆய்வுகளை நூல் வடிவில் கனடாவில் கொண்டு வந்தவர்.

**கனடாவில் நான் பல வருட காலமாக பின்வரும் சமூகப் பணிகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன்.**

1. மார்க்கம் நகரில் நாம் தற்போது போட்டியிடும் தொகுதியில் உள்ள 'David Suzuki Public School' 'பெற்றோர் ஆலோசனை சபையில்' (Parent Council) அங்கத்தவராகவிருந்து, அங்கு கல்வி பயிலும் தமிழ் மாணவர்களுக்கும், அவர்களின் பெற்றோருக்கும் பல வழிகளிலும் உதவியாளனாக சில காலம் பணி செய்துள்ளேன்.

2. இதே தொகுதியில் நாம் இருக்கும் பகுதியில் உள்ள பல்லின மக்களைக் கொண்ட 'Box Grove Tax Payers Association' என்னும் அமைப்பில் தலைவராகப் பதவி வகித்துள்ளேன்.

3. 7ஆம் வட்டாரத்தில் பல வருடங்கள் இந்த வட்டார மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து வருகின்றேன்.

4. எனது வட்டாரத்தில் உள்ள சிலரை சேர்த்து வருடம் இருமுறை இரத்த தானம் செய்து வருகிறேன்.

5. தாயக மண்ணில் நான் படித்த சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் கனடாவில் இயங்கும் பழைய மாணவர் சங்கத் தலைவராக சில காலம் பணி செய்துள்ளேன்.

6. கனடாவில் இயங்கும் தென்மராட்சி சங்கத்தின் செயலாளராக சில காலம் பணியாற்றியுள்ளேன்.

7. 2009 போரின் முடிவில் அகதிகளாக்கப் பட்ட, அநாதைகளாக்கப்பட்ட எமது உறவுகளுக்குப் பணி செய்வதற்காக "அன்பு நெறி" என்ற அமைப்பினை உருவாக்கிய மூவரில் நானும் ஒருவன். அந்நிறுவனத்தின் கிளைகள் இலண்டன், அவுஸ்திரேலியா எனப் பரவலாக்கப்பட்டு தற்போது சிறப்பாக இயங்கி வருகின்றது. இந்தத் தேர்தல் காரணமாக அன்பு நெறியின் செயற்பாடுகளில் இருந்து விலகிக் கொண்டாலும், அவற்றுடன் உள்ள எனது தொடர்புகள், பணிகள் யாவும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

இந்தத் தேர்தலில் நான் நகரசபை உறுப்பினராகும் சந்தர்ப்பம் கிடைக்கா விட்டாலும், ஏதோ ஒரு வழியில் எனது சமூகப் பணி தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

**ஐந்து தமிழ் வேட்பாளர்களும் ஒருவர் மாறி ஒருவர் எனத் தொகுதியில் உள்ள தமிழ் வாக்காளர்களின் வீடுகளை தட்டி தங்களை ஆதரிக்குமாறு கோரும்போது அது அவர்களுக்கு வெறுப்பினை ஏற்படுத்தாதா?**

நிச்சயமாக ஒரு வகையான விசனம், சலிப்பு, வெறுப்பு என அவர்கள் மனதில் இருப்பதனை பல இடங்களில் காணக் கூடியதாகவிருந்தது. சில இடங்களில் அவர்கள் அதனைக் காட்டிக் கொள்ள வில்லை. நான் இப்படியான சந்தர்ப்பங்களில் எனது நிலைமையினை எடுத்துச் சொல்லியபோது பலர் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

இது ஒரு ஜனநாயக நாடு. தேர்தலில் போட்டியிடும் உரிமை, சலுகை, சுதந்திரம் ஒவ்வொரு கனடிய குடிமகனுக்கும் உண்டு. அதனை நான் உட்பட எவரும் தடுக்கவும் முடியாது. இதேநேரம் எவர் சரியான, தகுந்த நகரசபை உறுப்பினராக அதற்கு அப்பால் தமிழர்களின் பிரதிநிதியாக அவர்களுக்கும் நகரசபைக்கும் இடையில் ஒரு பாலமாக இருப்பார் என்பதனை மக்கள் தேர்தலில் தீர்மானிக்க வேண்டும். எவருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது மக்களுக்குரிய சுதந்திரம். அவர்கள் சுதந்திரமாக செயல்படட்டும்.

**நகரசபை உறுப்பினராக வர வேண்டும் என்ற விருப்பம் ஏன் வந்தது? தெரிவு செய்யப்பட்டால்**

(தொடர்ச்சி 27ஆம் பக்கம்...)

# நினைவில் நிற்பவை -1



- துறையூரான் -

முன்னுரை

எமது வாழ்க்கையில் எண்ணிலடங்காச் சம்பவங்கள், விடயங்கள், பாடங்கள் எனப் பலவகையானவற்றை வாசிக்கிறோம், பார்க்கிறோம், கேட்கிறோம். ஆனால் அவற்றுள் மிகச் சிறிய சதவீதமானவற்றையே எம்மால் ஞாபகத்தில் (நினைவில்) வைத்துக் கொள்ள முடிகிறது. எனவே எமது மூளையின் ஞாபகசக்தி எவ்வாறு செயல்படுகிறது என்பதை முதலில் பார்ப்போம். அதன்பின் எனது வாழ்வில் கடந்த ஏறக்குறைய 80 ஆண்டுகாலமாக நினைவில் நிற்கும் விடயங்களை கட்டுரைகளாகப் பதிவு செய்வதே என் நோக்கம். இது எனது சுயசரிதை அல்ல. ஆனால் எனது வாழ்வில் நிகழ்ந்த நினைவில் நிற்கும் சம்பவங்களை, இளைய தலைமுறையினரும் அறிந்து கொள்ள வேண்டும். அப்போது நான் பாவித்த பொருட்கள், எமது சுற்றாடலில் பாவனையில் இருந்த எத்தனையோ கருவிகள் இப்போது பாவனையில் இல்லை. எனவே அவற்றை நினைவுக்குக் கொண்டு வருவதும் அவற்றிற்கு விளக்கம் அளிப்பதும் இக்கட்டுரையின் நோக்கம். இது பலருக்கும் பயனுள்ளதாய் இருக்குமென நம்புகிறேன்.

எமது மூளையின் செயற்பாடுகளில் ஒன்று நினைவில் வைப்பது அதாவது சேமித்து வைப்பது. சேமிப்பு என்றால் செய்திகளை மூளையில் தேக்கி வைக்கும் ஒரு மந்தமான செயற்பாடு. இது மூன்று படிநிலைகளைக் கொண்டுள்ளது. அவையாவன

1. உணர்வுபூர்வமான ஞாபகசக்தி
2. குறுகிய கால ஞபாக சக்தி
3. நீண்டகால ஞாபக சக்தி

இவை நாளாந்தம் எம்மை வந்தடையும் வெள்ளக்கணக்கான செய்திகளை வடிகட்டும் ஒரு செயல் முறையாகும். இது எமது மூளைக்குச் செய்திப் பளுவைக் கூட்டாமல் நாம் புத்தியோடு வாழ வழி வகுக்கிறது. ஒரு செய்தியை நாம் மீளவும் ஞாபகப்படுத்துவதால் அது பெரும்பாலும் நீண்டகால ஞாபகசக்தியாகத் தேக்கி வைக்கப்படுகிறது. (உதாரணம் பாடம் படிப்பது) இந்நீண்டகால நினைவலைகள் மூளையின் ஒரு பகுதியில் மட்டும் சேர்த்து வைக்கப்படாமல் மூளையை மேற்பட்டை (Cortex) முழுவதும் பரந்து வைக்கப் படுகின்றன. (காள் லாஷ்லி (Karl S.Lashley 1890 -1958) மற்றும் வில்டர் பென்பீல்ட் (Wilder Penfield 1891 -1976)ன் ஆய்வு)

ஆரம்பத்தில் ஒரு செய்தி மூளையில் எவ்வாறான தாக்கத்தையும் உணர்ச்சியையும் ஏற்படுத்தியதோ அதேநிலையில் சேமிக்கப்படுகிறது. இது ஒரு நரம்புக்கலத் தொகுதியாகச் சேமிக்கப் படுகிறது. மேலும் இது குறியீட்டுப் பதிவாகப் பல இடங்களில் பதியப்படுகிறது. ஓரிடத்தில் இது அழிந்து போனாலும் மற்றைய இடங்களிலிருந்து இதனை நாம் மீளப் பெற்றுக் கொள்ளலாம். நினை வலைகள் நூலகத்திலுள்ள நூல்கள் போன்று அடுக்கி வைத்திருக்கப்படுமென்ற எண்ணம் தவறானது. இவ்வாறான நினைவுப் பதிவுகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

நரம்பு நோய்களோ அல்லது காயங்களோ மூளைக்கு ஏற்படாவிடில் அது எண்ணற்ற (numerous) விடயங்களை தொடர்ச்சியாக செய்து கொண்டே இருக்குமென அறியப் படுகிறது. எனவே மறதிக்குத் தவறான அல்லது பூரணமற்ற குறியீட்டுப் பதிவுகள் அல்லது அவற்றை மீளப் பெறுவதிலுள்ள சிக்கல்களே காரணம். எனவே குறியீட்டுப் பதிவுகள் மூளையில் எங்காவது ஒரு மூலையில் இருக்கும் என்பது தெளிவு. இவற்றை அறிதுயில் நிலை (Hypnosis) அல்லது உளவியல் சிகிச்சை (Psychotherapy) போன்ற செயல்முறைகள் மூலம் மீளப் பெறலாம். எனினும் இவை உண்மையானவையா அல்லது சிகிச்சையின் காரணமாக ஏற்பட்டவையா என நிச்சயமாகக் கூறமுடியாதுள்ளது.

எமது ஞாபக சக்தியைக் கூட்டுவதற்கு பின்வருவன உதவியாய் இருக்கும்.


1. ஆரோக்கிய வாழ்க்கைமுறை முக்கிய மாக நிம்மதியான உறக்கம்.
2. மருந்துகள் பாவித்து ஞாபகசக்தியை வலுப்படுத்துதல்
3. ஞாபகம் வைப்பதற்கு விசேட முறைகளைக் கையாளல்
4. மூளைப் பயிற்சி

இதுவரைக்கு மறதியும் ஞாபகசக்தியும் பற்றி மேலோட்டமாகப் பார்த்தோம்.

**எனது நினைவில் நிற்பவை**

நான் பிறந்து வளர்ந்தது கொழும்புத்துறை மேற்கிலுள்ள செட்டியார் குறிச்சி என்ற இடம். இது இலந்தைக்குளம் பிள்ளையார் கோவில், யோகர் சுவாமிகளின் ஆச்சிரமம் அமைந்துள்ள யாழ். மாநகரசபை எல்லைக்குள் உள்ள பகுதி. இப்பகுதியில் பூர்வீகக் குடிகள் நாட்டுக் கோட்டையிலிருந்து வணிக நோக்கத்திற்காக இங்கு வந்து குடியேறியவர்கள் எனப் பழைய தோம்புகளில் கூறப்பட்டுள்ளது. இலந்தைக்குளம் பிள்ளையார் கோவிலையும் இவர்களே கட்டுவித்தார்கள் என வரலாறு கூறுகிறது. ஆனால் எனது தந்தை வழி மூதாதையர் புங்குடுதீவிலிருந்து இங்கு வந்து குடியேறினார்கள் என்றும் அறியக் கிடக்கிறது. மேலும் இப்பகுதியில் பூநகரி, வேலணை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் இருந்தும் பலர் வந்து குடியேறியுள்ளனர். (கொழும்புத்துறை பற்றி விரிவாக எழுதிய கட்டுரை உதயன் பத்திரிகையில் பல ஆண்டுகளுக்கு முன் வெளிவந்தது.)

நான் பிறந்தது இணுவில் மகப்பேற்று வைத்தியசாலை. இங்கு கெங்கம்மா என்ற கேரளாவைச் சேர்ந்த வைத்தியர் கடமையாற்றிக் கொண்டிருந்தார். வசதியற்றவர்கள் இந்த வைத்தியசாலைக்கு கர்ப்பிணிகளை அழைத்துச் சென்று அங்கேயே குழந்தை பிறந்த பின்பும் சில நாட்கள் தங்கியிருந்து வீட்டுக்குச் செல்வது வழக்கம். அந் நாட்களில் அரச மருத்துவமனை யாழ்ப் பாணத்தில் கிடையாது. இணுவிலில் ஒரு தனியார் மருத்துவ மனை. இங்கே பணஞ் செலுத்தித்தான் வைத்தியசேவையைப்




பெற்றுக்கொள்ள வேண்டும். இங்கு நோயாளியோடு செல்பவர்கள் தங்கி இருப்பதற்கு நாளொன்றுக்கு 3 ரூபா கொடுத்தால் ஒரு அறையோடு சமையல் செய்யும் வசதியுள்ள சிறிய வீடொன்றைப் பெறலாம். அந்நாட்களில் 3 ரூபா மிகவும் பெறுமதியான காசு. எனது தாயாரும் இவ்வாறு தங்கியிருந்து என்னைப் பெற்றெடுத்தார். நான் தான் எனது பெற்றோருக்கு மூத்த பிள்ளை.

அந்நாட்களில் இரட்டை மாட்டுவண்டியில் சமையல் சாமான்கள் உடுப்புகள் யாவையும் ஏற்றிக்கொண்டு கர்ப்பிணியோடு ஓரிரு நெருங்கிய உறவினர்களும் சென்று அங்கு வாழ்ந்தனர். இணுவிலில் மரக்கறிகள் மலிவாகப் பெறக்கூடியதாக இருந்தது. இச் செய்திகளை நான் வளர்ந்த பின் நேரடியாகச் சென்று பார்த்தும் கேட்டும் அறிந்து கொண்டேன்.

அந்நாட்களில் பொருட்கள் யாவும் மிகவும் மலிவாக இருந்தன. ஆங்கிலேயர் இந்தியாவையும் இலங்கையையும் ஆட்சி செய்ததால் இரு நாடுகளுக்குமிடையே, போக்குவரவு செய்வதற்குத் தடை ஏதும் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து மதுரைக்கோ அல்லது சென்னைக்கோ பிரயாணஞ் செய்வதற்கு யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்திலேயே பயணச் சீட்டு வாங்கலாம். தலைமன்னாரிலிருந்து தனுஷ் கோடிக்கு கப்பலில் பிரயாணஞ் செய்ய வேண்டும். இதற்கு 2 மணித்தியாலம் எடுக்கும். இங்கு இருதட்டுக்கள் கொண்ட இரு கப்பல்கள் சேவையிலிருந்தன. எனவே இந்தியப்பொருட்கள் இலங்கையில் மிகவும் மலிவாகவும் தாராளமாகவும் கிடைத்தன. அந்நாட்களில் ஒரு முட்டை 5 சதம், 1 இறாத்தல் சீனி 10 சதம், 1 இறாத்தல் பாண் 12 சதம், அரிசி ஒரு கொத்து 50/60 சதம் மண்ணெண்ணை ஒரு போத்தல் 8 சதம் என்றால் பிற பொருட்களின் விலைகளை நீங்களே ஊகிக்க முடியும்.

நான் பிறந்த சில மாதங்களில் இரண்டாம் உலக மகாயுத்தம் இங்கிலாந்தில் ஆரம்பமாகியது. அதாவது செப்ரெம்பர் 1939இல் இது தொடங்கியது. நான் பிறந்தது மே 1ஆம் திகதி. ஜேர்மனியில் ஹிட்லர் ஆட்சி செய்த காலம். அவன் போலந்து நாட்டை ஆக்கிரமித்தான். பிரித்தானியாவும் பிரான்சும் அவனை வெளியேறச் சொன்னார்கள். அவன் மறுக்கவே போலந்துக்கு உதவி செய்ய இவ்விரு நாடுகளும் தமது படைகளையும் போர்க்கருவிகளையும் விமானங்களையும் அனுப்பின. எனவே இதனால் இந்தியாவிலும் இலங்கையிலும் பிற ஆங்கிலேய ஆட்சியுள்ள நாடுகளிலும் பதற்ற நிலை உருவாகியது. பெரும்பாலான பொருட்கள் அந்நாட்களில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வந்தன. குறிப்பாக மோட்டார் வாகனங்கள், துவிச்சக்கர வண்டிகள், தையல் மெஷின், விசிறி போன்ற பல மின்சார உபகரணங்கள் யாவும் அங்கிருந்தே வந்தன. இலங்கையில் ஒஸ்ரின் 40, மொறிஸ் மைனர், வக்சோல் (Vauxhall) கார்கள், றலி (Raleigh), றட்ஜ் (Rudge), ஹம்பர் (Humber) சயிக்கிள்கள் சிங்கர் மெஷின் போன்றவை மிகவும் பிரபல்யமானவை. இவற்றில் சில கார்களையும் சயிக்கிள்களையும் இன்னுஞ் சிலர் வைத்திருக்கிறார்கள் என்றால் அவை எவ்வாறு உறுதியானவை என்பது கூறாமலே விளங்கும். இப்போர் செப்ரெம்பர் 1945 வரை நீடித்திருந்தது. டிசம்பர் 1941இல் ஜப்பானியர் அமெரிக்காவின் ஹவாய் தீவிலுள்ள போர்துறைமுகத்தை விமானத்திலிருந்து குண்டுபோட்டுத் தாக்கினார். இதனால் அமெரிக்காவும் யுத்தத்தில் சேர வேண்டி நிர்ப்பந்தத்துக்கு உள்ளானது. அந்நாட்களில் கனடாவும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால் போரில் சேர்ந்து கொண்டது. கனேடிய வீரர்களும் விமானங்களும் ஆயிரக் கணக்கில் கலந்து கொண்டு உயிரை மாய்த்துள்ளனர். அப்போரில் தப்பிப் பிழைத்தோர் இன்னும் சிலர் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறனர்.

இப்போர்க் காலங்களில் யாழ்ப்பாணத்தில் பொருட்கள் யாவும் விலை ஏறியதுடன் தட்டுப்பாடாகவும் இருந்தன. அந்நாட்களில் அரிசி ஒரு கொத்து 3 ரூபாவுக்கும் கிடைக்காமல் பலர் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டனர். எங்களுக்கு 50 பரப்பு நெற்காணி பூநகரியில் இருந்தது. அதை இன்னொருவருக்குக் குத்தகைக்குக் கொடுத்திருந்தோம். அவர் ஒவ்வொரு விளைச்சலின்போதும் 10 மூட்டை நெல் அனுப்புவது வழக்கம். எனவே எங்களுக்குச் சாப்பாட்டுக்கஷ்டம் ஏற்படவில்லை. அயல் ஊரில் மரக்கறிகளும், இராச வள்ளிக் கிழங்கு, வத்தாளங்கிழங்கு, பனங்கிழங்கு போன்றவையும் வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், பப்பாளிப்பழம் போன்ற பழவகைகளுங் கிடைத்தன. எனவே யாழ். குடா நாட்டு மக்கள் சமாளிக்கக் கூடியதாய் இருந்தது. உள் நாட்டு விளை பொருட்களை ஊக்குவிப்பதற்கு அரசாங்கமும், விதை நெல், பசளை போன்றவற்றை இலவசமாக விநியோகித்தது. (தொடரும்)



# ஒன்ராரியோ...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

**எப்படி தங்களின் பணி தொடரும்?**

நான் நேரடியாகப் பார்த்து எனது மனதினை அணு அணுவாகக் கொன்ற சோகச் சம்பவம் ஒன்றினை இங்கு முதலில் குறிப்பிட்டு விட்டு விடயத்திற்கு வர விரும்புகிறேன்.

கடந்த ஒக்ரோபர் 22, 2015, இதே தொகுதியில் எனது வீட்டுக்கு அருகில் நான் 'பெற்றோர் ஆலோசனை சபை' உறுப்பினராக இருந்த "David Suzuki Public School" (Close to Fieldside Road & Riverkwalk Dr.) என்னும் பாடசாலையில் படிக்கும் ஏழு வயது சிறுமி, தனது சகோதரி மற்றும் தாயாருடன் பாடசாலை வந்தபோது, வாகனம் ஒன்று மோதிப் பலியாகியிருந்தார். அவரது சகோதரி உடல் காயங்களுடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டார். இச்சம்பவம் அந்த பிரதேசம், பாட-சாலை சுற்றாடல் பகுதி எங்கும் தொடர்ந்து கொஞ்சக்காலம் சோகத்தினை உருவாக்கியிருந்தது என்பது ஊடகங்களில் வெளி வந்த செய்தி. சரி இங்கு அடிப்படை தவறு எங்கே நடந்துள்ளது? அதுவே இந்த இடத்தில் எனது கேள்வி.

அந்தப் பகுதியில் இந்த விபத்தின் பின்பு 'வாகன ஓட்டங்களை அமைதிப்படுத்தும் அளவு முறைகள் (Traffic calming meas-ures) மிகக் குறைவு என்பதனை நகர-சபையே ஏற்றுக்கொண்டது என்ற செய்தி ஆங்கில ஊடகங்களில் வெளிவந்திருந்தது.

- ஒடுக்கமான வீதி முடக்கு (Narrowed Curve Road)
- எல்லாப் பக்கங்களுக்கும் உரிய நிறுத்துச் சைகை (All ways stop sign)
- நடை பாதை (Pedestrian Cross Walk)
- வேகத்தினை மட்டுப்படுத்தும் மேடுகள் (Speed Bumps)
- விரைவான ஓட்டத்தினைக் கட்டுப்படுத்தும் வளைவுகள் (Chicanes)



போன்ற ஓட்டங்களை அமைதிப்படுத்தும் சைகைகள், தடைகள் எவையும் உருவாக்கப்படவில்லை. நான் இதனை அவதானித்து தனி ஒரு மனிதனாக நகரசபைக்கு முறைப்பாடாக வழங்கியிருந்தேன். ஆனால் அங்கு எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை.

இந்தச் சம்பவமே நகரசபையின் அதிகார சபைக்கு நான் செல்லவேண்டும் என்ற ஓர் உத்வேகத்தினை எனக்குள் கொண்டு வந்தது. நகரசபையின் ஒவ்வொரு இடத்திலும், இடங்களின் நிலைமைகளுக்கு ஏற்றமாதிரி போக்குவரத்தினை ஒழுங்கு படுத்தும் கட்டுப்பாடுகளை உருவாக்கியிருந்தால் இப்படியான விபத்துக்களைத் தவிர்த்திருக்கலாம். இதேமாதிரி ஒரு சம்பவத்தில் இரண்டு வயதில் முன்பு எனது சகோதரியும் தாயக மண்ணில் பலியாகிய சம்பவம் எங்கள் எங்கள் குடும்பத்தினை இன்னும் சோகத்தில் மூழ்கடித்த துயரமாகும்.

நகரங்களில் உள்ள: கட்டிடங்கள், வீதிகள், வீதிகளின் பாதுகாப்பு அரண்கள், பாலங்கள், அணைக்கட்டுகள், நீரோடைகள் மற்றும் நீர்ப்பாசன கால் வாய்கள் என்பவற்றினை வடிவமைத்து தொடர்ந்து உருவாக்கம் செய்து ஒரு நகரசபையினையே உருவாக்கும் பொறியியல் துறையில் கல்வி பயின்று, அதேதுறையில் பணி புரிந்தமையால் அதே பார்வையிலேயே நகர சபையின் ஒவ்வொரு இடத்தினையும் நோக்கி எனது ஆர்வம் எப்போதும் இருக்கும்.

அந்த ஆர்வமே என்னை இங்கு இழுத்து வந்தது. நான் இங்கு தெரிவு செய்யப் பட்டால் நகர சபைக்கும் வட்டார மக்களுக்கும் இடையில் ஒரு பாலமாக இருந்து சேவை செய்வேன். அதுவே எனது குறிக்கோள்.

# அதிசய...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

கொண்டது. தெற்கு நடுநிலையான மதிப்பு உடையது.

பிரபஞ்சத்தின் கட்டமைப்பை வெளிப்படுத்துபவைகளாக எண்கள் கருதப்படுவதோடு அவையே இறைவனுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான விளைவுகளுக்கு வழி-வகையாகவும் இருக்கின்றன. கோயில்களின் அளவுகளைக் குறிக்கும் கணித வரைவுகள் முன் வைக்கப்பட்டாலும் அவற்றின் உண்மை நிலை சந்தேகத்துக்கு உரியவையாகவே இருக்கிறது. பிரபஞ்சத்துடன் இசைவோடு செயலாற்ற வேண்டுமென்றால் எண் கணித முறைப்படி கோயில்கள் நிர்மாணிக்க வேண்டுமென்ற இந்து மதக் கொள்கைகளையே கெமர்கள் கடைபிடித்தனர். கோயில்களின் அளவுகள் முழுமையாக நிறைவாக இருந்தால் பிரபஞ்சத்திலும் முழுமையும் நிறைவும் நிலவும். பூமிக்குக் கீழே எண்ணற்ற நரகங்களும், சொர்க்கங்களும் இருக்கின்றன. இந்த நரகங்கள் கிறுஸ்தவ மத நரகங்களோடு ஒத்திருப்பதில்லை. கெமரின் பிரபஞ்சக் கோட்பாட்டின்படி உள்ள நரகங்களில் பாவம் செய்தோர் தங்களது பாவங்களுக்குப் பிராயசித்தம் தேடும் இடமாகவே இருக்கின்றன. ஒவ்வொரு நரகமும் பயங்கரமானவை. அதன்பிறகு அவர்கள் மீண்டும் பிறந்து புதிய வாழ்க்கையைத் தொடங்குகிறார்கள். அங்கோர்வாட் தெற்கு பக்கத்தில் உள்ள பாஸ்ரிலிப் அரங்கில் 32 நரகங்களும் பாவங்களும், தண்டனைகளும் சித்தரிக்கப் பட்டுள்ளன. பூமிக்கு மேலே பல சொர்க்கங்களும் உள்ளன. கடைசிக்கு மேலே இருப்பது நிர்வாணா.ஒவ்வொன்றின் உயரத்துக்கேற்ப இந்தச் சொர்க்கத்தில் உள்ள வாழ்க்கைக் காலம் உயரும். பூமி நடுநிலையான இடம்.

(தொடரும்...)

JOBS! JOBS! JOBS!

TEMP EMPLOYMENT AGENCY



- General Labor
- Packers
- Machine operator
- Forklift operator

NOW HIRING

Fax: 416-292-9857 OR

Email: tempemployagency@gmail.com

80 Nashdene Rd. Building - D Unit 89 Scarborough ON. M1V 5E4

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **647.530.2816**

**NEILSON & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable, internet. Close to all facilities. Avail. immediately.
**416.283.5214 / 437.982.3330**

**KENNEDY & ST. CLAIR**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, internet, utilities. Close to TTC. Avail. immediately.
**647.302.5682 / 647.293.1351**

**KENNEDY & EGLINTON**
2 Bedroom furnished bsmt for rent. parking, laundry. No pets/No smoking. Working people preferred. Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **416.930.1171**

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. October 01, 2018.
**204.868.0849 / 416.819.8680**

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking. single preferred. Close to all facilities. Avail. immediately.
**416.759.9859 / 416.371.8101**

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Couple or Seniors preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.330.4327**

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.909.2773**

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom bsmt for rent. Parking, laundry, cable, internet. Family preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.953.0309**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.741.5335 / 647.946.7364**

**WARDEN & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, internet. Two minute walk to the bus stop Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.827.2431**

**HWY 7 & NINTH LINE**
1 bedroom bsmt for rent. Parking, laundry, internet. Close to all facilities. Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **647.505.1131**

மேலும் பக்கங்கள் 29, 30, 31, 32, 33, 34

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, internet. Close to all facilities. Avail. immediately.
**647.402.4435 / 647.339.2560**

**MIDDLEFIELD & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.289.5389**

**MORNINGSIDE & STAINES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, Female or family preferred. Close to all facilities. Avail. immediately.
**647.740.2434/ devica17@hotmail.com**

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom & 1 living room bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.299.4711**

**WESTNEY & ROSSLAND**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to All facilities. Avail. October 01, 2018.
**647.545.9204 / 647.409.9204**

**NINTH LINE & 14TH AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, one parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**905.294.9067 / 647.309.9067**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & DENISON**
1 Room for rent. Parking, laundry, internet. Female only. Close to all facilities. Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **416.908.1250**

## BASEMENT FOR RENT

**MARKHAM & LAWRENCE**
2 Room for rent.Sep. entrance, parking, laundry, internet, utilities. Close to all facilities. Avail. immediately.
**416.438.3724 / 647.712.5223**

## BASEMENT FOR RENT

***MORNINGSIDE & NIGHTSTAR***
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, utilities. Single or couple preferred. Close to all facilities. Avail. immediately.
**416.335.1292 / 416.938.1292**

## RENT / LEASE

***ROOM RENT, BASEMENT RENT, HOUSE RENT. Visit to :***
**www.vlambaram.com**
Classified section Page 28 and up

## ROOM FOR RENT

**VICTORIA PARK & LAWRENCE**
3 அறைகள் கொண்ட Bsmtஇல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. சகல வசதிகளும் அருகில் உள்ளன.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**MORNINGSIDE & SHEPPARD**
2 Rooms for rent. Parking, laundry, cable, internet. Close to all facilities. Avail. immediately.
**416.473.7705 / 647.203.2535**

**16TH AVENUE & MCCOWAN**
1 Room for rent. Laundry, internet, no parking. Single or student preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.532.1233**

**MARKHAM & ELSON**
1 Single bedroom for rent. Laundry, internet, utilities. Single preferred. Close to all facilities. Avail. immediately.
**416.819.8680 / 204.868.0849**

**KENNEDY & EGLINTON**
1 Room for rent in an apartment. Close to Kennedy subway, Yogas super market, new Kalyani Takeout. Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **647.763.2760**

**MARKHAM & STEELES**
2 Rooms for rent. Parking laundry, internet. Single preferred. Close to all facilities. Avail. immediately.
**647.402.4435 / 647.339.2560**

**MCCOWAN & SHEPPARD**
1 Room for rent a luxury condo. Sep. washroom. Female preferred. Close to all facilities. Avail. immediately.
**905.447.1306 / 647.835.3376**

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent in main floor. Free internet. Female / working people preferred. Close to Lawrence subway. Avail. October 01, 2018. **416.371.4252 / 416.316.7019**

**BRIMLEY & ELLESMERE**
1 Room for rent in a house. Only for girls. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.906.5013**

**WARDEN & FINCH**
1 Bedroom room for rent. Laundry internet. Close to all facilities. Avail. immediately.
**416.493.6126 / 416.276.6224**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom room for rent. Parking, laundry. Males Preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

## CONDO. FOR RENT

**FINCH & MIDDLEFIELD**
2 Bedroom condo. for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.282.2668**

## HOUSE FOR RENT

**HARMONY & TAUNTON (OSHAWA)**
4 Bedrooms, 4 washrooms house for rent. தனித்தனி அறைகளாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.917.8265**

**MIDDLEFIELD & MCNICOLL**
3 Bedroom house for rent. 2 washroom. Rent $1800 + 60% Utilities. No pets, no smoke, no alcohol. Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **647.855.2148**

**TAPSCOTT & FINCH**
4 Bedroom house for rent. Close to all facilities. Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **289.624.3787**

## BASEMENT FOR RENT

**NEILSON & MORNINGSIDE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Parking, laundry. Students or family preferred. Close to all facilities. Available. immediately.
தொடர்புகளுக்கு: **416.871.4567**

## BASEMENT FOR RENT

**KENNEDY & EGLINTON**
Bedroom , living room, dining & kitchen. Private entrance / good for working family. Renovated, neat & clean, all other facilities. Very convenient location-bus, subway etc. மிக வசதியான இடம்.
தொடர்புகளுக்கு: **416.264.3899**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. October 01, 2018. Iyappan கோயில் அருகில்.
தொடர்புகளுக்கு: **416.875.1020**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & 14TH AVE.**
2 Bedroom basement for rent. Sep. entrance, parking, laundry, internet. Close TTC, Hwy 407 and all facilities. Small family preferred. No smoking & No pets. Rent $1,250.00 all utility inclusive Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.726.8403**

## வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்:
**647.402.2937**

வீடு, அறை, நிலஅறை (**BSMT),** கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**CHURCH & ROSSLAND**

2 Bedroom bsmt for rent.
Sep. entrance, 2 parking, Laundry, internet. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**416.831.0942**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**

2 Bedroom bsmt for rent.
Sep. entrance, 1 parking, Laundry, internet. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**416.371.5444**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELLESMERE (NEILSON)**

1 Bedroom bsmt for rent.
laundry, utilities. Close to all facilities. Couple/family preferred. Avail. immediately.
**647.296.9565 / 416.439.6665**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**

1 Bedroom bsmt for rent.
Sep. entrance, parking, Laundry, internet, utilities. Couple preferred.
Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.4894**

## BASEMENT FOR RENT

**ROSSLAND & WESTNEY**

2 Bedroom bsmt for rent.
Sep. entrance, Laundry, internet. Close to all facilities.
Avail. immediately.
**250.613.8389 / 905.999.4195**

## HOUSE FOR RENT

**MCCOWAN & ALTON TOWERS**

3 +1 (in Basement) bedrooms & $2^{1}/_{2}$ washroom full house for rent. Close to all facilities.
Available. immediately.
**647.300.0417 / 647.968.0417**

## HOUSE FOR RENT

**MARKHAM & ELSON**

4 Bedroom & 3 ½ Washroom
2 Parking & Laundry.
Close to all facilities.
No smoke & No pets.
Avail. September 15, 2018.
Contact: **416-500-1142**

## ROOM FOR RENT

**BRIMLEY & FINCH**

1 Room for rent in 2 bedroom basement. Sep. entrance.
Only for student ( boys ).
Close to all facilities.
Avail. immediately.
**416.473.4717 / 416.609.0660**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

1 Bedroom in main floor for rent. Laundry, internet.
Close to TTC and all facilities.
Avail. immediately.
**416.567.1764 / 647.961.5520**

## APARTMENT FOR RENT

**MARKHAM & EGLINTON**

1, 2 & 3-Bedroom Apartments for Rent. Utilities Included. Clean, Renovated High-Rise Building. Near TTC, Schools & Shopping. Tamil Store in Building.
On-Site Laundry.
CALL: **416-264-2818**

## HOUSE FOR RENT

**MEADOWVALE & ELLESMERE**

3 bedroom & 1 full washroom
Full bungalow house for rent.
Big lot. Basement partial finished.
Rent $2,900 per month + Utilities.
தொடர்புகளுக்கு: **416.268.5296**

## HOUSE FOR RENT

**ELLESMERE & ORTON PARK**

3 Bedroom house for rent.
Parking, laundry, utilities.
Close to all facilities.
Avail. immediately.
**647.998.0181 / 905.471.2444**

## HOUSE FOR RENT

**WARDEN & HWY 401**

3 Bedroom house for rent.
Parking, Laundry.
Close to TTC, school, mall.
Avail. immediately.
**647.680.2947 / 289.660.0309**

## HOUSE FOR RENT

**HWY 401 & HARMONY (COURTICE)**

3 Bedroom brand new town house for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.999.4842**

## CONDO. FOR SALE

**MARKHAM & EGLINTON**

2+1 Bedroom & 2 Full washroom condo. for sale.
**Coming Soon Another Condo. For Sale**
Please Call @ **416.709.5000**

## HOUSE FOR SALE

**MORNINGSIDE & STAINES**

3 bedroom & 3 washroom townhouse for sale.
**We have more houses for sale & rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## HOUSE FOR SALE

**SCARBOROUGH**
**MARKHAM & EGLINTON**

2 Bedroom, 2 washroom condo. apartment with one parking & low maintenance fee for sale $299,900.00.

**AJAX**
**WESTNEY & DELANEY**

3 Bedroom, 2 Storey brick detached house with finished basement & attached car garage for sale $489,000.00.

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

மேலும் பக்கங்கள் 28, 30, 31, 32, 33, 34

## HOUSE FOR LEASE

**MARKHAM & CASTLEMORE**

3+1 Bedroom & 2½ washroom 3 level townhouse for lease. $2250 +Utilities. 1,750 Sq.ft., fully upgraded, balcony. Near hwy 407. No Smoke & no pets. Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **416.834.1081**

## மணமகள் தேவை

யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 34 வயது Diploma படித்து முடித்து சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு பெற்றோர் படித்த தகுந்த மணமகளைக் கனடாவில் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு: **416.669.6504**

## மணமகள் தேவை

வேளாளர் குலத்தில் பிறந்த 35 வயதுடைய கட்டாறில் வேலை செய்யும் மணமகனிற்கு கனடா அல்லது USA இல் மணமகள் தேவை. (குழந்தைகள் இல்லாத விவாகரத்தானவர்களும் விரும்பத்தக்கது)
**Viber:**
**+94.77.383.5061/ 416.276.8840**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கை துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.
**416.890.6497/**
**srisai2912@hotmail.com**

## இலவச திருமணசேவை

**இலவச திருமண சேவைக்கு**
தொடர்பு கொள்ளவும்
**905.607.3896**

## புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகத் தரமான புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.
கிடைக்கும் இடம் Warden & Finch, Morningside & Sewells. வரி கட்டப்பட்டது
தொடர்புகளுக்கு: **647.629.9095**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

I am working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.
**உங்களது** rooms , house or basement **இனை சட்டரீதியாக** University / College Students **இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட**
***HARI SANTHIRARAJAH - 647.262.8490***
HomeLife Future Realty Inc. Brokerage Inc.

## BASEMENT / ROOM WANTED

**For working professional person.**

கனடாவிலும் இலங்கை மற்றும் இந்தியாவிலும் பணிபுரியும் குடிவரவு ஆலோசகருக்கு ( Immigration consultant ) தங்கியிருந்து பணிபுரியக்கூடியவாறான Parking வசதியுடன் Basement / room தேவைப்படுகின்றது. இலங்கை இந்தியா நேரப்படி வேலை செய்வதால் இரவிலும் பணிபுரியக்கூடியவாறும் அடிக்கடி பயணப்படுவதால் மாதம் $600க்கு மேற்படாமலும் எதிர்பார்க்கப்படுகிறது. GTAஇல் Scarborough / Vaughan/ Mississauga போன்ற இடங்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: **647.717.8226**

## வாகன போக்குவரத்து

**Western** பல்கலைக்கழகம், விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி சுற்றாடல், மற்றும் குறுகிய தூரம்.

தொடர்புகளுக்கு: 416.880.5952

## CAR FOR SALE

**2008 HONDA CIVIC**

163,000km, No Accident & very good condition.

தொடர்புகளுக்கு:

**647.718.9562**

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

**NEILSON & MCLEVIN**

ஒரு வயது குழந்தையை வீட்டில் வந்து பார்த்துக்கொள்ள பெண் ஒருவர் தேவை. Babysitter wanted Hours 9:00am to 3:00pm

Pl. Call: **647.248.1904**

## வேலைக்கு ஆள் தேவை

**Downtown** இல் உள்ள Restaurant ஒன்றிற்கு காலை நேரம் Cleaning வேலைக்கு ஆள் தேவை. 10 நாட்கள் மட்டும். தினம் $100 கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **416.904.1975**

## RESTAURANT FOR SALE

**MORNINGSIDE & LAWRENCE**

Liquor license (42 seats ) உடன் Restaurant விற்பனைக்குண்டு.

Monthly rent $1500 மட்டுமே.

தொடர்புகளுக்கு: **647.606.1009**

## MINIVAN SERVICE

6 பேர் செல்லக்கூடிய Dodge Grand Caravan.

உங்கள் பயண தேவைகள் எதுவானலும் அழையுங்கள்.

**Call Ajanthan:**

**647.544.2515**

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

**BOVAIRD DR. E. & HEART LAKE RD (BROMPTON)**

வீட்டில் இருந்து குழந்தைப்பேறு பார்ப்பதற்கு பராமரிப்பாளர் ஒருவர் தேவை.

**416.402.4126 / 647.631.5942**

## DRIVERS WANTED

**SAYAN TRANSPORT LTD.**

Dz, Az, Bz Drivers wanted for straight truck.

Full time & Part time.

Payment option available.

Call or text : **647.309.5030**

**sayan.26@hotmail.com**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு:

பிறேம் - **647.835.5244**

## வேலைக்கு ஆள் தேவை

***Thai*** உணவகத்திற்கு (***Restaurant***) சமையல் அனுபவம் வாய்ந்த ஆண்களோ பெண்களோ வேலைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: **416.587.9118**

மேலும் பக்கங்கள் 28, 29, 31, 32, 33, 34

## பராமரிப்பாளர் தேவை

முழுநேரம் இரண்டு முதியோரை பராமரிக்க ஆள் தேவை.

Need a housemaid to take care of 2 seniors for full time.

தொடர்புகளுக்கு: **416.779.7563**

## OFFICE ASSISTANT WANTED

**SCARBOROUGH** வில் அமைந்திருக்கும் Realtor நிறுவனம் ஒன்றிற்கு Office assistant தேவை. ஆங்கிலம் கட்டாயம் சரளமாக தெரிந்திருக்க வேண்டும்.

Kannan Kankesu: **416.834.4200**

## தையல் வகுப்புக்கள்/Orders

**MARKHAM & LAWRENCE**

Saree Blouse, Skirt & Blouse, Ladies Items மற்றும் Saree Blouse Block எடுத்து தைப்பதற்கும் கற்றுக் கொடுப்பதுடன், மணப்பெண்ணுக்கும் blouse தைத்துக் கொடுக்கப்படும்.

**416.438.2552 /647.853.5524**

## AZ DRIVERS WANTED

Amero Logistics is currently looking for AZ Drivers for Toronto Montreal run & city drivers for city work. Need1 year experience & clean abstract. Pay .55 cents per mile plus waiting time after 2 hrs & pay weekly. For more info call **(647) 274-0300**

## CONSTRUCTION WORKERS WANTED

Dry wall framer-Tile workers

5 days work.

**Contact Ken:**

**416.523.7933**

## வேலைக்கு ஆட்கள் தேவை

Part time & Full time வேலைக்கு ஆட்கள் Night Day & Night time. Starting $17 per hour. ஆண்களுக்கு மட்டும். Must have G Licence. Down Town Area தெரிந்திருக்க வேண்டும்.

**416.453.0000/416.520.4746**

**(call only 9a.m - 5p.m)**

## LOT PERSON / AUTO DETAILER WANTED

SCARBOROUGH வில் அமைந்துள்ள Used Car Dealer Ship ஒன்றிற்கு வாகனங்களை Cleaning செய்ய, Display Lot ஐ பராமரிப்பதற்கு ஆட்கள் தேவை. Must have Ontario valid Driver Licence. Full / Part time position available.

தொடர்புகளுக்கு: **416.419.2300**

## வேலை வாய்ப்பு / HELP WANTED

**தமிழ் உணவகம்** ( MCCOWAN & 16TH AVE.)

**MANAGER, CASHIER, DISHWASHER**

**KITCHEN HELP & TAMIL FOOD COOK**

PART TIME (Evening only) & FULL TIME. Able to lift 50LB.

Call: **647.802.7021**

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**

**Pay top dollars.**

**Contact: 416.835.3475**

## HELP WANTED

**AJAX** இல் அமைந்துள்ள Resturant ஒன்றிற்கு உடனடியாக ஆள் தேவைப்படுகின்றது.

**KITCHEN HELPER / SHORT ORDER COOK.**

Please call - Kumar: **905.427.6760**

109, Old kingston Road, Ajax.

## AZ DRIVERS WANTED

Minimum 2 years experience.

Full time, Part time & on call.

**Please Call - Sankar: 416.732.6931**

## KITCHEN STAFF / DRIVER WANTED

FULL TIME / PART TIME FOR RESTAURANT – TO START IMMEDIATELY.

**CONTACT: 416-985-8341**

## HOUSE FOR RENT

**SEWELLS & HUPFIELD**

3 + 2 bedroom, 3 full washroom & 2 kitchen house for sale/rent.
Hardwood floor, double garage, 2 separate laundry, 4 parking.
Close to Bus, school ( 5 minute walk ), Shopping centres.
Avail. Immediately.

**416.315.4653 / 647.200.8907 / 647.550.5343**

## BILLBOARD SPACE AVAILABLE

**Limited quantity, act, fast spaces available in:**

- ***Pickering***
- ***Ajax***
- ***Whitby***
- ***Oshawa***
- ***Scarborough***




Please Call - ***Siva:*** **416.844.9750**

## BUY / SELL PROPERTIES IN SRILANKA

இலங்கையின் எந்தப்பகுதியிலும் காணி, வீடு, தோப்பு மற்றும் வியாபார ஸ்தாபனங்களை வாங்க / விற்க அல்லது இவை சம்மந்தமான சகல விதமான சட்ட ஆலோசனைக்கும் எம்மை அழையுங்கள்

**தொடர்புகளுக்கு: 416.261.1919**

**151 Nashdene Road, Unit 39, Scarborough, ON M1V 4C4**

## A-Z U.S.A. DRIVERS WANTED

**3,000 TO 3,800 MILES PER WEEK GURANTEED**

EXPERIENCED BASED PAY RATE **(0.45 - 0.70)**
SINGLE / TEAM
***NEW DRIVERS*** ALSO WELCOME !!!

**CONTACT - JAY : 202-956-8556**

## KITCHEN HELPER WANTED

***Richmond Hill or Downtown location***

**Please call - Ken : 647-298-0939**

**or email: info@thaibasil.ca**

## DRIVER WANTED

***Markham Boxgrove*** பகுதியில் இருந்து MDHS பாடசாலைக்கு Pick & Drop செய்வதற்கு தகுந்த ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். செப்ரெம்பரில் இருந்து உடனடியாகத் தேவை.

***647.242.9455 / 647.821.3533***

## ஈழ உறவுகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோம்

நமது சமுதாயத்தில் இடம்பெறும் தேவைகளை எமது சேவைகளால் பூர்த்தி செய்து அதன்மூலம் கிடைக்கப்பெறும் வளங்களை கொண்டு ஈழ உறவுகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திவருகிறோம்.

எமது சேவைகளில் சில:

தோசை & அப்பம் catering services. Private Piano lessons , Local transportation , Local delivery ,Cleaning etc. உங்கள் தேவையை எங்களுக்கு அறியத்தாருங்கள், நாங்கள் சிறப்பாக உங்கள் தேவையை பூர்த்தி செய்வோம்.

தொடர்புகளுக்கு: 647-992-4775 - www.Jobs2serve.net

## சொர்க்கம் திருமணசேவை

கனடாவில் வாழும் 30, 32 வயதுகளையுடைய பட்டதாரி மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களைத் தேடுகின்றோம்.
36 வயதுடைய Roman Catholic மதத்தைச் சேர்ந்த மணமகளுக்கு இலங்கையில் மணமகனைத் தேடுகின்றோம்.
மற்றும் இலங்கை இந்தியாவில் இருந்து நல்ல வரன்கள் எடுத்து தரப்படும்.

**416.666.1855 / 647.504.3336 (viber)**

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் கோண்டாவிலை சேர்ந்த 35 வயதுடைய சதய நட்சத்திரம் கும்பராசி, பட்டதாரி ஆசிரியை மணமகளுக்கு U.S.A யில் வாழும் மாமா, சித்தி கனடா அல்லது அமெரிக்காவில் இருக்கும் மணமகனை தேடுகின்றனர். U.S.A மணமகன் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **716.603.5134 / 347.444.6994**

## Musical Instruments - Buy/ Sell / Repair

- We sell / buy / repair all kinds of musical instruments.
- We buy your used Veena, Miruthangam or Harmonium in any condition.
- We pay cash or give credit to buy a new one.


உங்களிடமுள்ள பழுதடைந்த எல்லாவிதமான இசைக்கருவிகளையும் திருத்திக்கொள்ள அல்லது உயர்ந்த விலைக்கு விற்று புதிய இசைக்கருவிகளை வாங்கிக்கொள்ள அழையுங்கள்

**Trinity Instruments: 416.261.1919**

151 Nashdene Road, Unit 39, Scarborough, ON M1V 4C4



## A1 CEYLON
### COURIER SERVICES



சிறிய அளவிலும் பெரிய அளவிலும் Moving செய்து தரப்படும். புதிய பெரியதும் சிறியதுமான Cargo & Cube சாரதியுடன் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் வீட்டிற்கு வந்து முதற்தரமான போட்டோ வீடியோ சேவைகளை வழங்கும் A1 கொழும்பு & செல்ஃ பிரான்சில் போட்டோ வீடியோ நிறுவனத்தில் மற்றுமொரு புதிய சேவை
கனடாவில் உங்கள் வீட்டிற்கு வந்து பொதிகளை எடுத்து இலங்கையில் உள்ள நீங்கள் சொல்லும் விலாசத்தில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்படும்.

**முன்பதிவு அவசியம் Tel: 416 613 2999**

## COMPUTER REPAIR

**Laptop,Computer Repair, Virus Removal, Data Recovery, Upgrading, Networking, Printer Problems & Any Other Troubleshooting** அனைத்து விதமான **Computer** திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

**Please Call - Varun: 416.894.6244**

## MINIVAN SERVICE

11 பேர் செல்லக்கூடிய MINIVAN SERVICE வார இறுதியில் Montreal, Val morin Temple & Airport மற்றும் உள்ளிட சுற்றுலாவுக்கும் அழைத்துச் செல்லப்படும்.

தொடர்புகளுக்கு : **416.303.5682**

## சிறுநீரகம் தேவை

**38** வயதுடைய 2 வயதுப் பெண் குழந்தையின் தந்தைக்கு A+ மற்றும் O வகை இரத்த மாதிரி உடையவர்களின் சிறுநீரகம் (kidney) உடனடியாகத் தேவைப்படுகிறது. தானம் செய்ய விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**647.975.3962**

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

***Scarborough* – Morningside / Sheppard – Basement**
(1Brm+1Bath) Close to all Amenities. Pvt entrance. Available from 1st September. Suitable for working individual or a couple **[Asking$800/m]**

***Scarborough* – Nielson / Sheppard – Condo Apt**
(2Brm,1Bath) Well Maintained. Open Concept, Walk To Mall, Groceries, Medical Blding. Eat In Kitchen. Walkout To Balcony. Close To mosque, Churches, Schools. Ttc At Doorstep. **[Asking $1600/m]**

***Scarborough* – Finch / Brimley– Full house**
(3Brm, 3Bath) Move In Condition. Steps To Finch Ttc, School, Park, All Amenities And Shopping. **[Asking $2100/m]**

***Scarborough* - Sheppard / Dvp – Condo Apt**
(1Br + 1Bath) On Sheppard/Hwy 404/Hwy 401. Stylish, Bright And Spacious, S/Steel Appliances. Granite Kitchen Countertop, Huge Balcony And Laminate Flooring. 24 Hours Security, Step To Fairview Mall, Restaurants, Shops, Bank, Sunway/Ttc/Bus Stop And More **[Asking $1700/m]**

***Toronto* – Bathurst / Front – Condo apt**
(1Brm, 1 Bath) Luxury Brand new condo, Newer Appliance, Nice view,24 hr security. Close to all amenities. **[Asking $2200/m]**

***Toronto* – Heath/ Avenue – Condo apt**
(1Brm, 2 Bath) Spacious Vacant Property, Has A Nice Deck, W/O To Large Patio, Big Wood Kitchen, Back Splash, Eat-In-Bar And Lot Of Storage Cabinets Fireplace. Close to all amenities. **[Asking $2250/m]**

***Markham* – Markham / Denison– Condo unit**
(1Brm, 1Bath) Near All necessary amenities (Walmart, Grocery Store, Banks, Shopping Centre, Costco, Home Depot, Canadian Tire, Restaurants) Steps To Ttc And Close To Schools. Energy Efficient Design/ Solar Panels To Keep Utilities Low. **[Asking $1700/m]**

***Markham* – *Markham* / Elson – Main Floor**
(4 Brm, 4Bath) Close To Costco, No frills, Great School, Shopping, Parks, Bank & Transportation. Available immediately. **[ Asking $2600/m]**

***Markham* – Markham / 16th Avenue – Town house**
(2Brm, 1 Bath) Brand new house, 3 levels, 3 parking, close to all amenities **[Asking $1900/m]**

***Markham* – Markham / Steeles – Main floor**
(4Brm, 3Bath) Close to shopping, schools, ttc, Banks, school, park and all amenities **[Asking $2100/m]**

***Oshawa* – *Taunton* / Harmony – Full house**
(4Brm, 4Bath) Bright and spacious, Hwd throughout main floor, Oak stairs, Close To All Amenities, Schools, Transit, Shopping, Hwy 407 & 401. . **[Asking $2100/m]**

***Ajax* – 401/Westney/Rossland – Main floor**
(4Brm, 3Bath) Bright & Spacious With Separate Living, Dining, & Family Room. Master Bedroom With W/I Closet & 5 Pc Ensuite. Large Backyard To Enjoy. Close To Prestigious Schools, Hwy 401, 407, Go Train, Shopping & All Amenities. **[Asking $2250/m]**

watsonpm1989@gmail.com

## MANAGING RESIDENTIAL PROPERTIES

Karu: 416-616-7278 Vithy: 416-509-9557 Watson: 416-417-8432

# We make it easy for you to be a Landlord!

***OUR SERVICES INCLUDE:***

- *Marketing, listing and showing properties*
- *Answering lease enquiries*
- *Tenant screening, pre-qualifying, negotiating lease and finding the right tenant*
- *Property inspections before and after renting*
- *Handle tenant enquiries*
- *rent collection and deposit to Landlord*
- *Eviction of bad tenants*
- *Scheduling Maintenance and repairs of property*
- *Year end accounting*
- *Renewal of lease*
- *Market value update*

***You can relax while we take care of your investment property!***

**WATSON**
PROPERTY
MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
**WatsonPM1989@gmail.com**
111 Grangeway Ave. Suit #301
(RBC Building) Toronto, ON M1H 3E9

# ALEXANDER IMMIGRATION SERVICES

CANADIAN IMMIGRATION & CITIZENSHIP CONSULTING FIRM

கனடா குடிவரவு குடியுரிமை ஆலோசனை நிறுவனம்

- Study Permit
- Spousal Sponsorship
- Express Entry
- Visitor Visa
- Citizenship Applications
- LMIA based Work Permits
- Visa Extension
- Super Visa - Parents
- Parents Sponsorship
- Business Immigration
- Provincial Nominees
- PR Card Renewals
- Post Graduate Work Permits
- Humanitarian Applications

தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளில் சேவை.
உன்னதமான தொழில்முறை சேவைக்கு அழையுங்கள்.

**Canadian Government Regulatory Body Licensed Immigration Consultant**

Hemalatha K Alexander, B.Sc, MBA, RCIC, Commissioner of Oaths
by Tel : +1 647 773 3673 or email : info@alexanderimmigration.ca

10 Milner Business Court Suite 354 Toronto M1B 3C6 ON Canada

## JOB JOB JOB

**PHARMACY & FINCH /MIDDLEFIELD & FINCH** பகுதியில் உணவகம் ஒன்றிற்கு Cashier, Srilankan style cook & Helper வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
நேரில் வந்து Apply செய்யவும். தொடர்புகளுக்கு: **416.318.9866**

## உடனடி வாடகைக்கு

வீடுகள், கொண்டோக்கள் வாடகைக்கு விட, வாடகைக்கு பெற்றுக்கொள்ள அழையுங்கள்: **416-816-9011**

மேலும் பக்கங்கள் 28, 29, 30, 31, 32, 34

வீடு, அறை, நிலஅறை (**BSMT**), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## *Personal Prayer To The Holy Spirit*



Holy spirit thou make me see everything and show me the way to reach my ideal. You who give the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me. I, in this short dialogue, want to thank You for everything and confirm once more that I never want to be separated from You no matter how great the material desire may be. I want to be with You and my loved ones in Your perpetual glory. Amen. Person must pray this 3 consecutive days without stating one's wish. After the 3rd day your wish will be granted no matter how difficult it may be. Promise to publish this as soon as your favor has been granted *-M.R*

Our Mother of Perpetual Help

## வாழும் திறன்

இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்தலுக்கான சிறப்பு வகுப்புக்கள்
பிரபல்யமான இந்திய சமய சாஸ்த்திர நிபுணர்
வி. கணேஷ் அவர்களால் Middlefield & Mcnicoll சந்திப்புக்கு
அருகாமையில் நடைபெறுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.
வி. கணேஷ்: **416.816.2563** மகேன்: **416.893.1222**
ஆறுமுகம் (**AGR**): **416.832.9467**

உன்னால் முடிந்தவரை உன் பணியினை நன்றாக செய்!
நாளை அதனிலும் நன்றாகச் செய்யும்
ஆற்றலை நீ பெறக் கூடும்! - நியூட்டன் -

## மணமகள் தேவை

யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த பட்டம் பெற்று சொந்தமாக வேலை செய்யும் 29 வயது மணமகனுக்கு பல்கலைக்கழக பட்டம்பெற்ற 24 - 28 வயதில் உள்ள திருவாதிரை, திருவோணம், புனர்பூசம் நட்சத்திரத்தில் மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: **tamilmarriageproposal@gmail.com**

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?



வைத்திய கலாநிதி
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796

## வேலைக்கு ஆட்கள் தேவை

# MARKHAM & STEELES

LINGAM CREAM HOUSE

- ✓ Full time / Part time Cook
- ✓ Srilankan / South Indian Cook
- ✓ Dish Washer
- ✓ அப்பம் செய்யத் தெரிந்தவர்கள்

முழு நேர/ பகுதி நேர வேலைக்கு ஆட்கள் தேவை

தொடர்புகளுக்கு:
**416.879.4190**

LINGAM CREAM HOUSE
6055 Steeles Ave. E., Scarborough ON M1X 0A7

## வாடகைக்கு கொடுப்பவர்களின் கவனத்திற்கு!

அண்மைக் காலமாக சிலர், தம்மிடம் வாடகைக்கு பெறுவதற்குரியவர்கள் இருப்பதாகக் கூறி பிழையான தகவல்களை வழங்கி உங்கள் ஆதனத்தை வாடகைக்கு எடுத்து கொடுப்பதுடன், வாடகையாளரிடம் பெறும் பணத்தை தமதாக்கி கொள்கின்றார்கள். இதனை சிலர் தொழிலாக, மிகவும் கவனமாகச் செய்வதால், பலர் இவர்களின் வலைக்குள் விழுந்ததாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. முகவராக அல்லது இடைத்தரகராக இவ்வாறு தொழிற்படு பவர்களிடம் மிகவும் கவனமாக இருப்பதால் நீங்கள் இவ்வாறானவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

இடைத்தரகர்கள் / முகவர்களைப் பற்றிய முழுத்தகவல்களை, ஆதனத்தை காட்டு வதற்கு முன்பாக பெற்று இவர்களைப் பற்றிய விபரங்களை உறுதி செய்தபின் உங்கள் ஆதனத்தை அவர்களுக்குக் காட்டுவதே சிறந்தது.

- விளம்பர நிர்வாகம்

# கண்களைக் காத்திட எளிய வழிமுறைகள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்




மனிதனின் உடலுறுப்புக்களாகிய ஐம்புலன் களுள் ஒன்று கண் என்றாலும், மற்றைய உறுப்புக்களை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்த செயல்பாடுகளைக் கொண்டது கண் ஆகும். எதையாவது ஒன்றைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லும் போது 'கண் போலக் காக்க வேண்டும்' என்று சொல்வதும் கூட இதன் முக்கியத்து வத்தை வலியுறுத்துவதாகும். எனவே, இந்தக் கண்களைப் பாதுகாப்பதிலும் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

கண்களில் ஏதேனும் சிறு தூசி விழுந்து விட்டால்கூட அதை அலட்சியமாகக் கருதாமல் அதை உடனே கவனிக்க வேண்டும். கண்களுக்கு கண்ட கண்ட மருந்துகளைப் பயன்படுத்துவது கூடாது. கண்டபடி கைகளால் தேய்ப்பதும் கூடாது.

தலைவலி தொடர்ந்து இருந்துவந்தால் கண்களைப் பரிசோதனை செய்து தேவையான சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.

கூடுமானவரை கண்களில் குறைபாடு நேராமல் பார்த்துக் கொள்வது நல்லது. பார்வையில் மங்கல் ஏற்பட்டாலும் உடனே பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.


சரியான போதிய வெளிச்சம் இல்லாத இடங்களில் அமர்ந்து படிப்பதைத் தவிர்ப்பது அவசியம். கூடுமானவரை படிப்பவரின் தலைக்கு மேல் பின்புறத்தில் இருந்து விளக்கின் வெளிச்சம் வருமாறு உட்கார்ந்து படிப்பது நல்லது. கண்களுக்கு அசைவு ஏற்படுத்தக்கூடிய வகையில் பேருந்தில் செல்லும்போது படிப்பதை தவிர்ப்பது அவசியம். குறிப்பாக மிகச் சிறிய எழுத்துகளைச் சிரமப்பட்டுப் படிக்கக் கூடாது.

இரவுநேரங்களில் நெடுநேரம் கண்விழித்துப் படிப்பதோ, எழுதுவதோ கூடாது. அதே போல் தொடர்ந்து நீண்ட நேரம் கண் களுக்கு தொல்லை தராமல் அவ்வப்போது சிறிதுநேரம் இடைவேளை கொடுத்துவிட்டுப் பின்னர் படிப்பது நல்ல பழக்கமாகும்.

ஏதேனும் கவனக் குறைவாக இருந்து கண்வலி ஏற்பட்டு விட்டால் கீழ்க்காணும் முறைகளின் மூலம் வலியைக் குறைக்கலாம்.

கரட்டைத் துருவிப்போட்டு சாறு எடுத்து அத்துடன் சிறிது தாய்ப்பாலையும் கலந்து கண்ணில் 3, 4 துளிகளை விட்டால் கண்வலி குணமடையும். கரட்டைச் சாறு பிழிந்து 150 மி.லி. அளவுக்கு தினமும் பருகுவதும் நல்ல குணம் தரும். அல்லது பச்சையாகவே தினமும் நான்கு அல்லது ஐந்து கரட்களைக் கடித்துத் திண்பது கண்களுக்கு மிக நல்லதாகும்.

பொன்னாங்கண்ணிக்கீரையை உணவில் அதிக அளவில் சேர்த்துக் கொள்வதும் கண் பார்வைக் குறைபாட்டை நீக்க வல்லதாகும். கரட், வெங்காயம் ஆகிய வற்றைத் துண்டுகளாக அரிந்து தயிரில் கலந்து அப்படியே சாப்பிட்டு வருவது கண்களுக்கு மிக நல்லது.



பொன்னாங்கண்ணிக்கீரை, கீழாநெல்லி, முக்கிரட்டை ஆகிய மூன்று கீரைகளையும் சம அளவில் எடுத்துக் கொண்டு கழுவிவிட்டு அம்மியில் வைத்து அரைத்து, மோரில் கலந்து தினமும் காலையில் 150 மி.லி. அளவுக்குப் பருகி வருவதன் மூலம் கண்பார்வை தெளிவாக இருந்து வரும்.

கண்களின் மீது சிலருக்கு வெப்பத்தின் காரணமாக கட்டிகள் தோன்றக் கூடும். அந்த நேரத்தில் சிறிதளவு மிளகை எடுத்து சிறிது வெந்நீர் விட்டு அம்மியில் வைத்து விழுதாக அரைத்தெடுத்து கட்டியின் மீது தடவினால் கட்டி குணமாகும்.

கடுக்காய், நெல்லிக்காய் ஆகியவற்றில் சில காய்களை எடுத்து சுத்தம் செய்து அத்துடன் 100 மி.லி. தண்ணீர் விட்டுக் காய்ச்சி பாதியளவாகச் சுண்டியவுடன் அடுப்பிலிருந்து இறக்கி அத்துடன் சிறிது நெய் சேர்த்து சாப்பிட்டு வந்தால் மங்க லான பார்வை விரைவில் தெளிவடையும்.

வெந்தயத்தைச் சிறிதளவு எடுத்துக் கொண்டு அத்துடன் செம்பருத்திப் பூக்கள் சிலவற்றைப் சேர்த்து நன்றாக அரைத் தெடுத்து, தேங்காய் எண்ணெயுடன் சேர்த்து வைத்துக்கொண்டு நாள்தோறும் தலைக்குத் தேய்த்து வந்தால் கண்கள் குளிர்ச்சி அடைவதுடன், கண் பார்வையும் துல்லியமாகத் தெரியும்.

புளியம்பூக்களைப் பறித்து வந்து தண்ணீரில் போட்டு கழுவியெடுத்து படுக்கைக்குப் போகும்வரை அதைக் கண்களின் மீது வைத்து துணியால் கட்டிக் கொண்டு படுத்துக் கொண்டு, காலையில் கட்டை அவிழ்த்து விடலாம். கண்வலி குணமாகும்.

கொத்தமல்லி இலைகளைக் கழுவிச் சுத்தம் செய்து நன்றாக அரைத்தெடுத்து சிறு உருண்டைகளாக உருட்டி வைத்துக்

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)



# கோலமாவு கோகிலா-திரைவிமர்சனம்



ஞா. ஆரணி

பொதுவாக ஒரு நடிகை ஒரு திரைப்படத்தின் பிரதம கதாபாத்திரமாக நடிக்கிறார் என்றால் அந்தப் பாத்திரம் ஆண் ஒருவர் நடிப்பது போலவே சித்தரிக்கப்பட்டிருக்கும். அதாவது நடிகை ஒரு Hero போல வெறித்தனமுடன் சுடவேண்டும், நாகரிகமாக உடை அணிய-வேண்டும். இல்லாவிட்டால், கதாநாயகி பெண்கள் படும் கஷ்டங்களில் சிக்கித் தவிப்பதே முழுப்படமாக இருக்கும். இப்படங்கள் ஆண்களுக்கு ஓர் எச்சரிக்கை கொடுக்கும் மிக நீண்ட சோகமான படங்களாக இருக்கும்.

நயந்தாராவும் முதல் கூறியமாதிரி நாகரிக உடை அணிந்த **Action** நடிகையாக சில படங்களில் கதாநாயகனுடன் சேர்ந்து சில காட்சிகளில் நடித்துள்ளார். ஆனால் கோலமாவு கோகிலாவில் இவரது கதாபாத்திரம் மேல் கூறிய இரண்டு வகைகளிலும் இல்லாமல் சிறப்பாகவும் வித்தியாசமானதாகவும் இருந்தது.

கோகிலா (நயந்தாரா) ஒரு பயந்த சுபாவமுடைய அறிவாளிப் பெண். தனது தாய்க்கு புற்றுநோய் இருக்கிறது என்றும், அதை குணப்படுத்த நிறையப் பணம் தேவை என்றும், அப்பணம் கிடைக்காவிட்டால் அவரது தாய் மூன்று மாதம் தான் உயிர் வாழ்வார் என்றும் அறிகிறார்.

இவ்வாறு கதாநாயகனுக்கு ஏதோ ஒரு அவசரத்திற்குப் பணம் வேண்டும் என்றும், அப்பணம் பெறுவதற்குப் பல சிக்கல்கள் வருவதைக் காட்டும் படங்கள் நிறைய உள்ளன. கோகிலாவும் இப்படித்தான் கஷ்டப்படுகிறார். தாயோ தான் இறப்பதற்குத் தயாராகிறார். பயந்த சுபாவமுடைய கோகிலாவோ தைரியத்துடன் தன்னால் அவரைக் காப்பாற்ற முடியும் என்கிறார். எவ்வாறு இதை அவர் செய்கிறார் என்பது தான் இப்படத்தின் கதை.

கோகிலா, தான் வேலை செய்யும் இடத்தில் மேலதிகாரியிடம் சம்பள அதிகரிப்புக் கேட்டால் அவர் வெளியில் தனிமையில் சந்திப்போம் என்கிறார். வெளியில் சந்திக்க வேண்டும் என்றால், நான் உங்கள் மேலதிகாரியைச் சந்தித்து உங்கள் வேலையையே எடுப்பேன் எனத் துணிவுடன் கூறும் கோகிலா வேலையால் நீக்கப்படுகிறார். **Massage parlour**வில் வரவேற்பாளராக வேலை செய்யும் கோகிலாவை மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என அவரது அப்பா கேட்கிறார். அதற்கு தான் செய்யும் வேலையில் எந்தத் தப்பும் இல்லை, அதுவே போதும் என்கிறார் கோகிலா.

இருந்தாலும் சிகிச்சைக்கு பணம் எடுப்பது சிக்கலாக இருக்கிறது. **NGO**களிடம் கேட்டால் அவர்களுக்குக் குழந்தைகளுக்கே உதவ முடியாத நிலையில் இருக்கும்போது முதியோரிற்கு எப்படி உதவலாம்



என்கின்றனர். வேறு இடங்களில் உதவி கேட்டால் அவர்களும் தனிமையில் சந்திக்கலாம் எனக் கோகிலாவிடம் கேட்கிறார்கள்.

கோகிலாவின் பிரச்சினைக்கு தீர்வு எதிர் பாராத விதமாக வருகிறது. போதைப் பொருள் கடத்துபவர்களிடம் எதிர்பாராமல் சிக்கும் கோகிலா அறிவுடன் அதை ஒரு சந்தர்ப்பமாக மாற்றுகிறார். அப்பாவியாக இருக்கும் கோகிலாவை ஒருவரும் சந்தேகிக்க மாட்டார்கள் என்பதால் கடத்தல் காரர்களும் அவரை வேலைக்கு சேர்க்கின்றனர். அவருக்குப் பணம் கிடைக்குமா? எனப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

படத்தில் வரும் கதாபாத்திரங்கள் தத்துருபமாக நடிப்பதால் படத்திற்கு ஓர் உண்மைத் தனம் வழங்கப்படுகிறது.இவர்கள் சில கோமாளித்தனமான விடயங்களை **Serious** ஆக செய்வதால் பார்வையாளர்கள் அதிகம் சிரிக்கிறார்கள். எனவே இது ஒரு **Black Comedy** வகையைச் சேர்ந்தபடம்.

போதைப்பொருள் கடத்தப்படுவதைப்பற்றி பல படங்கள் உள்ளன. சில நகைச் சுவையை முக்கிமாக்கி எடுப்பதால் அவை சிரிப்பு வரவைக்காமலும் கதையும் கவனத்துக்கு உரியதாகவும் இல்லாமல் போய்விடுகின்றன. சில படங்கள் சோக-மாகவே இருக்கின்றன. ஆனால் கோகிலாவின் கதை சுவாரசியமானதாகவும், தேவையான இடத்தில் கதைக்கு ஏற்ற முறையில் சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கிறது.

கோகிலாவை சேகர் (யோகிபாபு) என்பவர் காதலிக்கிறார். வழமைபோல் ஒருபக்கக்

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

# EDUCATION

## Review Questions18- 18

### ➢ PHYSICS 11

(i)Explain " whiplash" in automobile accident.

(ii) What is terminal velocity?

(iii) Discuss the factors which are likely to affect the terminal velocity of an object falling in the earth's atmosphere.

### ➢ ADV. FUNCTIONS 12

(i)

Prove , $\frac{2\tan x}{1+\tan^2 x} = \sin 2x$

(ii)

$\log_a x = 3$ and $\log_a y = -2$, determine $\log_a\left(\frac{x^2}{y^3}\right)$

## Answer Key : 18-17

### ➢ CHEMISTRY 11

At 20°C , in 10 ml of water 3g of $KNO_3$ and 0.8g of $NaHCO_3$ will only be dissolved.

If you 10ml of water into the mixture, the whole amount of (3g) of $KNO_3$ will be dissolved and (17.2-0.8)g of $NaHCO_3$ will not dissolve in it.

Separate 16.4g of pure $NaHCO_3$ by filtration.

(ii) Calculate the number of moles of each reactant

$K_2Cr_2O_7$= 0.9x 20 = 18g;

$K_2Cr_2O_7$ = 0.061225mol

Number of moles of HCl

= 50/36.46= 1.3714

Limiting reactant is $K_2Cr_2O_7$

(iii) $CaCO_3 + 2HCl \rightarrow CaCl_2 + H_2O + CO_2$

Number of moles of HCl added ,

N = cv = 0.50 x0.10= 0.05

Excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH ;

$NaOH + HCl \rightarrow NaCl + H_2O$

Number moles of NaOH , n = cv;

N = 0.50x 0.022 = 0.011mol ;

Excess HCl in the mixture = 0.011mol

Moles of HCl reacted with

$CaCO_3$, = 0.05- 0.011 = 0.039

Moles of $CaCO_3$ = 0.039 /2

( stochiometric ratio 1:2)

(B) The emission spectrum of atomic hydrogen is divided into a number of spectral lines. These lines are due to electrons moving between energy levels in the atom. Transition of electron in hydrogen between quantized energy levels with different quantum numbers yields a photon by emission with quantum energy

### ➢ FUNCTIONS 11

$P(t) = -25t^2 + 250t - 400$

Solve for t when

P(t) = 0; -25 ( t- 8) ( t - 2) =0

t = 8 or 2; least number of toy-cars that should be sold to break even is 20,000

### ➢ ADV. FUNCTIONS 12

$f_{(x)} = ax^3 + bx^2 + cx + d$

$a + b + c + d = -7$ ..........(1)

$8a + 4b + 2c + d = -8a + 4b - 2c + d$ ....(2)

$4a + c = 0$ ....(2)

The graph passes through origin,

d= 0 ...............(3)

The graph passes through (-1,17)

$-a + b - c + d = 17$ ........(4)

Solve for a, b, c.

$f_{(x)} = 4x^3 + 5x^2 - 16x$

Answer key
18- 17 next issue
☎ 647 341 3975
KEEN TUTORING CENTRE

# அது என்ன கச்சா எண்ணெய்? "பீர் இல் கார்கள் இயங்குமாம்"?



சுந்தரம்
இந்திரராஜா

## What is crude oil?
## Fuel from Beer?


ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயம் செய்வதில் கச்சா எண்ணெய் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஏனெனில் ஒவ்வொரு முறையும் கச்சா எண்ணெயின் விலை உயரும்போதும் அது உலகளவில் அனைத்து நாடுகளின் பொருளாதாரத்திலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடு கிறது. பெட்ரோலிய பொருட்கள் இல்லாமல் ஒரு நாளை கழிப்பது என்பது வெகு சிரமம். பெட்ரோலிய பொருட்கள் தேவை இல்லையென்றால் ஒரு நாடு மற்றொரு நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்த வேண் டிய தேவை இருக்காது. வல்லரசு நாடு என்ற பதம் இருக்காது. இந்த அளவுக்கு பெட்ரோலிய பொருட்களின் தேவையும் அதை சார்ந்த வளர்ச்சியும் இருக்கிறது.

பெட்ரோலியம் என்ற சொல்லுக்குக் கல் எண்ணெய் என்பது பொருளாகும். பெட் ரோல் பற்றி தெரிந்து கொள்வதற்கு முன்பு முதலில் கச்சா எண்ணெய் (Crude oil) எப்படி உருவாகிறது என்று பார்ப்போம்.



கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு இயற்கை அழிவுகள் காரணமாக மண்ணில் புதையுண்டு இறந்த மனிதர்கள் மற்றும் விலங்கினங்களின் உடல்கள் அழுகி பாக்ரீ-ரியாக்களால் நொதிக்கப்பட்டு, பின்பு மண்ணில் உள்ள உப்புக்களுடன் சேர்ந்து இரசாயன மாற்றங்களுக்கு உட்பட்டு, நிலத் திற்கு அடியில் நிலவும் உயர் அழுத்தம் மற்றும் வெப்பம் காரணமாக அருகிலுள்ள மண்பாறை, மணற்பாறை, சுண்ணாம்புப் பாறை வெடிப்புகளுக்குள் பாய்ந்து அடர் கருப்பு நிறத்தை கொண்ட எண்ணெய் வளங்களாகவும் நிலத்தடி வாயுவாகவும் உருமாறுகின்றது என அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.

இந்த அடர் கருப்பு நிறத்தை கொண்ட கச்சா எண்ணெய் வளங்களை உலகில் முதன் முதலில் கண்டறிந்தவர்கள் ஈராக்கியர் என்னும் பண்டைய பாபிலோனி யர் ஆவர். சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தங்களது மண்ணில் உயர்ந்த கோபுரங்களை கட்டும்போது, கட்டிடத்தின் வலிமையை கருத்தில் கொண்டு கட்டிடத் தின் அத்திவாரச்சுவரை நிலத்தில் சற்று ஆழத்திலிருந்து கட்டி எழுப்பினார்கள். அப்படி ஒரு சமயம் ஈராக்கிலுள்ள ஆந் தெரிக்கா (Andericca - Near Babylon Provin ce) என்ற இடத்தில் ஒரு கட்டிடத்தின் கட்டு மானத்திற்காக சற்று ஆழமாக குழி தோண்டியபோது கிடைத்ததுதான் இந்த கச்சா எண்ணெய். இது 20அடி ஆழத்திலும் கிடைக்கலாம். 10,000 அடி ஆழத்திலும் கிடைக்கலாம்.




அதென்ன கச்சா எண்ணெய்? கச்சா எண் ணெயினை பீப்பாய் அளவுகளில்தான் குறிப் பிடுகின்றனர். ஒரு பீப்பாய் என்பது கிட்டத் தட்ட 159 லிட்டர்கள் அல்லது 42 அமெரிக் கன் கலன்கள், அல்லது 35 பிரித்தானியக் கலன்கள் ஆகும். அதிலிருந்து பெட்ரோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் பிரித்தெடுக் கின்றனர். ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயில் இது போன்ற எரிபொருட்களின் மொத்த அளவு சுமார் 20 லிட்டர்கள்தான். மீதிமெல் லாம் கச்சா (வீண்). ஆரம்பத்தில் வீண் என்று எண்ணியதால் அப்பெயரை வைத் தார்களோ!. ஒரு பீப்பாயில் மீதி 139 லிட்டர்கள் கச்சாவும் இன்று பயன்படுகிறது.

கச்சா எண்ணெயிலிருந்து பெட்ரோல் (Gaso line), மண்ணெண்ணெய் (Kerosene), டீசல் (Diesel) போன்ற எரிபொருட்களை குறிப் பிட்ட வெப்பநிலையில் காய்ச்சி வடித்து பிரித்தெடுக்கப்படுகின்றன. எட்டில் ஒரு பகுதி மட்டும் தான் இந்த எரிபொருட்கள். மீதி எட்டில் ஏழு பகுதியிலிருந்து தான் மசகு எண்ணெய் (lubricating Oil), தார் (Asphalt), பாராஃப்பின் எண்ணெய் (Vaseline, moistu rizer), பாராஃப்பின் மெழுகுகள், பிளாஸ்டிக் குகள், உரங்கள், அமோனியா, சல்பூரிக் கமிலம் போன்ற பல பொருட்கள் கிடைக்கின்றன.

சவுதி அரேபியா, ஈரான், ஈராக், அரபு எமி ரேட்ஸ், அமெரிக்கா, ரஷ்யா நாடுகளில் நிறைய கச்சா எண்ணெய் கிடைக்கிறது. இலங்கை மன்னார் கடல் படுக்கையில் அண்மையில் கச்சா எண்ணெயும் நிலத்தடி இயற்கை வாயுவுமுள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது. இந்தியாவில் அசாம், குஜராத், பம்பாய் கடலடி, காவேரி, கோதாவரிப் படுகைகளில் கச்சா எண்ணெயும் நிலத்தடி இயற்கை வாயும் கிடைக்கின்றன.

இன்றைய நவீன உலகில் கச்சா எண்ணெய் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் முன்னணியில் இருப்பது சவுதி அரேபியா தான். சவுதியின் மொத்த வருமானத்தில் கச்சா எண்ணெய் வருமானமே 85 சதவீதம் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், அமெரி க்காவே கச்சா எண்ணெய் உற்பத்தியில் முதலிடம் வகித்தது. அமெரிக்காவில் பெட் ரோல் கிடைத்த வரலாறு சுவையானது. ஷேல் பாறை (Shales) என்பது பாளம் பாள மாகப் பிரித்தெடுக்கக் கூடிய சிலேட் மாதிரி யான ஒரு பொருள். எண்ணெய் கசிந்த தரைகளில் இந்த ஷேல் (Shales) இருந்த தால் ஒருமுறை அதில் ஒருவர் சறுக்கி விழுந்து அடி பட்டுக்கொண்ட காயங்களில், எவற்றின் மீது அந்த எண்ணை பட்டிருந் ததோ அவையெல்லாம் விரைவில் குணமா கின. இதைக் கண்டவர்கள் அந்த எண் ணையை ஷேல் ஓயில் எனக்கூறி குப்பி களில் அடைத்து காயத்துக்கு மருந்தாக விற்க ஆரம்பித்தனராம். இந்த ஷேலை எரி பொருளாக உபயோகிப்பதற்காக வெட்டி எடுக்க ஆரம்பித்தனர். அப்போது எண்ணை யும் கசிந்தது தெரிந்தது. எரிக்கவும், காயத் துக்கு தடவவும் இந்த எண்ணைக்குத் தேவை அதிகமாகவே, ஆழத் தோண்டினால் அதிகம் கிடைக்குமோ என்று தோண்ட ஆரம்பித்தனர். அப்போது மேலெழும்பி வந்தது கச்சா எண்ணை. அன்றிலிருந்து அமெரிக்காவில் கச்சா எண்ணெய் அவசிய பொருளானது.


அதென்ன கனடாவில் எண்ணெய் மணல் கள்? எண்ணெய் மணல் என்பது இயற் கையாக கிடைக்கும் பெட்ரோலியஇரசாயண (நீரியக்கரிமங்களின்) கலவை ஆகும். வழக்கத்திற்கு மாறான மிகப்பெரிய பாறை எண்ணெய் வைப்புக்களாகும். அடர்த்தியான மற்றும் மிகவும் பிசுபிசுப்பு தன்மை கொண்ட பெட்ரோலிய நிலையிலுள்ள பிடு மன் எனவும் குறிப்பிடப்படுகிறது. எண் ணெய் மணலில் (Oil sands) மணல், தண்ணீர், களிமண் மற்றும் தார் (Asphalt) வடிவில் எண்ணெய் என்பவை கலந்துள் ளது. தார் (Asphalt) வடிவில் வரும் எண் ணெயைக்கொண்டு கச்சா எண்ணெய் மற்றும் பிற பெட்ரோலிய பொருட்களை மேம்படுத்தப்படலாம். எண்ணெய் மணல்கள் (Oil sands), தார் மணல்கள் (tar sands), அல்லது நிலக்கீழ் மணல்கள் (bituminous sands) என்பன வெவ்வேறு நீரியக்கரிமங் களின் கலவை கொண்ட ஒத்த கலவைகள் ஆகும்.

கனடா உள்ளிட்ட வெனிசுலா, அமெரிக்கா மற்றும் ரஷ்யா உலகம் முழுவதும் பல இடங்களில் காணப்படுகின்றன. கனடாவில் ஆல்பேட்டா மாகாணத்தின் வடகிழக்கே ஃபோட் மெக்மரியை (Fort McMurray) மையமாகக் கொண்டுள்ள பெரும் தார் (Asphalt) வைப்புக்கள் (deposits) அல்லது மிகவும் கனமான பாறை எண் ணெய் வைப்புக்களாகும். அதபஸ்கா எண் ணெய் மணல்களே மிகப் பெரியனவாகும். அதபஸ்கா எண்ணெய் மணல்கள் (Athaba sca oil sands) அல்லது அதபஸ்கா தார் மணல்கள் (Athabasca tar sands) அல்லது ஆல்பர்ட்டா தார் மணல்கள் (Alberta tar sands) அவற்றுள் அடங்கும். மற்றவை கோல்ட் லேக் (Cold Lake) எண்ணெய் மணல்கள் ஆகும். இதில் கோல்ட் லேக் எண்ணெய் மணல்கள் சஸ்காச்சூன் மாகா ணம் (Saskatoon) வரை பரந்துள்ளன.

போலந்து நாட்டை சேர்ந்த லெக்னாசி லுகாசிவிக் (Lgnacy -ukasiewicz) என்ற இரசாயனவியல் வல்லுநர் 1846ம் ஆண்டு, கச்சா எண்ணெயிலிருந்து மண்ணெண்ணெ யைப் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார். 1854ம் ஆண்டு, கச்சா எண்ணெயில் இருந்து, குறிப்பிட்ட வெப்ப நிலையில் பெட்ரோலை பிரித்தெடுக்கும் தொழில்நுட்பத்தை, பெஞ்சமின் சில்லிமன் (Benjamin Silliman) என்ற அமெரிக்கர் கண்டறிந்தார். இதே வடிகட்டி முறை கொண்டு, கச்சா எண்ணெயில் இருந்து, பெட்ரோல், மண்ணெண்ணெய், டீசல், மசகு எண்ணெய், தார் ஆகிய ஐந்து பொருட்கள் குறிப்பிட்ட வெப்பநிலையில் காய்ச்சி வடித்து பிரித்தெடுக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. முதலில், டீசல் எண்ணெய்க்கு "ஓயில்" என்றே பெயரிடப்பட்டிருந்தது. ஆயினும், டீசலில் இயங்கும் ஒரு வகை இன்ஜினை 1893ம் ஆண்டு, ருடால்ஃப் டீசல் (Rudolf Diesel) என்பவர் கண்டுபிடித்ததைத் தொடர் ந்து, இதற்கு "டீசல்" என்கிற அவரது பெயரே சூட்டப்பட்டது.

உலகின் முதல் நவீன எண்ணெய் கிணறு கி.பி.347ஆம் ஆண்டு சீனாவில் துளையி டப்பட்ட அந்த கிணறு கிட்டத்தட்ட 800 அடி ஆழம் கொண்டதாக இருந்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை கச்சா எண்ணெய் விளக்கு எரிப்பதற்கு தேவைப்படும் விளக்கு எண்ணெயாகவும் கட்டிடகட்டுமான பணி களில் நிலக்கீலாகவும் (bituminous) தான்

(தொடர்ச்சி 38 ஆம் பக்கம்...)



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# மறக்கத் தெரியாத மனசு - பாகம் 8

## 'நடிகமணி' வி.வி. வைரமுத்து



வீணை மைந்தன்

பாரதத்தின் தேசியக் கலைஞன் நடிகர் திலகம் சிவாஜி கணேசனோடும் ஈழத்தின் ஈடு இணையற்ற இயல், இசை, நாடகம் கலைஞர் 'நடிகமணி' வைரமுத்து இருவரோடும் பழகக் கிடைத்த நாட்கலையெண்ணி பெருமிதம் கொள்கிறேன். கடந்த யூலை 08ஆம் நாள் நடிகமணி அவர்களுடைய நினைவு நாளாகும். 'மறக்கத் தெரியாத மனசில்' அவருடன் பழகிப் பேசிய நாட்கள் பசுமையாகவே உள்ளன. அவருக்கு அஞ்சலி செய்யும் வகையில் சில நினைவுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நடிகமணியின் பூதவுடல் மண்ணில் புதைக்கப்பட்டு 29 ஆண்டுகளாகின்றன. ஈழத்தின் இசை நாடகக் கலைகள் உயிர்ப்புடன் பேணிப் பாதுகாக்கப்படும் வரையும் தமிழிசை ஒலிக்கும் வரையும் நடிகமணியின் இசையும் ஒலியும் வாழும்.

யாழ்ப்பாணத்தின் பிரபல எழுத்தாளரும், நாவலாசிரியருமான 'சொக்கன்' அவர்கள் எழுதிய அஞ்சலிப் பாடலை இந்நேரத்தில் உங்களுடன் இணைந்து வாசிக்கிறேன். 'சர்க்கரைப் பந்தலில் தேன்மாரியென்னச் சங்கீதமதில் மிக்க நன்னாடாக மேதைமை பெய்து மிகச் சுவையாய் எக்களிப்பூட்டிய நற்கலைவாணன் இறக்கவில்லை சிக்கனம் பற்றியெம் நெஞ்சினில் வைரமுக்தாயுளனே" சொக்கவைக்கும் சொக்கனின் 'கவிதைகள்' சாலவும் பொருத்தமானது.

காங்கேசன்துறை ஆலையின் சங்கொலிக் கிடையே இவரது இசைநாடக ஒத்திசையின் ஒலியும் எப்போதும் காற்றலைகளில் தேன் பாய்ச்சும். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய மண்ணில் முந்தையர் இவரது இசைக்குரலைக் கேட்டுக் கேட்டு இறும்பூதெய்தியவர்களில் நானும் ஒருவன். 'இளந்தமிழர் மன்றம்' ஆசிரியர் அமரர் கருணாநந்தசிவத்தின் வீட்டுக்குப் பின்னால் காட்டடைப்பு வீதிக்கருகில் உள்ளது நடிகமணி அவர்களது இசை இல்லம்.

சிலசமயம் இவ்வீதியில் போகும்போது "..... யாரடி கள்ளி நீ....." என்று அரிச்சந்திர மயான காண்டத்தில் சந்திர மதியைப் பார்த்து சுடலை காப்பவனாக வரும் மன்னன் அரிச்சந்திரன் பாடும் வரிகளை சாதகம் செய்து ஒத்திகை பார்க்கும் நடிகமணி அவர்களைப் பார்த்து அவருடைய மதுரக் குரலில் மயங்கி நிற்பேன்.

வாலிபனானதும் அவருடன் பேசிப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. இலங்கை முழுவதும் எல்லோராலும் பாராட்டுப்பெற்ற 2550க்கும் அதிகமான மேடைகளுக்குமேல் அரிச்சந்திரன் (மயான காண்டம்) சத்தியவான் சாவித்திரியுடன், வள்ளி திருமணம், சாரங்கதாரா, அல்லி அர்ச்சுனா, பவளக் கொடி, நல்லதங்காள், பக்த நந்தனார், கோவலன் கண்ணகி, ஞான சௌந்தரி, பக்த பிரகலாதன் போன்ற இசை நாடகச் சித்திரங்களைப் பிரபலப்படுத்திய அபூர்வக் கலைஞர் எமது மண்ணின் மைந்தன் நடிகமணி அவர்கள்.

சில நடிகர்களுக்கு நடிக்கத் தெரியும், பாடத் தெரியாது. சிலருக்குப் பாடத் தெரியும் நடிக்கத் தெரியாது. சிலருக்கு இரண்டு மிருந்தும் தோற்றப் பொலிவு இராது. இவை அனைத்தும் ஒருங்கே கைவரப்பெற்ற நல்ல நடிகர் தான் வைரமுத்து.

மயான காண்டத்தைப் பார்த்து மகிழ்ந்த சிலம்புச் செல்வர் ம. பொ. சி அவர்கள் "ஈழம் செந்தமிழ்ப் பயிர் வளர்க்கும் சிறப்புடையது. நாவலர் பெருமான் போன்றவர்கள் அதற்குச் சான்று. இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழ்ப் பயிரையும் வளர்ப்பதில் ஈடிணையற்று விளங்குகிறது என்பதற்கு கலைஞர் வைரமுத்து நல்ல சான்று" என்றார்.

இலங்கையர்கோன் "சாணா" என அழைக்கப்பட்ட இலங்கை வானொலி சண்முக-நாதன், பேராசிரியர் கலாநிதி. சு வித்தியானந்தன் மகாஜனாக்கல்லூரி அதிபராக விருந்த பெரியார் சண்முகசுந்தரம், பேராசிரியர் சிவத்தம்பி, நாவற்குழியூர் நடராஜான், (இலங்கை வானொலி) கலையரசு சொர்ணலிங்கம் ஆகியோரது கலைக் கரங்களால் ஆசீர்வதிக்கப்பட்டு குன்றின் விளக்காய் ஒளிர்ந்தவர் நமது நடிகமணி.

தாம்பூலம் போட்டுக் கொள்வதால் உதடுகள் எப்போதும் சிவப்பு நிறமாகவே இருக்கும். வாரி இழுத்த அடர்த்தியான கேசம், சிவந்தமேனி, சிரிக்கும் கண்களும் புன்



முறுவலும் அவருக்கேயுரியது. கொஞ்சம் பெண்மையின் சாயல்.

சிவாஜி - ஜெமினி - கமல் ஆகியோரிடம் இந்தப் பெண்மையின் நளின இயல்புகளைப் பார்க்கலாம். பெண்மையின் சில அசைவுகள் பூரணமான நாடக நடிகனிடம் அமைந் திருப்பதால் நடிகமணியின் முக இலட்சணம் நடிப்புக் கலைக்கும் மெருகூட்டியது.

நாடகம் இல்லாத நாட்களில் எங்களூரின் புகழ்பெற்ற புரக்கிராசி சதாசிவம் ஐயா வீட்டு விறாந்தையில் அரட்டைப் பேச்சும் பாட்டுமாக குசாலாகப் பேசிக் கொண் டிருப்பதை இரசித்திருக்கிறேன். என்னைக் காணும்போதெல்லாம் "தம்பி!" எப்படி இருக்கிறீர், என்ன புதினம். டாக்டர் நலமாக உள்ளாராவென நான் வேலை செய்த நர்சிங்கோம் உரிமையாளர் டாக்டர்

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)



Math tutorial372

Answers to tutorial371

1)$y=3x^2-7x+5$ ,$dy/dx=6x-7$,slope of $x+5y-10=0$ is $-1/5$ ,. Since it is perpendicular, $6x-7=5$, $x=2$ substituting in $3x^2-7x+5=y$

$Y=3(4)-7(2)+5=3$ Equation of tangent at (2,3) is $y-3=5(x-2)$

$5x-y-7=0$

2 )$x^3+y^3-3xy=17$

$3x^2+3y^2dy/dx-[3y+dy/dx(3x)]=0$

At (2,3),$12+27dy/dx-9-6dy/dx=0$

$21dy/dx=-3$, slope of the tangent is$dy/dx=1/7$,therefore the slope of the normal at(2,3) is 7

The equation of the normal at(2,3) is$(y-3)/(x-2)=7$,$7x-y-11=0$

3)$v=\sqrt{(b^2+2gs)}$, $v=(b^2+2gs)^{1/2}$

$Dv/dt=1/2(b^2+2gs)^{-1/2}.(0+2gds/dt)$

$a=1/2v.2gv$,$a=g$ since g is a constant ,a is a constant, as required

4)Sice $r=(1,8)+t(3,7)$ direction vector = (3,7)a direction perpendicular to this is (7,-3),hence $r=(4,5)+t(7,-3)$

Tutorial372 questions

1)Determine the value of k in order that the lines $tx-2y+k=0$ and $3x+y-t=0$ intersect ay (-2 ,1) (for gr 9)

2)Two couples share a park bench .Neither couple wishes to be separated. How many different seating arrangements, each of which allows the couples to stay together, are there? (for gr9)

3)Factor

a)$x^4+5x^2+9$ (b)$9y^4+8y^2+4$

© $x^4+6x^2+25$

4)If $y=f(3x^4)$ and $f'(3)=-4$ ,find dy/dx at x=1


By Mr S.F.Xavier (Teacher )

Tel 6473409490/4167322228

# அது என்ன

36 ஆம் பக்கத்தொடர்ச்சி

பயன்படுத்தப்பட்டது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் உலகில் முதன் முதலாக தார் (asphalt) கொண்டு ஈராக் தலைநகர் முழுவதும் தெருக்கள் அமைக்க பயன்படுத்தப்பட்டது.




இதனை தொடர்ந்து அரபுநாடுகள் முழுவதிலும் கச்சா எண்ணெய் கிடைக்கும் இடங்களை தேடும் பணி தொடங்கியது. கி.பி. பத்தாம் நூற்றாண்டில் அபு அல் ஹாசன் (Abu Al Hasan) என்ற முஸ்லிம் புவியியல் வல்லுநர் அஜர்பாஜன் (Azerbaijan) என்ற நாட்டிளிலுள்ள பாகு (Baku) என்ற இடத்தில் அதிக அளவில் எண்ணெய் வளங்கள் இருப்பதை கண்டறிந்தார். இதைத்தொடர்ந்து பாகுவில் நூற்றுக்கும் அதிகமான எண்ணெய் கிணறு வெட்டப்பட்டது. உலகிலேயே முதன் முதலாய் அதிக எண்ணிக்கையில் ஒரே இடத்தில் எண்ணெய் கிணறு வெட்டப்பட்ட இடம் அஜர்பாஜன் நாட்டிலுள்ள பாகுவில்தான்.

இந்நிலையில் ஜப்பான் நாட்டை சேர்ந்த சில இரசவாதிகள் (alchemist- early chemists) கச்சா எண்ணெய்யை சூடுபடுத்தும் போது எரியும் தன்மை கொண்ட திரவம் (மண்ணெண்ணெய்) கிடைப்பதாக கூறினார்கள். இதைத்தொடர்ந்து முகம்மது இபின் ஷகாரியா அல்-ரஷி (Muhammed Ibn Zakariya Al-Razi கி.பி.865-925) என்ற பெர்சியன் இரசவாதி (Persian alchemist) கச்சா எண்ணெய்யை வடிகட்டும் முயற்சியில் இறங்கினார். இதற்காக இவர் தானே தயாரித்த அலம்பிக் (alembic) என்ற ஒரு வகை வடி-கலனை பயன்படுத்தினார். முயற்சியின் விளைவாக வெடித்து எரியும் திரவத்தைக் (பெட்ரோல்) கண்டறிந்தார். இவரது இந்த கண்டுபிடிப்பு பெர்சிய ராணுவத்தினரால் எதிரி நாட்டு ராணுவத்தினரை தாக்க வெடி-பொருளாக பயன்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து கச்சா எண்ணையின் முக்கியத்துவம் உணரப்பட்டு உலகமெங்கும் எண்ணெய் வளங்கள் கிடைக்கும் இடங்களை கண்டறியும் சோதனை தொடங்கியது. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பாவிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டில் ரோமானியாவிலும் எண்ணெய் கிடைக்கும் இடங்கள் கண்டறியப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டில் (1753-ஆம் ஆண்டு) முதன் முதலாக அமெரிக்காவின் பெனிசுலவேனியா (Pennsylvania) நகரிலும், பின்னர் பிரான்ஸிலுள்ள அல்சசே (Alsace) என்ற நகரிலும் எண்ணெய் வளங்கள் இருப்பது கண்டறியப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்யாவிலுள்ள உக்தா (ukhta) என்ற இடத்தில் அதிக அளவில் எண்ணெய் வளங்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இதை தொடர்ந்து உலகின் முதல் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ரஷ்யா-உக்தாவில் நிறுவப்பட்டது. இந்த ஆலை கிட்டத்தட்ட இபின் ஷகாரியாவின் வடிகட்டுதல் முறையை அடிப்படையாக கொண்டிருந்தது. இதன் மூலம் வடிகட்டப்பட்ட எண்ணெய், ரஷ்ய நாட்டு தேவாலயங்களிலும் (churches), துறவிகள் மடங்களிலும் (monasteries) விளக்கு எரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது.

உலகின் இரண்டாவது கச்சா எண்ணெய் சுத்தீகரிப்பு ஆலை 1857ஆம் ஆண்டு ரோமானியா (Romania) நாட்டிலுள்ள Ploiesti என்ற நகரில் ஏற்படுத்தப்பட்டது. அதைத்தொடர்ந்து உலகம் முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு நாடாக சுத்திகரிப்பு ஆலைகள் கட்டப்பட்டன.

உலகில் முதல் 10 எண்ணெய் உற்பத்தி நாடுகள்: ரஷ்யா, சவுதி அரேபியா, அமெரிக்கா, ஈராக், ஈரான், சீனா, கனடா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், பிரேசில் ஆகும்.

ஒபெக் கூட்டமைப்பு: பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பே ஒபெக் என்றழைக்கப்படுகிறது. ஆஸ்திரியா நாட்டில் உள்ள வியன்னாவை தலைமையிடமாக கொண்டு இயங்கி வருகிறது. 2017ம் ஆண்டின்படி மொத்தம் 14 நாடுகள் இதில் உறுப்பினர்களாக உள்ளன. உலகின் மொத்த எண்ணெய் உற்பத்தியில்




இந்த நாடுகளின் பங்கு 44 சதவீதம்.
அல்ஜிரீயா, அங்கோலா, ஈக்வெடார், கென்யா, காபோன், ஈரான், ஈராக், குவைத், லிபியா, நைஜீரியா, கத்தார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வெனிசுலா ஆகிய நாடுகள் இதில் உறுப்பினர்களாக உள்ளன. கச்சா எண்ணெய் விலையைக் கட்டுக்குள் வைப்பது, நுகர்வோர்களுக்கு தொடர்ந்து ஏற்றுமதி செய்வது போன்ற பணிகளை இந்த கூட்டமைப்பு செய்து வருகிறது.

உலகில் முதல் 10 எண்ணெய் உற்பத்தி நாடுகளில் கனடா நாடு இருப்பதையிட்டு மகிழ்ச்சி கொள்வோம். பெட்ரோலும் டீசலும் கச்சா எண்ணெயில் இருந்து பிரித்தெடுக்கப் படுகின்றன. இது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளம் அல்ல. இன்னும் 30-40 ஆண்டுகளில் தீர்ந்து போகக்கூடியது. மாற்று எரி-பொருட்களுக்கான நிலையான அவசர தேவையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மின்சக்தியில் இயங்கும் வாகனங்களுக்கு வரிச்சலுகை கொடுத்து ஊக்குவிப்பு நடைபெறுகிறது.

டீசல், பெட்ரோலுக்கு பதில் "பீர்" ஊற்றினாலும் கார்கள் இயங்கும்: லண்டன் பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் பெட்ரோல் மற்றும் டீசலுக்கு பதில் கார்களுக்கு பீர் (Beer) ஐ பயன்படுத்தும் ஆராய்ச்சி வெற்றிகரமாக முடிந்துள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். உலகளவில் மதுபானங்களை வைத்து விஞ்ஞானிகள் பல கண்டுப்பிடிப்பை நிகழ்த்தி வருகின்றனர். தற்போது பயன்பாட்டில் இருக்கும் டீசல் மற்றும் பெட்ரோலுக்கு பதிலாக புதிய எரிபொருளை கண்டுபிடிக்கும் பணியில் இங்கிலாந்து விஞ்ஞானிகள் ஈடுபட்டு வந்தனர்.

மதுவில் இருக்கும் எத்தனாலை பியூட்டன-ாலாக (Ethanol to Butanol) மாற்றினால் அதை எரிபொருளாக பயன்படுத்த முடியும். எனவே மதுவகைகளில் நிறைய சோதனைகள் நடத்தி பிரிக்கப்பட்டது. ஆனால் அவர்களது முயற்சி தோல்வியில் முடிந்தது. மதுவகையில் இருக்கும் எத்தனாலை பியூட்டனாலாக மாற்ற முடியவில்லை. அப்படி மாற்றினாலும் அது வாகனத்துக்கு அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்தியது. எனவே, பீர் இல் இச்சோதனையை செய்தனர். அது வெற்றிகரமாக முடிந்து இருக்கிறது.

அதில் இருந்து எடுக்கப்பட்ட எரிபொருள் வாகனத்தை சரியாக இயக்கியது. அதிக மைல்கள் ஓட வைத்தது. எனவே பெட்ரோல், டீசலுக்கு மாற்றாக பீர் எரி-பொருளாக மாறும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், எத்தனாலை, பியூட்டனலாக மாற்றும் இந்த வினை செயல் அதிக காலம் எடுத்துக்கொள்வதால் தற்போது இந்த கண்டுப்பிடிப்பை பயன்பாட்டிற்கு கொண்டுவர முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த சிக்கலும் சரி செய்யப்படும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பெட்ரோலில் இயங்கும் இயந்திரங்களை டீசலில் ஏன் இயக்க முடியாது?: பெட்ரோல், டீசல் ஆகிய எரிபொருட்களைக் கொண்டு இயங்கும் இரு இயந்திரங்களும் ஒரே மாதிரியானவை தான். இருப்பினும் இரண்டும் வெவ்வேறு வடிவ அமைப்புகளைக் கொண்டவை. ஒவ்வொரு எரி-பொருளும் ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில்தான் எரியத் தொடங்கும். இதனைப் பற்றல் வெப்பநிலை என்பர். இது பெட்ரோலுக்குக் குறைவாகவும், டீசலுக்கு மிகுதியாகவும் தேவைப்படும்.

அடுத்து பெட்ரோல் இயந்திரத்தில் எரி-பொருள் -காற்றுக் கலவையைப் பற்றவைக்கும் செயலை மேற்கொள்வது தீப்பொறிச் செருகி (Spark plug) ஆகும். மேலும், இவற்றில் எரிபொருள்-காற்றுக் கலவையைப் பற்ற வைப்பதற்கு முன்னால் தேவைப்படும் அழுத்த அளவு அதாவது அழுத்த விகிதம் குறைவு. இந்நிலையில், பெட்ரோல் இயந்திரத்தில் டீசலை எரி-பொருளாகப் பயன்படுத்தும்போது பற்ற வைக்கும் வெப்பநிலை போதுமான அளவு இல்லாத காரணத்தால் எரிபொருள் பற்றவே பற்றாது.

அடுத்து டீசல் இயந்திரத்தில், பெட்ரோல் இயந்திரத்தில் இருப்பதுபோல் தீப்பொறிச் செருகி (Spark plug) கிடையாது. இங்கு எரிபொருள் பற்றவைப்பு மிகுந்த அழுத்தத்தின் விளைவாக நடைபெறும். இவ்வாறு பெட்ரோல், டீசல் இயந்திரங்களுக்கு இடையேயுள்ள வடிவமைப்பு வேறுபாட்டினாலும், பற்றவைப்பு வெப்பநிலை வேறுபாட்டினாலும் பெட்ரோலுக்குப் பதிலாக டீசலையோ, டீசலுக்குப் பதிலாகப் பெட்ரோலையோ பயன்படுத்த இயலாது.

## ஏதும் சொந்தமில்லை! புரிந்துவிடும்!

அப்பனும் அம்மையும் தந்தவுடல் - அந்த
அரனின் கருணையால் கிடைத்த உயிர்
சுப்பனோ குப்பனோ என்றழைத்து அவரை
சுட்டிக் கொண்டாடிட இட்டபெயர் கெட்ட
சொப்பனமா யெல்லாம் கலைந்துவிடும் எதுவும்
சொந்தமில்லை என்று புரிந்துவிடும் யாரும்
தப்பிட வாய்ப்பில்லை இந்தத் தரணியிலே
தாழ்வு உயர்வின்றிக் கதை முடிந்துவிடும்



ஆணையும் பெண்ணையும் இணைத்து வைத்தான்
அகிலத்தில் உயிர்களைப் படைத்து வைத்தான்
வானையும் மண்ணையும் தோன்ற வைத்தான்
வாழும் நெறிமுறை ஆக்கி வைத்தான்
காணையும் கடலையும் மண்ணில் வைத்தான்
காற்றையும் நெருப்பையும் தோன்ற வைத்தான்
ஊனையும் உடலையும், உருகவைத்தே நிதம்
உடனிருந்தே அனைத்தையும் வாழ வைத்தான்!

தொட்டிலில் வாழ்வினைத் தொடக்கி வைத்தான்
தோதுறப் பாடையில் முடித்து வைத்தான்
கட்டிலில் வம்சத்தை வளரவைத்தான் தூய
காதலும் பாசமும் கலந்து வைத்தான்
ஒட்டி உறவாடிட உறவும் வைத்தான்
ஒருவரும் அறிந்திடா விதியை வைத்தான்
சட்டியில் செந்தணல் சுமக்க வைத்தான்
சாவினால் சகலதும் புரிய வைத்தான்!

கவிஞர் - புரட்சிப்பாலன்

# மறக்கத்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

இராஜேந்திராவையும் விசாரிப்பார். சில சமயம் அவரும் டாக்டருடன் உரையாட வருவார். இப்படியாக நடிகமணிக்கும் எனக்கும் நெருக்கம் அதிகமானது.



ஒரு சமயம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் உதவி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் செய்தபோது எனக்கொரு நற்சான்றிதழ் வழங்கியது மட்டுமல்ல, என்னை நவாலியூருக்கு அழைத்துச் சென்று இலங்கையின் தனிப்பெரும் நாடகக்கலைஞரான பெரியவர் கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களிடமிருந்தும் "நற்சான்றிதழ்" பத்திரம் வாங்கித் தந்ததுடன், எனக்குள் கலையார்வத்தையும் எடுத்துச் சொல்லி அறிமுகம் செய்து வைத்துப் பெருமைப்படுத்தினார். நடிகமணி வைர முத்து அவர்களின் இளைய தோழன் என்று எனக்குள் எப்போதும் ஒருவித் பெருமிதம்.

2015இல் யாழ் - கொழும்பு - இலண்டன் - மொன்றியல் நகரங்களில் வெளியிடப்பட்ட மூன்று நூல்களில் ஒன்றான "கவியின் காதல்" நாடக நூலை "காங்கேசன்துறையூர் கலைச் செல்வர்களான அமரர் நடிகமணி வி.வி. வைரமுத்து கலைஞர் 'நடமாடி' கே. வி இராஜரத்தினம் இருவரினதும் பாதார விந்தங்களில் காணிக்கையாக்கியிருந்தேன்.

மனசு தொடரும்

# கோலமாவு...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

காதலும், பாட்டும், பின்தொடர்புகளும் நடக்கின்றன. ஆனால் அவர் பெரிய கதா-நாயகன் ஆக இல்லாததால், அவரது நடவடிக்கைகள் கோமாளித்தனமாகவும், கோகிலாவின் எதிர்ப்பும் நியாயமானதாகவும் காட்டப்படுகின்றன. இதை வற்புறுத்தாமல் இயக்குனர் படத்தில் எளிதாகக் காட்டுகிறார். சிந்திக்கவும் வைக்கிறார்.

தைரியமான கோகிலாவின் தங்கை, தேவை யானதைச் செய்யும் தாய் இரண்டும் நல்ல கதாபாத்திரங்கள். ஆனால் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரம் கோகிலா தான். போதைப்பொருள் கடத்தும் உலகிற்கு அவர் நுழையும் போது அவர்களில் ஒருவராகவே மாறுவதாகக் காட்டியிருக்கலாம். அல்லது அழகால் பிறரையமக்கி, கோழையாக நடித்து, அறிவால் பலம் பெற்று **Gang** உலகில் பிரபலமாகும் கதாநாயகியாகக் கூட மாற்றியிருக்கலாம். ஆனால் இறுதி வரை ஒரு சாதாரண பெண் ஒரு அசாதாரண சூழ்நிலையை எவ்வாறு சமாளிக்கிறார் என்று ஒரு சாதாரண பெண் கோகி-லாவாகவே நயந்தாராவைக் காட்டு கிறார். கோகிலாவை எளிமையான உடையுடனும், துப்பாக்கி சுடுவதைக் கண்டு பயப்படும் கதாபாத்திரமாகவும், பலவிதமாக யோசித்துப் போதைப் பொருள் கடத்தி பல சிக்கல்களை தாண்டி தனது குடும்பத்தைப் பாதுகாப்ப வராக தனது முதல் படத்திலேயே நயந்தாராவை இயக்குனர் சிறப்பாகக் காட்டி இருக்கின்றார்.



இப்படத்தில் கருத்துக்களை வெளிப்படை யாகக் கூறாமல் சில சில இடங்களில் காட்சிகள் மூலம் வர்ணிக்கப்படுகிறது. கோகிலாவிற்கு ஒரு கதாநாயகனுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவமும், மரியாதை யும், திறமையும் ஒரு பொதுப் பெண்ணிற்கு அளிக்கக் கூடிய realism மும் இப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. எனவே இவற்றை மதிப்பவர்கள் இப்படத்தைப் பார்த்து திருப்தி அடையலாம்.

# கண்களைக்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

கொண்டு தினமும் காலை, மாலை இரு வேளையும் இரண்டு உருண்டைகள் வீதம் சாப்பிட்டுத் தண்ணீர் பருகி வந்தால் கண்கள் குளிர்ச்சியடையும்.

கீழாநெல்லித் தைலத்தைத் தொடர்ந்து உபயோகித்து வருவதன் மூலம் கண்ணில் நீர் வடிதல், கண் எரிச்சல் ஆகிய குறைபாடுகள் நீங்கிக் குணமாகும்.

மருதோன்றி இலைகளைப் பறித்து வந்து அம்மியில் வைத்து தண்ணீர் சேர்க்காமல் கெட்டியாக அரைத்தெடுத்து தலையில் அழுத்தித் தேய்த்து ஒரு மணி நேரமாவது அப்படியே வைத்திருந்து பின்னர் தலைக்குக் குளிக்க வேண்டும். இவ்வாறு அடிக்கடி செய்து வந்தால் கண்களில்




தெரியும் சிவப்பு மறையும். கண்கள் குளிர்ச்சியடையும்.




# விடியலும் வந்தே சேரும்!




கண்ணபிரான் அவதரித்த பூமியிலே
காந்திமகான் தடம்பதித்த பூமியிலே
சொல்லவொணா துயரமெலாம்
பெருக்கெடுத்து
சுயமிழக்கச் செய்வதினைக் காணுகையில்
மண்ணிலுள்ளோர் மனமெல்லாம் மரமாச்சா
மனதிலுறை கருணையெலாம் மடிந்தாச்சா
எண்ணுகின்ற எண்ணமதே எழுகிறதே
எவர்வருவார் இந்தநிலை போக்குதற்கு

காடுமேடு என்றலைந்த மனிதவினம்
கட்டம்பல கடந்துவந்து நாளாச்சு
நாடுநகர் என்றெல்லாம் ஆக்கிவைத்து
நாகரிகம் என்றுசொல்லித் திரிகின்றார்
தேடிநாடி ஓடுகிறார் திசையெல்லாம்
திரட்டுகின்றார் மூட்டையிலே செல்வமதை
கூடுவிட்டுக் கூடுபாயும் மனத்தைமட்டும்
குணமமாறா வைத்துவிட்டார் குவலயத்தில்

ஆடுமாடு கோழியெல்லாம் வளர்க்கின்றார்
அவைபற்றி இலக்கியமும் ஆக்குகின்றார்
மேடையேறி அவைபற்றி முழக்குகின்றார்
விருந்துவைத்தும் அவற்றையவர்
சுவைக்கின்றார்
சாதிசாதி என்றுசொல்லி மோதுகின்றார்
சமயம் எனப்பலசொல்லி காட்டுகின்றார்
நீதிநெறி பற்றியெல்லாம் பேசுகின்றார்
நெஞ்சமதை மாற்றமட்டும்
நினைக்கமாட்டார்

கடவுள் எனும் பரம்பொருளை
கண்டு கொள்ள வேண்டுமெனில்
காட்டுத்தனம் எம்மை விட்டே

களைந்தெறியப் படல் வேண்டும்
மதம் கொண்ட மனத்துடனே
மற்றவரை வதைத்து நின்றால்
சினம் பெருகி யாவரையும்
சீரழித்து விடும் அன்றோ

ஆதலால் காதல் செய்வோம்
அனைவரும் ஒன்று என்றே
மோதலை தவிர்த்துக் கொண்டு
முறுவலை ஈந்தே நிற்போம்
பேதமை உள்ளந் தன்னை
பிரியமாய் மாற்றிக் கொண்டால்
வேதனை விரைந்தே போகும்
விடியலும் வந்தே சேரும்!



எம். ஜெயராமசர்மா
மெல்பேண் - அவுஸ்திரேலியா

382

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்



சோம்பலுடன் எழுந்தால் துணிவுடனும் உற்சாகத்துடனும் செயல்பட முடியாது.
ஆங்கிலேயரை விரட்டிய மக்கள் அவர்களின் வாழ்க்கைமுறை மோகத்தை பிடித்து வைத்துக் கொண்டனர்.




அன்புள்ள மன்னவனே ஆசையில் ஓர் கடிதம்
வடகொரிய கிங்.....அமெரிக்க அதிபருக்கு
அன்புக்கடிதம் எழுதியுள்ளார்....
சோழியன் குடும்பி சும்மா ஆடுமா....
ரஸ்சியா விசேட போர்ப்பயிற்சி ஒருபுறம்
அமெரிக்கா அங்கிங்கெண்ணாதபடி மூக்கை நுழைத்து தனது பலத்தை பெருக்கிக்கொண்டே போகிறது.
வட கொரியா வளைந்து கொடுக்கிறதா?

ஜி.ஜி. அதாவது கூகிள் கோகிலா, ஐபொட் அகிலா..தங்களுக்குள் சிரித்துக்கொண்டனர். அப்பா அம்மா வைத்த கோகிலேஸ்வரி கோதண்டராமன் புதிய உலகில் கோகிலாவாகி....நாளடைவில் கூகிள் கோகிலாவாகி...இப்போ...ஜி.ஜி...ஆகிவிட்டது. உலகர் ஜி.ஜி..என்ற பெயருக்குரியவரை நினைத்துப் பார்த்தார்.

வட்ஸ்அப் வரதன் காலையில் வாசித்துக்காட்டிய செய்தியை தலைமைச் செய்தியாக்கி செக்கண்ட புளோர் செல்லம்மா தாளித்துக்கொண்டிருந்தா...



உலகண்ணை நாய்கள் முந்திரியப்பருப்பு தின்னுமோ என்று செக்கண்ட்புளோர் செல்லம்மா கேட்க...



இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேபாளத்தில் இருந்து இந்தியா ஊடாக இலங்கை திரும்பும்பொழுது எயர் லங்கா விமானத்தில் தனக்கு முந்திரிப்பருப்பு வழங்கப்பட்டதாம் அதனை நாய்கூட தின்னாதாம்....
வெளிநாட்டுக்குபோய் திரும்பேக்குள்ளை உதவாக்கரை முந்திரியைபருப்பு ஐ மீன் கஜு என கண்டுபிடித்த மைத்திரிபாலா உள்ளூரக்குள்ளை கடைகடையாப் போனால்தான் தெரியும் வண்டுகலந்த பச்சை அரிசியும் தேனீர்க் கடைகளில் பாவித்த தேயிலையை...கலர்கலந்து மீண்டும் விற்பனை செய்வதையும்.



யேஸ் சோமெனி ஸ்ரோறீஸ்.....என தொடங்கினா ஐபொட் அகிலா...இந்தியாவிலை.. ஹொட்டல்லை...நாய்..பூனைகளின் இறைச்சியை ஆட்டிறைச்சியுடன் கலந்து புரியாணி செய்து வித்ததை பொலிஸ் கண்டுபிடித்து கடைக்கு சீல் வைத்து கடைக்காரரையும்... நாய் பூனைகளை சர்பிளை செய்தவர்களையும் அறஸ்ற் பண்ணியிருக்கினம். நல்ல காலம் நான் கொழும்பு இந்தியா எங்கை போனாலும் சைவச் சாப்பாடுதான் எனச் சொல்லி நிம்மதி பெருமூச்சு விட்டா ஆட்டிலறி அன்னம்மா.


இதற்கிடையில் ஜி.ஜி. உலகரிடம் ஏதோ கதைக்க தயங்கிக் கொண்டிருக்க...என்ன..ஜி.ஜி..என்னட்டை கேட்டதை உலகண்ணையிடம் கேளும் என்று சொல்லிவிட்டு அமைதியானா ஐபொட் அகிலாண்டேஸ்.

ஐ மீன் ஶ்ரீ-லங்காவிலை உள்ள சிற்றி, ரவுண், விலேஜ் எல்லா பேருகளும் கொலக்ற் பண்ணுறன் என்ரை வெப்சைற்றிலும் பேஸ் புக்கிலும் போட...என்று சொல்லிமுடிக்குமுன் உலகண்ணை தன்ரை வெப்சைட்டுக்கு கோகிலா..டொட் கூ..கூ..என்று பெயர் வைக்கப்போறாவாம் என பெருமையாகச் சொன்னா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.

உந்தப் பேரை செலக்ற் பண்ணி தந்தது அகிலாதான் என்று ஜி.ஜி..கூகிள் கோகிலா சொல்ல..இற்ஸ் ஓ.கே. என்றா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.
கையில் செல்போனை திருகியபடி கூகிள் கோகிலா தொடர்ந்தா..

எல்லாம் சேர்த்து புத்தகமா றிலீஸ் பண்ணப்போறன் நீங்கள் எல்லோரும் வரவேணும்...
கொழும்பிலை வெள்ளவத்தை யாழ்ப்பாணத்திலை சூரவத்தை.....
ஆட்டிலறி அன்னம்மா சிரித்துக்கொண்டு சொன்னா.. சூரவத்தையில்லை சூராவத்தை...ஓ.கே. அன்னம்மா அன்ரி
மற்றது...பம்பலப்பிட்டி - அல்லைப்பிட்டி, கொழும்பு கோட்டை - ஆனைக்கோட்டை.
உலகர் சிரித்துக்கொண்டு சொன்னார்.

யாழ்ப்பாணத்திலை: கொக்குவில் கோண்டாவில் இணுவில் நந்தாவில் உடுவில் கனடாவிலை ஒக்வில், ஒறேஞ்வில், ஸ்ரோவில், பெல்வில், பெலோவில், ஹன்ஸ்வில், கால்ரன் எண்டு கனக்க கிடக்கு அவற்றையும் கலந்து எழுதுங்கோ என்று சொல்லிவிட்டு.



விநாயகர் சதுர்த்திக்கு ரூபியும் ராசம்மாவும் அவித்த பொரித்த சக்கரை குறைந்த மோதகத்தை சுவைத்துக் கொண்டிருந்தார்.



இன்று உலகளாவிய ரீதியிலுள்ள அரச மாளிகைகள் படும்பாடு நிமிடத்துக்கு நிமிடம் வரும் பிறேக்கிங் நியூஸ் பார்த்தால்தான் தெரியும்.

யானை விலை குதிரை விலையென கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் யானையின் விலையோ.. குதிரையின் விலையோ தெரியாது...



தலதா மாளிகை - கண்டியில் உள்ள தலதா மாளிகை பௌத்தர்களின் புனித ஆலயம்.
புத்தரில் பல் இருப்பதே தலதா மாளிகையின் சிறப்பு. 2017இல் தலதா மாளிகைக்காக 26 கோடி ரூபாய்க்கு யானையை மியன்மாரிலிருந்து விலைக்கு வாங்கிய தில்லுமுல்லு கணக்குவழக்கு சிக்கலில் உள்ளது. 26 கோடிக்கு யானை வாங்கிய கேடி யார்? யானை

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஊழலில்லாத ஆட்சி அமைக்கப்போவதாக மைத்திரிபால சிறிசேன அறிக்கை விட்டிருக்கிறார்
(சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லை)

அன்றும் இன்றும் என்றும் இங்கு பிரச்சினை தான் வெள்ளை மாளிகை.



உலகில் எந்த நாட்டு மக்கள் வாழவேண்டும் வாழக்கூடாது என்பதை தீர்மானிக்கும் ஒரு மாளிகை. இதில் வாழ்ந்த ஜனாதிபதிகள் சிலர் அந்தநாட்டு மக்களாலேயே கொல்லப்பட்டனர்.

அவர்கள் பண வரவு செலவில் துண்டு விழுகிறதோ இல்லையோ..அமெரிக்காவின் போர் விமானங்கள் உலகின் ஏதோ ஒரு மூலையில் குண்டு விழுத்திக் கொண்டேயிருக்கின்றன....



வெள்ளை மாளிகைக்கு எதிராக பல நாடுகளில் கறுப்புக் கொடிதான்.


செப்ரெம்பர் 15..30

19. கொடுமுடி கோகுலம் என அழைக்கப்படும் இசைப்பேரறிஞர் கே.பி. சுந்தராம்பாள் நினைவு தினம். (ஒக்ரோபர் 10-1908 _ செப்ரெம்பர் 19-1980)

21. சர்வதேச உலகஅமைதி நாள்



22. 1898 இணுவிலில் பெண்களுக்கான (அமெரிக்க மிசன்) வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது.



22. இலையுதிர் காலம் ஆரம்பம்

24.நாட்டிய பேரொளி பத்மினி நினைவு தினம்

26. கவிமணி தேசிகவினாயகம்பிள்ளை நினைவு தினம்



26.லெப்டினன் கேனல் தியாகி திலீபன் நினைவுதினம் (1987)

27. லூயி பாஸ்டர் (1895) நினைவுதினம்

28.பிரபல நகைச்சுவை நடிகர் (மன்னாரம் கொம்பனி மனேஜர்) கே.ஏ. தங்கவேலு நினைவுதினம் (1994)



29. புரட்டாதிச்சனி

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
GR 9- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

# SHIRIDI SAI SCHOOL OF CANADA

**2701 MARKHAM ROAD, SCARBOROUGH**

**ADMISSIONS ARE OPEN YEAR AROUND** FROM

**J/S KINDERGARTEN TO GRADE 6**

**TO REGISTER YOUR INTEREST PLEASE CALL**

## (416) 298 - 3030






410 Sq/Ft, Right In The Middle Of The Food Court & Beside The Escalator Leading To The 2nd Floor. Near Many Anchor Stores Such As Tim Horton's, Walmart, LCBO, Shoppers Drugmart, Freshco., Royal Bank, TD Bank, Scotia Bank, CIBC, TTC Bus Terminal, Highways And Much More.

**All Chattels And Inventory Of Over 200K Included In Price.**

# FOR SALE

## Established Turn Key Business Opportunity

*Be Your Own Boss!*

Own Two Retail Units In

*The Shops Of Westwood Square.*



**Pravisha Nagaretnam**
Sales Representative

d: 416.727.7686
o: 416.987.8000
f: 416.987.8001
pravisha@teampravisha.com
teampravisha.com

RE/MAX PREMIER INC

9100 Jane St.,Bldg L, #77
Vaughan Ont. L4K 0A4

# OPEN HOUSE

## Every Sat & Sun until Oct 31, 2018 11AM to 5 PM

## $50,000 DEPOSIT OVER 21 MONTHS

**To sell 50 Feet Detached Homes in the Village Of Dundalk. 1 Hour North of Brampton and only 11 lots left at incredible prices.**



Weeping Willows Plan, 40' lot, 1700 Sq ft. Corner, **$479,900** Occupancy Sept 2018.



White Pine Plan , 50' Lot, 1600 Sq ft. **$525,900** Occupancy Dec 2020



Douglas Fir Plan. 50' Lot, 2210 Sq ft. **$589,900** 2410 Sq ft. **$614,900** (5 Bedrooms)



Red Maple Plan, 50' Lot, 2650 sq ft.. **$649.900.** 2850 sq ft. **$674,900** (5 Bedrooms)



Black Cottonwood Bungalow. 50' Lot, 1570 sq ft. **$529,900**



Gold Cottonwood Bungalow loft. 50' Lot, 2084 sq ft. **$579,900**

**Why should you invest or own your Detached Homes in Village of Dundalk?**

(1)Only 1 Hour North of Brampton and 40 Minutes North of Orangeville.

(2)Average Detached Home Prices as of June 2018 are as follows...

Brampton $814,711. Caledon $925,355. GTA $1,033,574. You are saving **$100,000 to $500,000 depending on the size and style.**

**SALES OFFICE : SHELBURNE**

**TIME: SAT /SUN 11AM TO 5PM WEEKDAYS : BY APPOINTMENT ONLY**

**SITE: 1 HOUR NORTH OF BRAMPTOM**

Brought to you by:

Vivek Dani, Salesperson
Dir: 416-627-4721
Email : vivek.dani@outlook.com

Deepak Dani, Broker
Dir: 416-930-9733
Email : deepakvdani@gmail.com



HomeLife/GTA Realty Inc., Brokerage.
Off: 416-321-6969.

www.newcondoreleases.com

Disclaimer: Not intended to solicit Buyers and Sellers under Agency Representation. Prices and Terms are subject to change and E & O E. All information is reliable but not guaranteed and returns can change based on the Market Conditions and trends.

Deepak Dani, Broker

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

**Refinance** **Purchase** **Renewal**

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for*
*1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*

1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*









**Pradeepraj Mani**
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com

*Some conditions apply

MORTGAGE ALLIANCE


**Gaya Kathir**
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca


வீடு வாடகைக்கு பெற்றிட...
Mega Financial Group
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416.670.7436
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
Buy / Sell / Lease
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


Homesby Natheesh
BUY SELL/ RENT/ INVEST with Homes by Natheesh
www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca
FREE Home Evaluation
FREE Home Staging
FREE Virtual Tour
For all your Real Estate needs...
Natheesh Parameshvaran
647.545.8462
SALES REPRESENTATIVE


வீடு என்பது நமது கனவு
The Realtor for your Dream House
BUY...
SELL...
LEASE...
INVEST...
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc.



ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
LIC# 10530
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


கனடிய குடிவரவு விண்ணப்பங்களும் சட்டரீதியான விசா ஏற்பாடுகளும்
CANADA MIGRATION PILOT
STUDY - WORK- SETTLE IN CANADA
Visit/Tourist Visa
Super Visa
Student Visa
Family Sponsor/Spouse Visa
Express Entry
Citizenship Appilication / PR Renewal
Parents/ Family Permanent Resident Visa
Saaruban Sivaratnam
6477178226
SCARBOROUGH,ONTARIO


வீடு, நிலம், வர்த்தகநிலையங்கள்
வாங்க, விற்க, வாடகைக்கு விட அழையுங்கள்...
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8
Bus: 905.201.9977
*Independently Owned & Operated


BUY & SELL
WITH CONFIDENCE
FREE HOME EVALUATION
Free Home Staging, Professional Photography,
Floor Plan & Flexible Commission
THELEPAN
VIGNESWARAN
416-666-1401
www.thelepan.com
Homelife Galaxy Real Estate Ltd. Brokerage
Independently Owned & Operated


BUYING OR SELLING
வீடு வாங்க விற்க...
Indra Michael Xavier
Sales Representative
Direct: 647-995-6829
Indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr. Unit 205 Markham ON. L3S 4N8
Tel: 905.201.9977
Fax: 905.201.9229


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
TEAM TITANS
Residential / Commercial
Purchase
Sale
Investment
Leasing


Life Insurance
Non Medical
Super Visa
RESP
வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Realtor/Financial Advisor
Cell: 416.716.1540
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


HOMES & CONDOS FOR SALE
Staines & South Of Steeles
Detached 2 Storey
Detached 2 Storey
Detached 2-Storey
4060 Lawrence Ave -Toronto
16336 Highway 48 Rd - Stouffville
3558 Regional Rd 57 Rd - Scugog ON.
2 Bed Rm. Condo
Detached Bungalow
Detached Bungalow-Raised
1st & 2nd Mortgages available upto 1Million
A.ANTON JEEVA
Broker
Dir: 416.575.5055
RE/MAX
Dynasty Realty Inc. Brokerage*
Tel: 905.471.0002


BALACHANDRAN LAW
LITIGATION
எங்களுடன் தமிழிலும் தொடர்பு கொள்ளலாம்
AGHI BALACHANDRAN
Web: www.balalaw.ca
E-mail: aghi@balalaw.ca
East Office: 3852 Finch Avenue East, Suite#302, Scarborough ON, M1T 3T9
West Office: 151 City Centre Drive, Suite 201, Mississauga, ON, L5B 1M7
Tel: 647-466-2444
Fax: 647-494-5474
Bail Hearings | Appeals | Traffic Tickets | Criminal Police | Theft and Shoplifting | Fraud | Drinking & Driving Offences | Sexual Assault Offences | Homicide